**ம.க.கு.ந.க.எண்.அ8/60/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.01/2015 **பொருள் எண்.01**

**மிகைச் சம்பளம் (Bonus) – சிறப்பு மிகை ஊதியம் –2013–2014ஆம் ஆண்டிற்கு வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணையை சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

அரசாணை எண்.9, நிதி (படிகள்) துறை, நாள் 08.01.2015ன்படி முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை 2013–2014ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், 2012–2013ஆம் ஆண்டு வரை ‘இ’ மற்றும் ‘ஈ’ தொகுதியைச் (C & D Group) சார்ந்த பணியாளர்களுக்கு, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக கணக்கிட்டு, உச்ச வரம்பினை ரூ.3,000/– என்பதாகக் கொண்டு, மிகை ஊதியத் தொகை வழங்கப்பட்டது. இதனை பின்பற்றி தற்போது முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அரசாணை எண்.9, நிதி (படிகள்) துறை, நாள் 08.01.2015ல் அறிவிக்கப்பட்டுள்ள மிகை சம்பளம் / சிறப்பு மிகை சம்பளத் தொகையை அனைத்து பணியாளர்கள் / அலுவலர்களுக்கும் உடனடியாக பெற்று வழங்குமாறு துறை தலைவர்கள் / மண்டல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ‘இ’ மற்றும் ‘ஈ’ தொகுதியைச் (C & D Group) சார்ந்த அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட்ட பணியாளர்கள் ஆகியோருக்கு 2013–2014ஆம் நிதியாண்டிற்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை மிகை ஊதியமாக வழங்கப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. மிகை ஊதியம் 31.03.2014ஆம் நாளன்றுள்ளவாறான ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என்பதை உச்சவரம்பாகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் / திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3,000/– என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும். இந்த உச்சவரம்பு திருத்திய சம்பள வீதங்களுக்கு முந்தைய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் அல்லது திருத்திய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் இவற்றில் எந்த ஊதியமாக இருப்பினும் இரண்டிற்குமே பொருந்தும்.

பல்கலைகழக மானியக்குழு அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு சம்பள விகிதம் அனைத்திந்திய பணி விதிமுறைகள் ஆகியவற்றின்கீழ் வருகின்றவர்கள் உட்பட ‘அ’ மற்றும் ‘ஆ’ தொகுதியைச் (A & B Group) சார்ந்த பணியாளர்கள் மிகை ஊதியம் பெற தகுதியில்லாத காரணத்தினால், இந்த ஆண்டும் சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1,000/–ம் மட்டும் வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்பட்டுள்ளது.

2013–2014ஆம் ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றிய முழுநேர மற்றும் பகுதி நேரப்பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம் / சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (Anganwadi Workers), குறு அங்கன்வாடி பணியாளர்கள் (Mini Anganwadi Workers), கிராம உதவியாளர்கள் (Village Assistants), ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணிபுரிந்து வரும் சிறப்பு கால முறை ஊதிய விகிதத்தில் (Special time Scale of Pay) உள்ள பஞ்சாயத்து உதவியாளர்கள்,

(Panchayat Assistants) ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தற்காலிக உதவியாளர்கள், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு மிகை ஊதியம் ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) அனுமதிக்கத்தக்கதாகும்.

மாநில அரசில் இருந்து நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றில் அயற்பணியில் பணியாற்றி வருபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து மிகை ஊதியம் / பரிவுத்தொகை பெறாமல் இருந்தால் அவர்கள் இந்த மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் ''முதல், இரண்டு மூன்று மற்றும் நான்காம் நிலை'' பணியாளர்களுக்கும் அரசு அறிவித்த மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தினால் சென்னை மாநகராட்சியில் 2014–2015ஆம் நிதியாண்டில் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.6.00 கோடி (ரூபாய் ஆறு கோடி மட்டும்) ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்கண்ட அரசாணை எண்.9, நிதி (படிகள்) துறை, நாள் 08.01.2015ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.01/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>தி.க.மே.து.ந.க.எண்.எ3/377/2001</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின்31–12–2014 நாளிட்ட குறித்து</u>**

தீர்மான எண்.02/2015 **பொருள் எண்.02**

**<u>சென்னை மாநகராட்சி–திடக்கழிவு மேலாண்மை துறை–ஒரு நேர துப்புரவு பணி–ஒரு நேர துப்புரவு பணியினை ஒரு மண்டலத்தில் செயலாக்க 2001 காலக்கட்டத்தில் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது–பின்னர் இதை அனைத்து மண்டலங்களிலும் செயலாக்க மன்றத்தின் அனுமதி 2003ஆம் ஆண்டில் பெறப்பட்டது–இந்த ஒரு நேர துப்புரவு பணியினை தற்போது மாற்றிஅமைக்கப்பட்ட அனைத்து மண்டலங்களிலும் செயலாக்குவதற்கு அனுமதி</u>**

25.04.2001 நாளிட்ட மன்றத்திற்கான முன்மொழிவில் (1) தற்போது நடைமுறையில் உள்ள இரு நேர துப்புரவு பணியினை ஒரு நேர துப்புரவு பணியாக முற்பகல் 6.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாற்றி இடையில் ஒரு 1/2 மணி நேரம் (10.30 முதல் 11 மணி வரை) தேனீர் இடைவேளை அளித்து செயல்படுத்தவும் (2) அவ்வாறு செயல்படுத்தும்போது ஒவ்வொரு பகுதிக்கும் (Units) 10 விழுக்காடுக்கு மிகாமல் மாலை சிறப்புப்படை (afternoon Special force) ஒன்று அமைக்கவும்,{பிற்பகல் 1.30 மணிமுதல் 7.30 மணி வரை ஒரு துப்புரவு மேஸ்திரி(ஒவ்வொரு பகுதிக்கும்) மேற்பார்வையில் ஒன்று அல்லது இரண்டு சிறிய வாகனத்துடன்}, (3) தற்போதுள்ள இரவு துப்புரவு பணியினை தொடர்ந்து செயலாக்கவும் (4) சோதனை அடிப்படையில் 3 அல்லது 9 வது மண்டலத்தை தேர்வு செய்து ஒரு நேர துப்புரவு பணியினை செயலாக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(சுகாதாரம் மற்றும் குடும்பநலம்) மூலமாக சமர்ப்பிக்கப்பட்டதில், நிலைக்குழு(சுகாதாரம் மற்றும் குடும்பநலம்), தீர்மானம் எண்.23/நாள்.13.07.2001ல் ‘‘இனம்–(4)’’ பரிட்சார்த்தமாக மண்டலம்–7ல் நடைமுறைபடுத்தப்படலாம் என்ற திருத்தத்துடன் நிலைக்குழு (சு.ம.கு.ந) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’ என்ற தீர்மானத்துடன் மன்றத்திற்கு சமர்ப்பித்தது. மன்றம் இதற்கு தீர்மானம் எண்.398/2001, நாள்.20.07.2001ல் அனுமதி வழங்கியது.

அதன் பிறகு, 2003ஆம் ஆண்டில், மன்றத்தீர்மானம் எண்.497/2003, நாள்.27.08.2003ல், ஏற்கனவே துப்புரவு பணியினை தனியார் மயமாக்கப்பட்ட 6, 8 மற்றும் 10வது மண்டலம் தவிர அனைத்து மண்டலங்களுக்கும் விரிவாக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

எனினும், நடைமுறை சிக்கல்கள் காரணமாக துப்புரவு பணி இரு நேர துப்புரவு பணியாகவே பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது இவ்வாறு இருக்க, சென்னை மாநகராட்சி அண்ணா பொது பணியாளர்கள் சங்கம் மற்றும் எஸ்.ஸி/எஸ்.டி சங்கம் ஆகியவர்கள் ஒரு நேர துப்புரவு பணியினை அமலாக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது, தற்போது ஒரு நேர துப்புரவு பணி சோதனை அடிப்படையில் நடைபெறும் மண்டலம் 8ன் மண்டல அலுவலரிடமிருந்து துப்புரவு பணியினை ஒரு நேர துப்புரவு பணியாக செயலாக்குவதன் சாதக பாதகங்கள் பற்றி கருத்துரு கேட்கப்பட்டதில் அவர் கீழ்வருமாறு மின்அஞ்சல் அனுப்பியுள்ளார்.

**பயன்கள் :**

1. வேலை நேரம் கூடுதலாக பணி செய்ய முடியும். அதாவது 6.30 முதல் 10.30க்கு பதிலாக 6.30 முதல் 1.30 வரை பெருக்குபவரும் 6.30 முதல் 1.30 வரை மிதி வண்டி ஓட்டுபவரும் முழுமையாக பணி செய்ய முடியும்.
2. பணியாளர்களின் அலைச்சல் மிஞ்சுகிறது. (இல்லையெனில் காலையில் ஒரு முறை செல்ல வேண்டும். திரும்ப கோட்டத்திற்கு வரவேண்டும். மீண்டும் கோட்டத்திலிருந்து பணி செய்ய வேண்டிய பகுதிக்கு மறுபடியும் மதியம் ஒரு முறை செல்ல வேண்டும்).
3. காலையில் 6.30 மணிக்கு பணிக்கு வருபவர்கள், 10.30 மணி வரை வேலை செய்து விட்டு இங்கேயே காத்திருந்து 2.30 மணி முதல் 5.00 மணிவரை வேலை செய்து விட்டு செல்வதற்கு பதிலாக ஒரு நேர பணியால் இடைப்பட்ட காத்திருக்கும் நேரம் தவிர்க்கப்படுகிறது.

4. காத்திருக்க போதுமான இடவசதி இல்லாமல் கஷ்டப்பட வேண்டியுள்ளது. இது தவிர்க்கப்படுகிறது.
5. மதியத்திற்கு மேல் வீட்டிற்கு சென்று ஓய்வெடுப்பதால் மறுநாள் நன்றாக வேலை செய்ய முடிகிறது.
6. துப்புரவு ஆய்வாளர் மற்றும் சூப்பர்வைசர்களுக்கும் காலையில் களப்பணி சென்றுவிட்டு மதியம் அலுவலக பணி பார்க்க ஏதுவாக உள்ளது.

**பாதகங்கள் :**

1. காலை மற்றும் மாலையில் முழுமையாக வேலை வாங்க முடிவதில்லை.
2. காலையில் வரும்பொழுது பணியாளர்களை காலையில் மட்டும் பணி வாங்க முடியும். (லாரி காலையில் வரவில்லையெனில், காலைக்கு பதில் மாலை வரவேண்டும் என்றால் ஏன் வரவேண்டும் என்று வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர் (அல்லது) மாற்று பணி கேட்கிறார்கள்)
3. அவசர காரணத்தினால், மதிய வேளையில் எந்த பணியும் செய்ய முடிவதில்லை. அரசு விழாக்கள் , அவசர நிமித்தம் செய்ய வேண்டிய பணிகள், உயர் அதிகாரிகளின் புகார் ஏதும் உடனுக்குடன் செய்ய முடிவதில்லை.
4. பெருக்குபவர்கள், தொடர்ச்சியாக யாரும் பணி செய்வதில்லை. 2 மணிநேரம் (அ) 2.30 மணி நேரம் தான் வேலை செய்கின்றார்கள். பிற்பகல் வரும் குப்பை மறுநாள்தான் எடுக்க முடியும்.
5. ஒதுக்கப்பட்ட தூய்மை பணி முழுமையாக செய்ய முடிவதில்லை (காலை 7.00 மணி முதல் 10.30 மணி நேரம் முடிந்தவுடன் பணியாளர்கள் சென்று விடுவார்கள்).

இது குறித்து இங்கு சமர்ப்பிப்பதாவது, ஏற்கனவே, ஒரு நேர துப்புரவு பணியினை செயலாக்க மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றுவதில் நடைமுறை சிக்கல்கள் சில இருக்கலாம். ஆயினும் அந்த சிக்கல்களுக்கு தீர்வு காணவேண்டும். முக்கியமான பாதகமாக கூறப்படுவதாவது, மாலைநேரத்தில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவது கடினமாகும் என்பதாகும். ஏற்கனவே, மன்றத்தீர்மானத்தில் ஒரு சிறப்பு படையினை வைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் அந்த சிறப்புப்படையினை புகார்கள் வரும் பகுதிகளில் இருக்கும் குப்பையினை அகற்ற பயன்படுத்தலாம். மேலும், துப்புரவு பணி ஒரு நேரமாக செயல்படுத்தப்படும் போது பெருமளவில் குப்பைகள் அகற்றப்பட வாய்புள்ளது. மேலும், இந்த சிறப்பு படையினை மாலை நேரத்தில் அதிக அளவில் குப்பை சேகரமாகும் பகுதிகளில் இருந்து அகற்றவும் பயன்படுத்தலாம். மேலும் நடைமுறையில் இருக்கும் இரவு நேர துப்புரவு பணியினையும் தொடர்ந்து செயலாக்கலாம்.

மண்டல அலுவலர்கள், சிறப்பு துப்புரவுபடை (Reserved Force)யில் உள்ள துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை அவசரகாலத்தில் துப்புரவு பணியினை நிறைவேற்ற போதுமானதாக இல்லை என்று கருதினால், அவர்கள், தனியார் நிறுவனங்களிடமிருந்து தருவிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களையும் மற்றும் சுவர்ண ஜெயந்தி திட்டத்தின் மூலம் தருவிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களையும் அவசரகால துப்புரவு பணியினை செயலாக்க பயன்படுத்த ஒரு செயல் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி அளிக்கும் போது மத்திய அரசு வெளியிட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை கையேட்டில் சொல்லப்பட்டுள்ள அளவுகோல்களின் படி பணி ஒதுக்கீடுகள் அளிக்கப்பட வேண்டும்.

ஒரு நேர துப்புரவு பணியினை முழுமையாக செயலாக்க தீர்மானிக்கும் போது, இதனை துப்புரவு பணி தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்கள் தவிர ஏனைய மண்டலங்களில், விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியின் பகுதிகள் உட்பட, அதனை செயலாக்க மன்றத்தின் திருத்திய தீர்மானம் அவசியமாகும்.

எனவே, சென்னை மாநகராட்சியில்,

(1) இரு நேர துப்புரவு பணியினை ஒரு நேர துப்புரவு பணியாக முற்பகல் 6.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாற்றி இடையில் ஒரு 1/2 மணி நேரம் (10.30 முதல் 11 மணி வரை) தேனீர் இடைவேளை அளித்து, துப்புரவு பணி தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்கள் தவிர்த்து, அனைத்து மண்டலங்களிலும் செயல்படுத்தவும்,

(2) அவ்வாறு செயல்படுத்தும் போது ஒவ்வொரு பகுதிக்கும் (Units) 10 விழுக்காடுக்கு மிகாமல் மாலை சிறப்புப்படை (Reserve Force) ஒன்று அமைக்கவும்{பிற்பகல் 1.30 மணிமுதல் 7.30 மணி வரை ஒரு துப்புரவு மேஸ்திரி (ஒவ்வொரு பகுதிக்கும்) மேற்பார்வையில் ஒன்று அல்லது இரண்டு சிறிய வாகனத்துடன்}

(3) தற்போதுள்ள இரவு துப்புரவு பணியினை தொடர்ந்து செயலாக்கவும்

(4) CI and Team for artirial roads,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.03/15 நாள்.20.01.2015—ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.04/2015, நாள்.23.01.2015—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>இ.டி.பி.சி.எண்.சி1/3721/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 31.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.03/2015 **பொருள் எண்.03**

**<u>சென்னை மாநகராட்சி – இடிபி செல் – இ – மாவட்ட திட்டம் (சென்னை) – சங்கத்தின் தலைவர் பதவியை மாற்றம் செய்வது குறித்து – அனுமதி</u>**

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மின்னணுமயமாக்கி அத்திட்டங்களின் செயல்பாடுகளையும் பயன்களையும் உடனுக்குடன் மக்களுக்கு கிடைக்கச் செய்வது அரசின் நோக்கமாகும். இதற்காகவே அனைத்து அரசு அலுவலகங்களையும் கணிணிமயமாக்கி அத்திட்டங்களின் செயல்பாடுகள், அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து இனங்களையும் எளிதில் செலுத்திடவும், அரசின் பயன்களை வெளிப்படையாகவும், திறம்படவும், நம்பகத்தன்மையுடனும் ஒரே இடத்தில் பெற்றிடவும் இந்த மின்னணு செயல் திட்டம் உதவுகிறது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராக கொண்டு மற்ற துறை தலைவர்களை உறுப்பினர்களாக கொண்டு சென்னை மாவட்ட மின்ஆளுமை சங்கத்தில் உருவாக்கப்பட்டது.

தற்போது கீழ்காணும் நான்கு துறைகள் தொடர்பான சேவைகள் கணினி வழியாக வழங்கப்பட்டு வருகிறது.

1. வருவாய் த்துறை,
2. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் துறை
3. ஆதி திராவிடர் மற்றும் சீர் மரபினர் துறை
4. சமூக நலத்துறை

மேலும் பல துறைகளின் சேவைகளும் கணிணி வழியாக வழங்கப்பட கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் சிறிது காலத்தில் 54 சேவைகள் மின் கணினி மூலம் வழங்கப்பட உள்ளதால் பல்வேறு அரசு துறைகளில் மின்னணு திட்டத்தினை செயல்படுத்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சேவைகள் அனைத்தும் மக்களுக்கு சென்றடையும் இடம் தான் மக்கள் சேவை மையம் . மக்கள் சேவை மையத்தில் உள்ள சேவையாளரை அணுகினால், அவரே விண்ணப்பங்களை பதிவு செய்து சான்றுகள் வழங்கும் அலுவலருக்கு நேராக அனுப்பி வைப்பார். இவ்வாறு அந்த விண்ணப்பமானது பரிசீலிக்கப்பட்டு , தேவையான சான்றிதழ்கள் மின் கணினி மூலமாகவே மக்கள் சேவை மையத்திலேயே வழங்கப்படும். மாவட்டத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய மின்னணு திட்ட செயல்பாட்டினை வகுத்து, வடிவமைத்து, திட்டமிட்டு, வழிநடத்துவது இந்த மாவட்ட மின் ஆளுமைச் சங்கத்தின் கடமையாகும்.

இதற்காக அரசு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த 22 அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட மின் ஆளுமைச் சங்கத்தை உருவாக்கிட ஆணை வெளியிட்டுள்ளது. இந்த சங்க உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

பின்பு தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்ஆளுமை ஏஜென்ஸி அவர்கள் தலைவர் பதவியை திருத்தி அமைத்திடுமாறு கோரியதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களை தலைவராகவும் ஆட்சியர் அவர்களை துணை தலைவராகவும் சென்னை மாவட்டத்திற்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இந்த சங்கத்தின் கூட்டம், தலைமை செயலகத்தில் அரசு செயலாளர், தொழில் நுட்பத் துறை அவர்கள் தலைமையில் 25.06.2014 அன்று 3.00 மணியளவில் நடைபெற்று இனி வரும் காலங்களில் அனைத்துக் மாவட்ட மின் ஆளுமைச் சங்கத்தின் கூட்டங்களும் சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் நடைபெற வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

எனவே,

1. சென்னை மாவட்ட மின் ஆளுமைச் சங்கத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஆணையில் உள்ளவாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களை தலைவராக திருத்தம் செய்யப்பட்டதை நடைமுறைபடுத்தவும்,
2. இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.01/15 நாள்.20.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.03/2015, நாள்.23.01.2015–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ப.து.சி.தி.ந.க.எண்.பி1/3511/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29–12–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.04/2015 **பொருள் எண்.04**

**சிறப்பு திட்டங்கள் துறை – மதிப்பீடு – 2014–2015ம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–13, வார்டு எண்.181 –ல் உள்ள ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை, மாளவிக்கா அவென்யூ சந்திப்பில் சாலையை வலிமைபடுத்தி தார்சாலை அமைக்கும் பணிக்கு – 2014–2015ம் ஆண்டின்அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீட்டிற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்

| வ. எண் | மண்டலம் /வார்டு எண் | பணி / சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் மீ. | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | 13<br>------<br>181 | ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை, மாளவிக்கா அவென்யூ சந்திப்பு | தார்சாலை அமைக்கும் பணி | 1025 | 6662 | 10380000 |

02 பரிந்துரை செய்தவரின் விவரம் : மேற்பார்வைபொறியாளர் /சிறப்பு திட்டங்கள்
03 எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : சிறப்பு திட்டங்கள் துறை
04 சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி : ஆம், அளிக்கப்பட்டது
05 தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் : தலைமைப் பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) எண்: பின்னர் பெறப்படும்
06 மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து : 2014 – 2015
07 மதிப்பீட்டின் தொகை :
(அ) பணி செலவினம் மட்டும் : ரூ. 89,49,802.00
(ஆ) மேலான செலவீனம் மட்டும் : ரூ. 8,94,980.20
(இ) சிறு மேற்பார்வை செலவு : ரூ. 2,23,745.05
(ஈ) மற்றைய எதிர்பாரா செலவு : ரூ. 2,21,974.73
(உ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை : ரூ. 89,498.02
------------
மொத்தம் ரூ.1,03,80,000.00
------------
08 ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு : ரூ.1558.09 / ச.மீ
09 ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது : புதிய பணி
10 மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள் : வார்டு குழுவின் தீர்மானம் பின்னர் பெறப்படும்.
11 வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? : ஆம்
12 நிதியின் மூலத்தன்மை : மூலதன நிதி
13 இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி : 103.80 இலட்சங்கள்

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக **2014–2015**ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.**1,03,80,000**/–க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி **1919**ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி**78**(பி)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**20.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**02/15**, நாள்.**20.01.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**23.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**09/2015**, நாள்.**23.01.2015**–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ப.து.சி.தி.ந.க.எண். பி1/3451/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29–12–14 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.05/2015 **பொருள் எண்.05**

**<u>சிறப்பு திட்டங்கள் துறை – மதிப்பீடு – 2014–2015ம் ஆண்டிற்கான பணி – மண்டலம்–13, வார்டு எண்.181ல் உள்ள ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை, மாளவிக்கா அவென்யூ 3வது தெருவில் நடைபாதை அமைக்கும் பணிக்கு – 2014–2015ம் ஆண்டின்அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடு ரூ.1,51,99,000/– மன்றத்தின் அனுமதி</u>**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்

| வ. எண் | மண்டலம் / வார்டு எண் | பணி / சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் மீ. | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | 13<br>------<br>181 | ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை, மாளவிக்கா அவென்யூ 3வது தெரு | நடைபாதை அமைக்கும் பணி | 1025 | 2563 | 1,51,99,000 |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மேற்பார்வைபொறியாளர் /சிறப்பு திட்டங்கள் |
| 03 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | சிறப்பு திட்டங்கள் துறை |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம், அளிக்கப்பட்டது |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் நாள் | : | தலைமைப் பொறியாளர் (சிறப்பு திட்டங்கள்) எண்: பின்னர் பெறப்படும் |
| 06 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து | : | 2014 – 2015 |
| 07 | மதிப்பீட்டின் தொகை : | | |
| | (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.1,08,53,322.92 |
| | (ஆ) மேலான செலவீனம் மட்டும் | : | ரூ. 10,85,332.29 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 2,71,333.07 |
| | (ஈ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 2,71,945.26 |
| | (உ) தரக்கட்டுப்பாடு செலவு | : | ரூ. 1,08,533.23 |
| | (ஊ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை | : | ரூ. 1,08,533.23 |
| | (எ) சர்வீஸ் லைன் மாற்றும் செலவு | | <u>ரூ. 25,00,000.00</u> |
| | மொத்தம் | : | <u>ரூ. 1,51,99,000.00</u> |
| 08 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ. 5930.15 / ச.மீ |
| 09 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 10 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள் | : | வார்டு குழுவின் தீர்மானம் பின்னர் பெறப்படும். |
| 11 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 12 | நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| 13 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | 151.99 இலட்சங்கள் |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக 2014–2015ம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,51,99,000/–க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.04/15, நாள்.20.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.06/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1898/2009</u>**
**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 29.12.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.06/2015 **பொருள் எண்.06**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி சிப்பம்–3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 24 மாதங்கள், அதாவது 03.01.2013ற்குள் வரையாகும்.

சிப்பம்–3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு செப்டம்பர்' 2014 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாடு செய்வதற்கு 31.03.2014 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

மன்ற தீர்மனத்தின்படி, சிப்பம்–3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, சில இடர்பாடுகளின் காரணமாக மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு 30.09.2014 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் கடிதத்தில், சிப்பம்–3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணியிடங்களில் நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்பு பணிக்கு கால நீட்டிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும், மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு மார்ச்' 2015 வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்பு பணிகளுக்கு மார்ச்' 2015 வரை காலநீட்டிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 01.10.2014 முதல் 31.03.2015 வரை பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம்–3 மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு **01.10.2014** முதல் **31.03.2015** வரை பணி கால நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "**20.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.**02/15** நாள்.**20.01.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "**23.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**07/2015**, நாள்.**23.01.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.14.ந.க.எண்.இ1/721/2012**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.07/2015 **பொருள் எண்.07**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் –14 – சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் – phase-I சிப்பம் 1 மற்றும் 2 – பல்வேறு காரணங்களினால் பணி முடிக்க தாமதம் – பின்னேற்பு அனுமதி**

சென்னை பெருநகரை மேம்படுத்த வேண்டி சிறப்பு திட்டமாக சென்னை பெருநகர அபிவிருத்தி திட்டம் எனும் முன்னோடி திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியுடன் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலை, மழை நீர்வடிகால்வாய், தெருவிளக்கு, சேவைத்துறையின் வடங்கள் கொண்டு செல்வதற்கான டக்ட் போன்ற பணிகளுக்காக நிதி ஒதுக்கி அனுமதி அளிக்கப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்–14ல் 37 சாலைகளுக்கான பணிகளை மேற்கொள்ள மூன்று சிப்பங்களாக பிரித்து ஒப்பம் கோரி உரிய அனைத்து நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு, மன்றத் தீர்மானங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டவாறு ஒப்பம் தீர்வு செய்து பணி மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | சாலைகளின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பம் தீர்வு செய்யப்பட்ட தொகை கோடியில் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 183 | 15 | திருவாளர்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | 11.93 |
| 2 | 2 | 184 & 186 | 8 | திருவாளர்.குருமூர்த்தி இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | 16.05 |
| 3 | 3 | 188 | 14 | திருவாளர்.ஆர்.கே அண்டு சன்ஸ் | 6.32 |

சிப்பம்–1 மற்றும் 2 க்கான பணிகளை மேற்கொள்ள திருவாளர்.குருமூர்த்தி இன்ஜினியிரிங் எண்டர்பிரைஸஸ் அவர்களுக்கு 10.05.12 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு 10.05.2012 அன்று துவக்கப்பட்டுள்ளது. பணி ஆணையில் இப்பணியை ஆறு மாதத்திற்குள் முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இப்பணியை 10.05.2012 அன்று துவக்கி 20.09.2013 அன்று ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்டு' 2013ல் மண்டலம் – 14ல் நடைபெற்ற முதன்மை கணக்கு தணிக்கையாளர் (A.G Audit) அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையில், மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரால் பணிகளை தாமதமாக முடிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக இரண்டு சிப்பங்களுக்கும் சேர்த்து ஒப்ப விதி 27.2ன்படி ரூ.135.24 லட்சங்கள் அபராதமாக வசூலிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–14, நவம்பர்' 2011ல் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளாக இருந்து சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளாகும். பொது மக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்ட பணிகளை அவசரமாக முடிக்க வேண்டி சம்மந்தப்பட்ட சாலைகளை ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்ததாரரால் பணிகள் துவக்கி பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், ஒப்பந்ததாரரின் கடிதங்களின் வாயிலாக பணிகள் மேற்கொள்வதில் ஏற்பட இருந்த சிரமங்களை அதாவது குறுகிய சாலைகள், மேல்நிலை மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், மின்மாற்றிகள், தொலைபேசி கேபிள்கள் போன்றவை மழைநீர் வடிகால்வாய், நடைபாதை போன்ற பணிகளை மேற்கொள்வதில் இடையூறாக இருந்த விவரத்தை தெரிவித்துள்ளார்கள்.

அத்தருணத்தில் பருவமழை தீவிரமாகவும், அதிக அளவில் பெய்ததாலும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட காரணங்களில் ஒன்றாகும்.

இவை தவிர சென்னை பெருநகர குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தினால் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள், பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் போன்ற பணிகளாலும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி, நடைபாதை அமைக்கும் பணி, சாலை ஆகிய அனைத்து பணிகளிலும் இடையூறுகள் ஏற்பட்டு பணியை முடிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது.

மண்டலம் – 14, 2011ம் ஆண்டு இறுதியில் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பல்வேறு ஊராட்சி, நகராட்சிகளாக இருந்த பகுதி என்பதால், இப்பகுதியில் பல தெருக்களில்/சாலைகளில் ஆக்கிரமிப்புகள் இருந்தன. அவை அகற்றப்பட்டு அதன் பின்னர் நடைபாதை பணிகள் மேற்கொண்டதின் காரணமாகவும் தாமதம் ஏற்பட்டது.

மேற்குறிப்பிட்ட விவரங்கள் அனைத்தும் அவ்வப்போது ஒப்பந்ததாரரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளில் தாமதம் குறித்து 02.09.2013 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் நேரிடையாக விளக்கம் அளிக்கப்பட்டு அவ்விளக்கம் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 30.09.2013க்குள் பணியை முடிக்க அறிவுறுத்தப்பட்டது. 02.09.2013 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்ட நடவடிக்கை சுருக்கத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணிகளில் ஏற்பட்ட காலதாமதம் முற்றிலும் நடைமுறை சிக்கல்களினால் ஏற்பட்ட தாமதமே தவிர எவ்வித தவறுகளினாலோ அல்லது கவனக்குறைவாலோ ஏற்பட்டதல்ல என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான பட்டித் தொகை தீர்வு செய்யும்போது ஒப்பந்ததாரருக்கு எவ்வித கூடுதல் தொகைகள் ஏதும் வழங்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில், சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம்–Iல் சிப்பம்–1 மற்றும் 2க்கான பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவைவிட 10 மாதங்கள் மேற்குறிப்பிட்ட நடைமுறை காரணங்களினால் காலதாமதமாக முடித்தமைக்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் இப்பின்னேற்பு அனுமதியை கொண்டு, காலதாமத்திற்கான உயர்த்தப்பட்ட கட்டணம் (Escalation charges) கோரக்கூடாதென்ற நிபந்தனைக்குட்பட்டு இதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.08/15 நாள்.20.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.10/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.2.ந.க.எண்.இ1/3360/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 09/01/2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.08/2015 **பொருள் எண்.08**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 2 (மணலி) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid III) சிப்பம் –1ல் ஒப்பந்ததாரர். திருவாளர்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் அதே ஒப்பந்தகாரருக்கு பணி ஆணை அளிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம் – 2 (மணலி)ல் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–1ல், மதிப்பீடு தொகை ரூ. 17,51,25,167.42/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திருவாளர்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்கள், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+) 14.62% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+)8.50% ஒப்பத்தொகை ரூ. 19,00,10,806.65/–க்கு மன்ற தீர்மாணம் எண்.46/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில சாலைகளில் சாலையின் இருபுறமும் ஒழுங்குப்படுத்துதல் (Alignment) மற்றும் நேர் கோட்டில் சீர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் போது ஏற்பட்ட அளவு குறைவினால், சேமிப்பு தொகையாக ரூ.2,19,31,347.70 (ரூபாய் இரண்டு கோடியே பத்தொன்பது லட்சத்து முப்பத்து ஓராயிரத்து முன்னூற்று நாற்பத்தி ஏழு புள்ளி ஏழு பூஜ்ஜியம் மட்டும்) உள்ளது.

இந்நிலையில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள், வேண்டுதலின்படி, போக்குவரத்தின் நலன் கருதியும் சேமிப்பு தொகையிலிருந்து புதிதாக சாலைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது.

அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். மேலும் புதிதாக எடுக்கப்பட்டுள்ள சாலையின் பரப்பளவு ஒப்பீடு செய்யப்பட்டதில், அதன் பரப்பளவு 18777.50 ச.மீ ஆக உள்ளது. எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் இம்மாறுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்தாரர் **திருவாளர்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களின் சிப்பம் 2ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

கீழ்கண்ட சாலைகளில் சேமிப்பு தொகையில் பணிகளை மேற்கொள்வதற்கு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்ட எண் | புதியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் சாலைகளின் பெயர் | பரப்பளவு ச.மீ | தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 15 | மணலி புது நகர் நகர் 36வது தெரு | 560.00 | 4.86 |
| 2 | 15 | மணலி புது நகர் நகர் 37வது தெரு | 455.00 | 3.94 |
| 3 | 15 | மணலி புது நகர் நகர் 38வது தெரு | 560.00 | 4.86 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 15 | மணலி புது நகர் நகர் 44வது தெரு | 350.00 | 3.03 |
| 4 | 15 | மணலி புது நகர் நகர் 31வது தெரு | 560.00 | 4.86 |
| 5 | 15 | மணலி புது நகர் நகர் 12வது தெரு | 560.00 | 4.86 |
| 6 | 15 | மணலி புது நகர் நகர் 30வது தெரு | 455.00 | 3.94 |
| 7 | 15 | மணலி புது நகர் நகர் 29வது தெரு | 560.00 | 4.86 |
| 8 | 15 | மணலி புது நகர் நகர் 26வது தெரு | 990.00 | 15.15 |
| 9 | 15 | மணலி புது நகர் நகர் 53வது தெரு | 682.50 | 5.92 |
| 10 | 15 | மணலி புது நகர் நகர் 47வது தெரு | 857.50 | 7.44 |
| 11 | 15 | மணலி புது நகர் நகர் 48வது தெரு | 875.00 | 7.59 |
| 12 | 15 | மணலி புது நகர் நகர் 49வது தெரு | 875.00 | 7.59 |
| 13 | 15 | மணலி புது நகர் நகர் 51வது தெரு | 840.00 | 7.29 |
| 14 | 15 | விநாயகர் கோயில் தெரு | 665.00 | 5.77 |
| 15 | 15 | மணலி புது நகர் நகர் 1வது பிரதான சாலை | 2280.00 | 31.05 |
| 16 | 15 | மணலி புது நகர் நகர் 5வது தெரு | 577.50 | 5.00 |
| 17 | 15 | மணலி புது நகர் நகர் 6வது தெரு | 455.00 | 3.94 |
| 18 | 15 | மணலி புது நகர் நகர் 7வது தெரு | 577.50 | 5.00 |
| 19 | 15 | மணலி புது நகர் நகர் 4வது தெரு | 437.50 | 3.79 |
| 20 | 15 | மணலி புது நகர் நகர் 3வது தெரு | 175.00 | 1.50 |
| 21 | 15 | மணலி புது நகர் நகர் 34வது தெரு | 577.50 | 5.00 |
| 22 | 15 | மணலி புது நகர் நகர் 24வது தெரு | 875.00 | 15.95 |
| 23 | 16 | பர்மா நகர் | 787.50 | 14.59 |
| 24 | 16 | மணலி புது நகர் ஆர்.எல்.நகர் | 900.00 | 16.54 |
| 25 | 19 | சி.பி.சி.எல் (Phase –2) பிரதான சாலை | 1290.00 | 23.35 |
| | | மொத்தம் | 18777.50 | 217.670 |

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளியின்படி சாலைகள் அமைக்கவும், ஏற்கனவே, சிப்பம் 1ன் பணியை செய்து வந்த ஒப்பந்தாரரான **திருவாளர்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களுக்கு சிப்பம் 1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான **திருவாளர்.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியினை Project Sanction Committee யின் ஒப்புதல் பெற்று பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.09/15, நாள்.20.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.11/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.இ3/18718 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.09/2015 **பொருள் எண்.09**

**பணியமைப்பு – சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – வெளி மாவட்டத்திலிருந்து சென்னைப் பள்ளிகளுக்கு அலகு விட்டு அலகு மாறுதல் கோருதல் – சென்னைப்பள்ளிக்கு ஈர்த்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி**

தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி (ந.க.எண்.16900/டி1/2014 நாள்:17.08.2014) கீழ்க்காண் இடைநிலை ஆசிரியர் வெளி மாவட்டத்திலிருந்து சென்னைப்பள்ளிக்கு அலகு விட்டு அலகு மாறுதல் கோரி கடிதம் அளித்துள்ளார். தொடக்கக்கல்வி இயக்குநரின் தடையின்மை சான்று பெற்று சமர்ப்பித்துள்ளார்.

| வ.எண் | ஆசிரியர் பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் பள்ளியின் பெயர் மற்றும் மாவட்டம் | தடையின்மை சான்று பெற்ற விவரம் |
|---|---|---|---|
| 01. | திரு. சா.ஜவஹர், இடைநிலை ஆசிரியர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பி.சாந்தி நகர், சோழவரம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம். | தொடக்கக்கல்வி இயக்குநரின் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. |

மேலும், மாண்புமிகு மேயர் அவர்கள் தனது பட்ஜெட் உரையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் படித்த வேலையில்லா பட்டதாரிகளுக்கு UPSC, TNPSC Group-I போன்ற போட்டி தேர்வுக்காக இலவச பயிற்சி அளிக்கப்படும் என தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், போட்டி தேர்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கு பயிற்சி அளிக்க ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு அவருக்கு மாதம் ரூ.20,000/– ஊதியமாக வழங்கப்படுகிறது.

திரு. சா.ஜவஹர், B.Sc(maths)., B.Ed., இடைநிலை ஆசிரியர் இவரும் ஒரு ஒருங்கிணைப்பாளர் ஆவார் மற்றும் IAS Interview, TNPSC Group-1 Interviewல் கலந்து கொண்டவர் மற்றும் மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இவரை சென்னைப்பள்ளிகளில் ஈர்த்துக்கொள்வதால், சென்னை மாநகராட்சிக்கு போட்டி தேர்வுகளில் கலந்து கொள்பவர்களுக்கு ஒருங்கிணைப்பாளராக தனியாக ஊதியம் (Faculty Amount) தரவேண்டிய தேவையில்லை. இதனால், ஒருங்கிணைப்பாளருக்கு ஊதியமாக வழங்கப்படும் ரூ.20,000/– செலவீனம் குறையும்.

ஆகவே திரு.சா.ஜவஹர், இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பி.சாந்தி நகர், சோழவரம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம், அவர்களை அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் வெளிமாவட்டத்திலிருந்து சென்னை மாநகராட்சி பள்ளி பணிக்கு ஈர்த்துக் கொள்வதற்கும், அரசாணை பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.இ1/675/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.1.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.10/2015 **பொருள் எண்.10**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு கே. ஸ்ரீதரன், கண்காணிப்பு பொறியாளர் (க), கட்டடத்துறை, அவர்கள் வயது முதிர்வு காரணமாக வருகின்ற **28.02.2015** அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

இதுகுறித்து சமர்ப்பிப்பது யாதெனில், திரு. கே.ஸ்ரீதரன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் வரைவாளராக **13.09.1978** அன்று பணியில் சேர்ந்துள்ளார். **24.01.2014** முதல் கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று தற்போது கட்டடத்துறையில் பணிபுரிந்து வருகிறார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | மண்டலம்/ துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | வரைவாளர் | கட்டடத்துறை | 13.09.1978 | 12.05.1982 |
| 02 | நில அளவையாளர் | கட்டடத்துறை (DO South) | 13.05.1982 | 14.04.1984 |
| 03 | இளநிலை பொறியாளர் | மண்டலம் 9 | 15.04.1984 | 31.05.1987 |
| 04 | இளநிலை பொறியாளர் (DO North) | மண்டலம் 6 | 01.06.1987 | 17.10.1987 |
| 05 | உதவி பொறியாளர் | கட்டடத்துறை | 18.10.1987 | 03.05.1993 |
| 06 | உதவி பொறியாளர் | மண்டலம் 6 | 04.05.1993 | 22.03.1996 |
| 07 | உதவி பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 22.03.1996 | 27.12.1996 |
| 08 | உதவி பொறியாளர் | மண்டலம் 9 | 28.12.1996 | 05.08.1998 |
| 09 | உதவி பொறியாளர் | கட்டடத்துறை | 06.08.1998 | 03.06.1999 |
| 10 | உதவி பொறியாளர் | மண்டலம் 6 | 04.06.1999 | 27.02.2000 |
| 11 | உதவி செயற்பொறியாளர் | கட்டடத்துறை | 28.02.2000 | 13.07.2000 |
| 12 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம் 9 | 14.07.2000 | 23.10.2002 |
| 13 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம் 8 | 24.10.2002 | 25.09.2008 |
| 14 | உதவி செயற்பொறியாளர் | பாலங்கள் துறை | 26.09.2008 | 28.01.2011 |
| 15 | செயற்பொறியாளர் | மண்டலம் 9 | 28.01.2011 | 10.01.2013 |
| 16 | செயற்பொறியாளர் | பேருந்து சாலை துறை | 11.01.2013 | 13.06.2013 |
| 17 | மண்டல அலுவலர்(பொறுப்பு) | மண்டலம் 5 | 13.06.2013 | 24.01.2014 |
| 18 | கண்காணிப்பு பொறியாளர்(இயந்திரம்) | வடக்கு வட்டார அலுவலகம் | 24.01.2014 | 01.12.2014 |
| 19 | கண்காணிப்பு பொறியாளர் | கட்டடத்துறை | 01.12.2014 | நாளது தேதி வரை |

தனியர் (பழைய மண்டலம் – **6**), புதிய மண்டலம் – **9**ல் பணியாற்றிய காலத்தில் தனியர் மீது **2000–2001**ஆம் ஆண்டின் தணிக்கைதடை பத்தி எண் **68**ல் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைதடையாக ரூ.**4957/–** உள்ளது என்றும் மற்றும் பத்தி எண்–**78**ல் தனியர் மீது நேர் செய்யப்படாத முன்பணம் ரூ.**50,000/–**ற்கு தணிக்கைதடை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் கட்டடத்துறையில் பணியாற்றிய காலத்தில் **1999–2000**ம் ஆண்டில் தணிக்கைதடை பத்தி எண் **24** மற்றும் **53**ல் தனியர் மீது நிதி இழப்பீடு ரூ.**1,82,190/–** நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உள்ள தணிக்கைத்தடையை தவிர்த்து மற்ற துறைகளில் திரு. கே.ஸ்ரீதரன், கண்காணிப்புப் பொறியாளர்(கட்டடம்) அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் வகித்துவரும் கண்காணிப்புப் பொறியாளர் பதவி வகுப்பு–1ன் கீழ்வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

எனவே, திரு. கே.ஸ்ரீதரன், கண்காணிப்புப் பொறியாளர்(கட்டடம்), கட்டடத்துறை அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.187147/– மற்றும் தனியர் மீது நிலுவையில் உள்ள நேர்செய்யப்படாத முன்பணம் ரூ.50,000/– ஆக மொத்தம் ரூ.2,37,147/– மற்றும் இவர் மீது பிற தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 28.02.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்க அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.சு.து.ந.க.எண்.சி1/4423/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.11/2015 பொருள் எண்.11

**மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதி வாய்ந்த நபர் பட்டியல் பெறப்பட்டு 4 நபர்களுக்கு மண்டல சுகாதார அலுவலர் பணிநியமனம் வழங்கப்பட்டதில் 2 நபர்கள் மட்டுமே பணியில் சேர்ந்துள்ளதால் பணிக்கு வராத 2 நபர்களின் பணி நியமன ஆணை ரத்து செய்யவும், காத்திருப்போர் பட்டியலில் அடுத்து உள்ள டாக்டர்.ஆர்.ரமா அவர்களது பெயரை விருப்பமின்மை காரணமாக காத்திருப்போர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறையில் மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணி விதிகள் பின்வருமாறு :

| பதவியின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | நியமன முறை | கல்வித்தகுதி |
|---|---|---|
| மண்டல சுகாதார அலுவலர் (Zonal Health Officer) (15600–39100+5700 தர ஊதியம் (வகுப்பு 2) | 1. By direct recruitment (or) 2. By promotion from the categories of Medical Officer (Tuberculosis Clinic) 3. By appointment from the category of Health Officer in Tamil Nadu Public Health Services or from any other state service on deputation. | 1. M.B.B.S Degree with Diploma in Public Health 2. A Pass in Account Test for Executive Officer (only after the joining the service) |

மேற்கண்ட பணிவிதிகளின்படி மண்டல சுகாதார அலுவலர் பதவியை பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்து நிரப்பிட 15.05.2014ஐ மைய நாளாகும். இதன் அடிப்படையில் கீழ்நிலை பதவியில் உள்ள பொது சுகாதாரத்தில் பட்டயபடிப்பு ( DPH ) படித்துள்ள மருத்துவ அலுவலர்களை கொண்டு நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் பொது சுகாதாரத்தில் பட்டயபடிப்பு (DPH) படித்து முடித்துள்ள மருத்துவ அலுவலர்கள் இல்லாத காரணத்தினால் சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையில் காலியாக உள்ள 6 மண்டல சுகாதார அலுவலர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பிட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதில் கீழ்கண்ட 4 நபர்கள் மட்டும் மண்டல சுகாதார அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

| வ. எண் | மண்டல சுகாதார அலுவலர்களின் பெயர் | இனம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | டாக்டர் எஸ். பிரியதர்ஷினி | SC (W) (NP) | 25.08.2014 அன்று மண்டலம்–11ல் பணியில் சேர்ந்து 26.08.2014 முதல் 6 மாத காலத்திற்கு மகப்பேறு விடுப்பு கோரியுள்ளார். |
| 2 | டாக்டர் கே. மார்கரெட் புனிதா | GT (W) (NP) | 13.08.2014 அன்று மண்டலம்–9ல் பணியில் சேர்ந்துள்ளார். |
| 3 | டாக்டர் எஸ். கதிர்வேல் | GT (G) (NP) | பணியில் சேர விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார். |
| 4 | டாக்டர் லீனா சார்லெட் | BC GT (W) (NP) | பணியில் சேரவில்லை |

மேற்படி பணி நியமனம் செய்யப்பட்ட 4 நபர்களில் வரிசை எண்.2ல் கண்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் மட்டும் பணிபுரிந்து வருகிறார் வரிசை எண்.1ல் கண்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் 6 மாத காலத்திற்கு மகப்பேறு விடுப்பில் உள்ளார். வரிசை எண்.3 மற்றும் 4ல் கண்டுள்ள 2 நபர்கள் பணியில் சேரவில்லை. அவ்வாறு பணியில் சேராத 2 நபர்களுக்கு கடிதம் மூலம் விளக்கம் கோரப்பட்டது. அதில் வரிசை எண்.3ல் உள்ள டாக்டர் எஸ். கதிர்வேல் அவர்கள் 15.10.2014 நாளிட்ட மின்னஞ்சல் மூலமாக சொந்த காரணத்தினால் பணியில் சேர இயலவில்லை என தெரிவித்துள்ளார். வரிசை எண். 4ல் இடம் பெற்றுள்ள டாக்டர் லீனா சார்லெட் அவர்கள் இந்நாள்வரை பணியில் சேரவில்லை எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை.

மேலும் இவர்களுக்கு பதிலாக காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள டாக்டர் ஆர்.ரமா, மாவட்ட வேலை வாய்ப்பு பதிவு எண். CHP2014F00004522 நாள். 21.02.2014 (பொது போட்டி) (பெண்கள் முன்னுரிமை அற்றவர்). அவர்கள் பணிநியமனத்திற்கு விருப்பமின்மை கடிதம் அளித்துள்ளார்.

எனவே,

1. பொது சுகாதாரத்துறையில் மண்டல சுகாதார அலுவலராக நியமனம் செய்யப்பட்டு வரிசை எண்.3ல் இடம் பெற்றுள்ள டாக்டர் எஸ். கதிர்வேல் மற்றும் வரிசை எண்.4ல் இடம் பெற்றுள்ள டாக்டர் லீனா சார்லெட் ஆகியோரின் பணி நியமன ஆணை ரத்து செய்திடவும்,
2. காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள டாக்டர் ஆர்.ரமா அவர்களது பெயரை காத்திருப்போர் பட்டியலிருந்து ரத்து செய்திடவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/31630/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.12/2015 **பொருள் எண்.12**

**<u>தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தால் 2014ம் ஆண்டுக்கான இன்மை பட்டியல் வெளியிட அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு 01.04.2014ஐ மைய நாளாக கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 07.08.2014 நாளிட்ட குறிப்பின்படி நிதி ஆலோசகர் அவர்களிடம் தகுதி வாய்ந்த நபர்களின் விவரங்கள் கோரப்பட்டது. 25.08.2014 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பின்படி, சென்னை மாநகராட்சியில் தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு தகுதிவாய்ந்த திரு.எம்.எத்திராஜன், உதவி கணக்கு அலுவலர் அவர்கள் ‘‘விருப்பமின்மை’’ கடிதம் சமர்ப்பித்துள்ளதாகவும், அவரைத்தவிர வேறு தகுதிவாய்ந்த உதவி கணக்கு அலுவலர்கள் எவரும் சென்னை மாநகராட்சியில் இல்லை எனவும் **‘‘இன்மை அறிக்கை’’** பெறப்பட்டுள்ளது. எனவே, தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு ஊட்டப்பதவியான உதவி கணக்கு அலுவலர் பதவியில் தகுதிவாய்ந்த நபர்கள் எவரும் இல்லையெனக் கருதி 01.04.2014ல் **‘‘இன்மை பட்டியல்’’(Nil Panel)** வெளியிடப்பட வேண்டும்.

இன்மை பட்டியல் வெளியிடப்பட்டபின் தலைமை கணக்கு அலுவலர் பதவிக்கு விருப்பம் தெரிவித்தோ, எவருடைய பெயரும் விடுப்பட்டது என்றோ, ஆட்சேபம் தெரிவித்தோ அல்லது எவருடைய பெயரையாவது சேர்க்கும்படி குறிப்புகளோ, மனுக்களோ பெறப்பட்டால் அவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டது என்றும், அப்பணியாளர் பெயர்கள் 2015ஆம் ஆண்டிற்கான தெரிவுப் பட்டியலில் தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தகுதிவாய்ந்த நபர்கள் கீழ்நிலை பதவிகளில் இருந்து அவர்களது பெயர் சேர்க்கப்படாமல் இருந்தால், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்/மண்டல அலுவலரே பொறுப்பாவார்கள் என்றும், பொதுத்துறை பொறுப்பாகாது என்றும் சுற்றறிக்கையின் மூலம் தெரிவித்திட நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

<u>பொ.து.ந.க.எண்.இ5/14088/2009</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.01.2015 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.13/2015 **பொருள் எண்.13**

<u>சார்நிலை பணிகளின் கீழ் வரும் அனைத்து பதவிகளுக்கான நியமனமுறை மற்றும் கல்வித் தகுதிகளில் சில மாற்றங்கள் மேற்கொண்டு அரசின் ஒப்புதல் பெற அனுமதி</u>

சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண். 753/81 நாள் 26.04.1981ல் பெறப்பட்ட தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை சார்நிலை பணி துணை விதிகள் 2010ம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் தற்போதைய நிர்வாக அமைப்பிற்கு ஏதுவாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு மன்றத் தீர்மான எண்45/2010 நாள் 28.01.2010 ல் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ஆம் நிலை பணியாளர்களின் சார்நிலை வரைவு துணை விதிகள்–2009 க்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டது.

2014–2015ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்போது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் சிறப்பு அறிவிப்பில் (அறிவிப்பு எண்.1) ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் அறிஞர் அண்ணா, அதன்படியே ஏழை, எளியோரின் வீட்டுப் பிள்ளைகளுக்கு உயர்வாழ்வு அளிக்கும் தரமான கல்வியைச் சென்னை மாநகராட்சி வழங்கி வருகிறது. மேலும், அதன் பரிணாம வளர்ச்சியாக அனாதைக் குழந்தைகள், வீடற்றோர் குழந்தைகள் மற்றும் ஏழை முதியோர் பராமரிப்பில் இருக்கும் குழந்தைகள், பொருளாதாரத்தில் நலிந்த அனைவரையும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்றிட பள்ளியை நோக்கி ஈர்த்திட வேண்டியுள்ளது. அவர்களின் கல்வி மேம்பாட்டினை, பொருளாதாரத்தில் மேம்பட்ட மாணவர்கள் பயிலும் உண்டு உறைவிடப் பள்ளிக்கு (Residential School) இணையாக மாநகராட்சியின் கல்வித் தரத்தினைக் கொண்டு வருவதற்காக உண்டு உறைவிடப் பள்ளி அமைத்தல் இன்றியமையாததாகும்.

இதன் தொடர்ச்சியாக முதற்கட்டமாக சென்னை மேல்நிலைப்பள்ளி சுப்பராயன் தெரு பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டையில் மாணவியர்களுக்கு மட்டும் அம்மா உண்டு உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வுண்டு உறைவிடப்பள்ளியில் மாணவ / மாணவியர்களுக்கு உணவு, தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் வழங்கபட வேண்டியது அவசியம் ஆகும். ஒவ்வொரு பள்ளியிலும் இதற்கென நான்கு அறைகள் அமைக்கப்பட்டு அதில் அனைத்து வசதிகளுடன் மாணவ / மாணவியர்களுக்கான சமையல் பாத்திரங்கள், சமையல் செய்யும் பணியாளர்கள், வார்டன் உள்ளிட்ட அனைத்தும் செலவு கணக்கிடப்பட்டு உரிய வசதிகள் செய்யப்பட கீழ்கண்டுள்ளவாறு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு

<u>அம்மா உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு தேவைப்படும் விவரங்கள்</u>

<u>I. பணியாளர்கள்</u>

| வ.எண் | பணியாளர்களின் விவரங்கள் | தொகை (ரூ) | |
|---|---|---|---|
| 1 | வார்டன் | 15,000 | இரண்டு விடுதிகளுக்கு ரூ.76,000/- |
| 2 | தலைமை சமையலர் | 10,000 | |
| 3 | உதவியாளர் | 8,000 | |
| 4 | துப்புரவாளர் | 5,000 | |
| | மொத்தம் | 38,000 | |

மேற்கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில் ஒரு விடுதிக்கு ரூ. 38,000/- வீதம் இரண்டு விடுதிக்கு 2x38,000= ரூ.76,000/- தொகை கணக்கிடப்பட்டுள்ளது. <u>ரூ.76,000/- X 12 மாதங்களுக்கு = ரூ.9,12,000/-</u>

II மாணவர்களுக்கு

| ஒரு மாணவனுக்கு ஆகும் உணவு செலவு 1 நாளைக்கு | தொகை (ரூ) | இரண்டு விடுதிகளுக்கு ரூ.3,60,000 |
|---|---|---|
| காலை தேனீர், காலை டிபன், மதியம் மற்றும் இரவு இரு வேளை சாப்பாடு | 100 | |
| 60 மாணவர்களுக்கு (60 X 100 = 6000) | 6000 | |
| 60 மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு (30 X 6000) 30 நாட்களுக்கு | 1,80,000 | |
| இரண்டு விடுதிகளுக்கு 2 X 1,80,000 | 3,60,000 | |

மேற்கண்டுள்ள விவரங்களின் அடிப்படையில் ஒரு மாணவனுக்கு ரூ. 100/- வீதம் இரண்டு விடுதியில் உள்ள 60 மாணவர்களுக்கு ரூ.3,60,000/- தொகை கணக்கிடப்பட்டுள்ளது.
ரூ.3,60,000/- X 12 மாதங்களுக்கு = ரூ.43,20,000/-

III. கேஸ் சிலிண்டர்

| ஒரு விடுதிக்கு ஆகும் செலவு | ரூ. | ஒரு ஆண்டுக்கு இரு விடுதிகளுக்கு ரூ.3,94,800 |
|---|---|---|
| கேஸ் சிலிண்டர் | 1645 | |
| 10 சிலிண்டர் ( ஒரு மாததிற்கு ஒரு விடுதிக்கு ) 10 X 1645 | 16,450 | |
| இரண்டு விடுதிக்கு 2 X 16,450 | 32,900 | |

IV. கேஸ் சிலிண்டர் முன் பணம்

| | | |
|---|---|---|
| 4 சிலிண்டர்களுக்கு முன்பணம் (Advance) ஒரு விடுதிக்கு 4 X 1700 | ரூ.6800 | இரண்டு விடுதிகளுக்கு ரூ.13,600 |
| இரண்டு விடுதிகளுக்கு 2 X 6800 | ரூ.13,600 | |

V. சமையல் பாத்திரங்கள் விவரங்கள்

| | | |
|---|---|---|
| ஒரு விடுதிக்கு தேவையான சமையல் பாத்திரங்களின் விலை | ரூ.71625.5 | இரண்டு விடுதிகளுக்கு ரூ.1,43,251 |
| இரண்டாவது விடுதிக்கு தேவையான சமையல் பாத்திரங்களின் விலை | ரூ.71625.5 | |

அம்மா உண்டு உறைவிடப் பள்ளிகளுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் (Tansi Project (Nabard) என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு தோராயமாக ரூ.20,00,000/- செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அம்மா உண்டு உறைவிடப்பள்ளிகளுக்கு தேவைப்படும் செலவினம் கீழ்வருமாறு :

1. பணியாளர்களின் மொத்தம் ஊதியம் ( 12 மாதங்களுக்கு ) ரூ.9,12,000/-
2. மாணவ / மாணவியர்களுக்கு உணவிற்கு ஆகும் செலவு ரூ.43,20,000/-
3. கேஸ் சிலிண்டருக்கு ஆகும் செலவு ரூ. 4,08,400/-
4. சமையல் பாத்திரங்களுக்கு ஆகும் செலவு ரூ.1,43,251/-
5. தளவாடப் பொருட்களுக்கு ஆகும் செலவு ரூ.20,00,000/-ஆக மொத்தம் ரூ.77,83,651/- தொகையினை ஒரு ஆண்டுக்கு செலவாக கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்பராயன் தெரு மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை பள்ளிகளில் 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு அம்மா உண்டு உறைவிடப்பள்ளிக்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், பணியாளருக்கு மாதச் சம்பளம், சமையலுக்கு தேவைப்படும் கேஸ் சிலிண்டர்கள் மற்றும் மாணவ / மாணவியர்களுக்கு உணவு போன்றவைகளுக்கு தோராயமாக ரூ.78,00,000/- செலவு செய்வதற்கு அனுமதியும்,
2. தேவைப்படும் தளவாடப் பொருட்களை டான்சி நிறுவனத்தில் விலைப்புள்ளியில் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
3. தேவைப்படும் சமையல் பாத்திரங்களை குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
4. விடுதியில் வேலை செய்யும் பணியாளருக்கு மாதச் சம்பளம் வழங்குவதற்கு அனுமதியும்,
5. சமையலுக்கு தேவைப்படும் கேஸ் சிலிண்டர்கள் வாங்குவதற்கு அனுமதியும்,
6. ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு உணவு மற்றும் தேனீருக்கு ரூ. 100/- செலவு செய்வதற்கு அனுமதியும்,
7. தோராயமாக ஒரு ஆண்டுக்கு ரூ.78,00,000/- ஆகும் செலவினத் தொகையினை முன் பணமாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பெற்று சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களின் பெயருக்கு காசோலையாக வழங்குவதற்கு அனுமதியும்,
8. அச்செலவுத்தொகையினை சம்மந்தப்பட்ட கணக்கு தலைப்பில் செலவு மேற்கொள்ளவும், கோப்பு நேர் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**13.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.**02/2015**, நாள்.**13.01.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“**23.01.2015** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.**12/2015**, நாள்.**23.01.2015**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**க.து.ந.க.எண்.டி1/ 17083 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.12.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.16/2015 **பொருள் எண்.16**

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சமுதாயக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலைய தற்காலிக அலுவலக பணியாளர்கள் – இளநிலை உதவியாளர்–1 நபர், தட்டச்சர்–1 நபர் ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும் மற்றும் அலுவலக உதவியாளர்–1 நபர் ஆகஸ்டு 1999 முதலும் தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருவது – 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பணிக்காலம் முடிவடைதல் – பணியின் அவசியம் கருதி 01.11.2014 முதல் மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு மற்றும் தொகுப்பூதியத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 6 சமுதாயக் கல்லூரிகள் மிக சிறப்பாக இயங்கி வருகின்றன. சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகள் மற்றும் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைத் தொடங்கி நடத்தி வருவது நமது நாட்டில் இதுவே முதல் முறையாகும்.

மேற்காணும் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய நிர்வாக பணிகளை மேற்கொள்ள இளநிலை உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர் ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் ஆகஸ்ட் 1999 முதலும் அப்போதைய துணை ஆணையர் (கல்வி) அவர்களால் நேரடியாகவும், தற்காலிகமாகவும் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டனர்.

தனியர்களுக்கு மன்றத் தீர்மான எண்.142/2010, நாள்:29.04.2010ன்படி இவர்களின் தகுதிகள், அனுபவம் மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கு உண்டான ஆயத்தப் பணிகளுக்கு இவர்களின் பணியை உட்படுத்தியதாலும் மற்றும் இன்று வரை நடைபெற்று வரும் எக்ராட் பிரிவு அலுவலக பணிகளுக்கும் இவர்களுடைய பணி தேவைப்படுவதால், அரசாணை (நிலை) எண்.22 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 28.02.2006–ன்படி, 01.01.2006 அன்றைய நிலையில் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளவர்களின் பணியினை பணிவரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டதன்படி, தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அரசாணை எண்.292ல் தோற்றுவித்த அமைச்சு பணியிடமான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் மேற்காணும் மூவரையும் பணி நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி நிர்வாகம் பரிசீலித்து நியமனக்குழுவின் பரிந்துரைகளின்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின்படி (மன்றத் தீர்மான எண்.142/2010, நாள்:29.04.2010) தனியர்களின் பதவிகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை மாநகராட்சியின் தற்போது நடைமுறையில் உள்ள காலமுறையில் உள்ள காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணிவரன்முறை செய்ய அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டது (க.து.ந.க.எண்.டி1/037/ 2007, நாள்:25.05.2010). மேலும், அரசுக்கு அவ்வப்பொழுது நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியர்களது பணிக்காலம் 31.10.2014 அன்று முடிவடைந்த நிலையில், இவர்களது பணி தொடர்ந்து சமுதாயக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு தேவைப்படுகின்ற காரணத்தால், மேற்கண்ட மூன்று நபர்களின் பணிக்காலத்தினை 01.11.2014 முதல் 31.10.2015 வரை ஓராண்டு பணி நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளது.

மேலும், தனியர்களின் பணிநிரந்தரம் சம்மந்தமாக அரசு கடிதம் எண்.34236/மாந3/2010 நாள்:24.05.2013 நாளிட்ட கடிதத்தில் ஆணை வழங்க சில கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டது. அதற்கான பதில் கல்வித்துறையின் மூலம் (கடிதஎண்.க.து.ந.க.எண்.டி1/037/2007, நாள்:24.09.2013) அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பணிநிரந்தரம் தொடர்பான அரசாணை எதிர்நோக்கப்படுகிறது.

இந்நிலையில் 30.04.2014 மற்றும் 10.10.2014 நாளிட்ட நேர்முக கடிதத்தின் வாயிலாக அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களால் தனியர்களை பணி நிரந்தரம் செய்ய தளர்வாணை பெற அரசாணை பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தனியர்களுக்கு வருடந்தோறும் மாதத் தொகுப்பூதியம் உயர்த்தப்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்று வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தனியர்கள் மன்றத் தீர்மான எண்.759/2013, நாள்:22.11.2013–ன்படி பெற்று வரும் மாதத் தொகுப்பூதியம் பின்வருமாறு.

| வ. எண் | பணியாளரின் பெயர் மற்றும் பதவி | கல்வித் தகுதி | தொகை |
|---|---|---|---|
| 1. | எம்.மகாலட்சுமி, இளநிலை உதவியாளர் சமுதாயக் கல்லூரி / தொழிற் பயிற்சி நிலையம் / கல்வித்துறை மதிப்பீட்டு பிரிவு பணிகள் | பி.எஸ்சி (விலங்கியல்), எம்.ஏ(ஆங்கிலம்) Diploma in Computer Application, Account Test Part –I, Part II தேர்ச்சி அரசுஅலுவலக நடைமுறை தேர்ச்சி (DOM) | ரூ.7,000/– |
| 2. | ஆர். மகாலட்சுமி, தட்டச்சர் சமுதாயக் கல்லூரி / தொழிற் பயிற்சி நிலையம் | பி.காம்., எம்.ஏ., (பொருளாதாரம்) Diploma in Office Automation, Typewriting (English&Tamil) – Higher Grade, அரசு அலுவலக நடைமுறைதேர்ச்சி (DOM) | ரூ. 7,000/– |
| 3. | கே.சேகர், அலுவலக உதவியாளர் சமுதாயக் கல்லூரி / தொழிற் பயிற்சி நிலையம் / கல்வித்துறை பணியமைப்புப் பிரிவு – I பணிகள் | 8ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.5,000/– |

எனவே,

அ. சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலைய தற்காலிக பணியாளர்களின் பணிக்காலம் 31.10.2014 அன்றுடன் முடிவடைந்த நிலையில், தொடர்ந்து 01.11.2014 முதல் 31.10.2015 வரை ஓராண்டு பணி நீட்டிப்பு செய்யவும்,

ஆ. சென்னை மாநகராட்சி வருவாய் நிதி – துறை குறியீடு (இ), பிரிவு குறியீடு 80–82–03 கணக்கு குறியீடு 210–10–06–05, 210 பணியாளர் செலவீனம் நிரந்தரமற்றவர் ஊதியம் – மற்றவர் என்ற கணக்கு தலைப்பில் செலவினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட “அ” மற்றும் “ஆ” ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“13.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.01/2015, நாள்.13.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“3.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.02/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.எம்2/9322/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.10.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.17/2015 **பொருள் எண்.17**

**சென்னை மாநகராட்சி – விளம்பரவரி – வருவாய் துறை –விளம்பரப்பலகைகள் மூலம் அல்லாத பிற வகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கான(Other than Hoardings) விளம்பர வரியினை நிர்ணயம் செய்ய அனுமதி**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.129எ–ன்படி, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு விளம்பர வரியினை வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டைய சென்னை மாநகராட்சி விளம்பரங்களுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரவரி வசூலித்தல் விதிகளின்படி, சென்னை மாநகரில் விளம்பரப்பலகைகள் அமைப்பதற்கான உரிமம் வழங்கும் அதிகாரம் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விளம்பரப்பலகைகள் (Hoardings) மூலமாக மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு விளம்பர வரியினை விதித்து அதனை வசூலித்து சென்னை மாநகராட்சிக்கு அளிக்கும் அதிகாரமும் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 2003ஆம் ஆண்டைய சென்னை மாநகராட்சி விளம்பரங்களுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரவரி வசூலித்தல் விதி, விதி எண்.14ல், விளம்பரப்பலகைகள் மூலம் அல்லாத பிற வகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கான(Other than Hoardings) விளம்பர வரியினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைந்தபட்சம் அரையாண்டுக்கு ரூ.50/– முதல் அதிகபட்சம் அரையாண்டுக்கு ரூ.500/– வரை விளம்பர வரியினை நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சட்டப்படி, மேற்கொள்ளப்படும் விளம்பரத்தின் வகைப்பாடு மற்றும் விளம்பரம் மேற்கொள்ளப்படும் பகுதி ஆகியவற்றை கருத்தில்கொண்டு விளம்பரவரியானது நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.223எ–ல், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் விளம்பரங்களை மேற்கொள்ளும் வகையில் வழிவகையினை ஏற்படுத்திக்கொள்ளவும், இவ்விடங்களில் விளம்பரங்களை செய்ய, கட்டணத்தினை வசூலித்துக்கொண்டு அனுமதி வழங்கிடவும் சென்னை மாநகராட்சிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.37ல், சட்டப்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள வழிவகைகளை பயன்படுத்தி, விளம்பரங்கள் மூலமாக, தெருவிளக்குகளில் விளம்பரங்களை மேற்கொள்ள அனுமதி வழங்குதல் மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது வருவாயினை பெருக்கிக்கொள்ளலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இப்பரிந்துரையானது தமிழக அரசால் ஏற்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) 2003ஆம் ஆண்டைய சென்னை மாநகராட்சி விளம்பரங்களுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரவரி வசூலித்தல் விதி, விதி எண்.14ல், விளம்பரப்பலகைகள் மூலம் அல்லாத பிற வகைகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கான (Other than Hoardings) விளம்பர வரியினை ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்கு குறைந்தபட்சம் அரையாண்டுக்கு ரூ.50/– முதல் அதிகபட்சம் அரையாண்டுக்கு ரூ.500/– வரை நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், விளம்பரப்பலகைகள் மூலம் அல்லாத பிற வகைகளில் மேற்கொள்ளப்படும் அனைத்துவகையான விளம்பரங்களுக்கான (Other than Hoardings) விளம்பர வரியினை, ஒரு சதுர மீட்டர் பரப்பளவிற்கு அரையாண்டுக்கு ரூ.500/– என நிர்ணயம் செய்திடவும்,

(2) 2003ஆம் ஆண்டு இயற்றப்பட்ட, சென்னை மாநகராட்சி விளம்பரங்களுக்கான உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரவரி வசூலித்தல் விதியில், விளம்பர வரியினை அதிகபட்சம் ரூ.500/– என்ற அளவில் மட்டுமே உள்ளதால், இத்தொகையினை மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்திக்கொள்ளும்வகையில், சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919 மற்றும் 2003ஆம் ஆண்டைய விளம்பரவரி வசூலித்தல் விதிகளில் தேவையான திருத்தத்தினை மேற்கொள்ள அரசினைக் கோரிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.13/2015, நாள்.23.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1 ந.க.எண். பி1/07391/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 09.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.18/2015 **பொருள் எண்.18**

**மண்டலம்–1, பகுதி–3, வார்டு–10ல் திருவொற்றியூர் மேற்கு மாட வீதியில், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய (மையம் எண். 53) கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, பகுதி–3, வார்டு–10ல் திருவொற்றியூர் மேற்கு மாட வீதியில், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழைய ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய (மைய எண். 53) கட்டிடம் தற்போது உபயோகமற்ற நிலையில் உள்ளது.

எனவே, தற்சமயம் புதியதாக இரண்டாவது கட்ட தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான அம்மா உணவகம் கட்டப்பட உள்ளது. இதனுடைய புத்தக மதிப்பு மற்றும் அனைத்து விவரங்கள் வருமாறு.

| வ. எண். | விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–1, பகுதி–3, வார்டு–10, திருவொற்றியூர் மேற்கு மாடவீதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடம் (மைய எண். 53) |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | முந்தைய திருவொற்றியூர் நகராட்சியால் 1983ம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மட்டும் 1125 சதுர அடி ( 104.56 சதுர மீட்டர்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 11254.96 சதுர அடி (அ) 1046 சதுர மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.9752.00 |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது? | இரண்டாம் கட்ட தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டமான அம்மா உணவகம் அமைப்பதற்கு |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | இடியும் நிலையில் உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர்–1 |
| 10 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண்/ நாள் | பின்னர் பெறப்படும். |

எனவே, மண்டலம்–1, வார்டு–10, திருவொற்றியூர் மேற்கு மாடவீதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய (மையம் எண்.53) கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 13.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.01.2015 அன்று தீர்மான எண்.03/2015ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

> ''20.01.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 10/15 நாள் 20.01.2015–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.து.ந.க.எண்.பி1/030/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.19/2015 பொருள் எண்.19

**மாண்புமிகு மேயர் அவர்களுடன் வட்டார இணை ஆணையர் (தெற்கு) அவர்கள் 12.01.2015 அன்று மகாத்மா மந்திர், காந்திநகர், குஜராத்தில் நடைபெற்ற "Smart Cities for Next Generation" International Conclave of City Leaders at Vibrant Gujarat Summit 2015 – கலந்து கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி**

ஆல் இந்தியா இன்ஸ்டியூட் ஆப் லோக்கல் செல்ப் கவர்மென்ட், வட்டார இயக்குநர், திரு. எம்.பி.பாட் அவர்கள் சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களை 12.01.2015 அன்று நடைபெற்ற "**Smart Cities for Next Generation**" International Conclave of City Leaders at Vibrant Gujarat Summit 2015 கலந்து கொள்ளுமாறு 22.12.2014 நாளிட்ட கடிதங்கள் மூலம் அழைப்பு விடுத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அரசாணை நிலை எண்.8, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள்.09.01.2015ன்படி அனுமதியும், சென்னை மாநகராட்சி வட்டார இணை ஆணையர் (தெற்கு) டாக்டர்.திரு.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்களும் மேற்படி மாநாட்டில் கலந்துகொள்வதற்கு, முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். பொ.து.ந.க.எண்.இ3/34370/2012, நாள்.10.01.2015 படியும், குஜராத் நகரம் செல்ல முறையே அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி அரசாணையில் மாண்புமிகு மேயர் அவர்கள் 12.01.2015 அன்று நடைபெற்ற "**Smart Cities for Next Generation**" International Conclave of City Leaders at Vibrant Gujarat Summit 2015 மாநாட்டில் கலந்து கொள்ளவும், இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டது.

இப்பயணத்திற்கான வானூர்தி மற்றும் பயணச்செலவு தொகையினை மாண்புமிகு மேயர் அவர்கள் அவருடைய சொந்த செலவிலேயே மேற்கொண்டார்.

வட்டார இணை ஆணையர் (தெற்கு) டாக்டர்.திரு.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்களின் வானூர்தி மற்றும் பயணச்செலவு தொகையை மட்டும் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

எனவே,

(1) மேற்கண்ட அரசாணையின்படி மாண்புமிகு மேயர் அவர்கள் 12.01.2015 அன்று குஜராத் நகரில் நடைபெற்ற "**Smart Cities for Next Generation**" International Conclave of City Leaders at Vibrant Gujarat Summit 2015 மாநாட்டில் கலந்து கொண்டமைக்கும்

(2) முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 10.01.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி வட்டார இணை ஆணையர் (தெற்கு) டாக்டர்.திரு.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு மேயர் அவர்களுடன் குஜராத் நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டமைக்கும்,

(3) மேற்கண்ட மாநாட்டில் டாக்டர்.திரு.ஆர்.ஆனந்தகுமார், இ.ஆ.ப., வட்டார இணை ஆணையர் (தெற்கு) அவர்கள் சென்னை மாநகராட்சி சார்பாக கலந்து கொண்டதற்கான செலவுத்தொகை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொண்ட நிகழ்விற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காகவும் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 14/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் தகவலுக்காக பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/1521/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.20/2015 **பொருள் எண்.20**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம்) எண். 4711, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 24.12.2014ன்படி, திரு.கு.ரவிகுமார், துணை ஆட்சியர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கடலூர் மாவட்டம் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சி, மண்டலம்–1ல் மண்டல அலுவலர் ஆக அயற்பணியில் 07.01.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.பி15/241/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.21/2015 **பொருள் எண்.21**

**பொங்கல் பண்டிகை, 2015 – ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு பொங்கல் பரிசு அரசாணையின் படி ரூ.500/–வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி**

அரசாணை எண்.10, நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்.08.01.2015ன் மூலம் அனைத்திந்திய பணி மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களின் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அனைத்து பிரிவு ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு பொங்கல் பரிசாக ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை ஏற்கனவே ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு பொருந்தும் என்றும், 08.01.2015 நாளன்றோ அதற்கு பின்னரோ பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கும், 08.01.2015 நாளன்றோ அதற்கு பின்னரோ பணியிலிருக்கையில் இறக்கும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசு வழங்க இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 01.10.2013 முதல் 07.01.2015க்கு வரையிலான காலங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் / பணிக்காலத்தில் காலமானவர்களுக்கு ஊக்கத்தொகை / சிறப்பு ஊக்கத் தொகை (Adhoc Bonus) வழங்கப்பட்டு இருப்பின் அவர்களுக்கு மீண்டும் பொங்கல் பரிசு வழங்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

1. உலேமா உதவித்தொகைகள், மாநில சுதந்திர போராட்ட வீரர்களுக்கான உதவித்தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்.
2. பணியில் இருக்கும் பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவாறான மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

சென்னை மாநகராட்சியில் சுமார் 17,200 ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். மேற்படி அரசாணையை நடைமுறைப்படுத்தி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை வழங்க 16000 x 500 வீதம் சுமார் ரூ.80,00,000/– (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்) செலவாகும்.

எனவே, அரசாணை எண்.10, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள்.08.01.2015ன்படி 2015ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.15/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.டி.பி.சி. எண் சி1/943/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 27–01–2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.22/2015 **பொருள் எண்.22**

**இ.டி.பி செல் – ரிப்பன் மாளிகை மற்றும் புது கட்டிடத்திற்கு வலையமைப்பு, பிணைய கண்காணிப்பு அமைத்து மற்றும் மூன்று ஆண்டிற்கான பராமரித்தல் பணியினை M/s ELCOT மூலம் செய்ய ஆணை பெறப்பட்டது – மொத்த செலவீனம் ரூ.1,42,06,204/–ல் ரூ.99,99,012/–ஐ முன்பணமாக வழங்கியது – மீதிப்பணம் ரூ.42,07,192/– வழங்க அனுமதி.**

சென்னை மாநகராட்சியில் e-Governance மற்றும் பிற இணையங்கள் வலையமைப்பு மூலம் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. தற்பொழுதுள்ள வலையமைப்பு 2003 ஆண்டு அமைக்கப்பட்டு 15 மண்டலங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது, இந்த வலையமைப்புக்கு பயன்படுத்தப்படும் Switches, கேபிள்கள் மற்றும் இதர உபகரணங்கள் 10 ஆண்டுகள் மேலாகி தற்பொழுதுள்ள அதிகமான இணைப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது. மேலும் மண்டலங்களில் வலையமைப்பு 2 Mbps இருந்து 10 Mbps ஆக உயர்த்தப்பட்டுள்ளது, மேலும் இணையம் பட்டையகலம் 14 Mbps யின் இருந்து 100 Mbps உயர்த்தபட்டு, நமது தேவை ஏற்ப இத்தகைய சேவை பயன்பட்டு வருகின்றது.

தற்பொழுது கட்டப்பட்டு முடியும் நிலையில் துணை கட்டிடத்திலும் அதற்கான வலையமைப்பு மற்றும் பிணைய கண்காணிப்பு அமைக்கப்படவேண்டும். மேலும் தற்பொழுதுள்ள ரிப்பன் மாளிகை புதுபிக்கப்பட்டு வருவதால், ரிப்பன் மாளிகையிலும் வலையமைப்பு புதுப்பிக்கப்பட வேண்டும்.

மேற் கூறிய கருத்துகள் அடிப்படையாக கொண்டு ஒரு ஒட்டுமொத்த கணிவலையமைத்தல் தொடர்பாக National Informatics Centre, M/s ELCOT, Indian Institute of Technology மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியோரிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன் விளைவாக, தொழில் நுட்ப குழு ஒன்று கீழ் குறிப்பிட்டவாறு அமைக்கப்பட்டது.

1. திரு. இனிய நேரு, முதுநிலை தொழில் நுட்ப இயக்குநர்,NIC
2. முனைவர். செல்லப்பன் துறை தலைவர், அண்ணா பல்கலைக்கழகம்
3. முனைவர். ஜெயபிரகாஷ் முதுநிலை அமைப்பு பொறியாளர், IIT Madras
4. திரு சாம்பமூர்த்தி, துணைமேலாளர், ELCOT.

இக்குழு ஒட்டுமொத்த கணினி வலையமைத்தல் அதற்கான வரைபடம் மற்றும் தொழில்நுட்ப விவரக்கூறு ஆராய்ந்து முழு அறிக்கையினை தெரிவித்துள்ளார்கள்.

M/s ELCOT நிறுவனம் 20.12.2013 நாளிட்ட விலைப்புள்ளி பட்டியலில் ரிப்பன் மாளிகை மற்றும் புது கட்டிடத்திற்கு வலையமைப்பு, பிணைய கண்காணிப்பு அமைத்து மற்றும் மூன்று ஆண்டிற்கான பராமரித்தல் பணிக்கு ரூ.3,13,78,795/– (ரூபாய் மூன்று கோடி பதிமூன்று இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூாற்று தொண்ணூாற்று ஐந்து மட்டும்) என குறிப்பிட்டது. தொழில்நுட்பக் குழு 27–12–2013 அன்று கூடி ஆய்வு செய்து தொழில் நுட்ப விவரக் கூறு மற்றும் இதர விவரங்களை அளித்த பின்பு M/s ELCOT நிறுவனம் மொத்த செலவினத்திற்கான விலைப்புள்ளியை ரூ.99,99,012/– (தோராயமாக) வழங்கப்பட்டது. அந்த விலைப்புள்ளி விவரம் அடிப்படையில் ரூ.99,99,012/– முன் பணமாக M/s ELCOT நிறுவனத்திற்கு வழங்கவும், அந்த தொகையினை சரியான விலை விபரம் அந்த நிறுவனத்திடயிருந்து பெறப்பட்ட பின்னர் நேர் செய்யவும், நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் ஒப்புதல் பெறப்பட்டு M/s ELCOT நிறுவனத்திற்கு முன்பணம் வழங்கப்பட்டது. தற்போது பார்வை (5)ல் கண்டுள்ள கடிதத்தில் M/s ELCOT நிறுவனம், தன்னிடம் CISCO பொருள்களுக்கான தனியாக விலைப்புள்ளி எதுவுமில்லை என்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட விலைப்புள்ளி 12.02.2014 அன்று RTGS மூலம் தோராயமாக வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் M/s ELCOT நிறுவனத்தில் புதிய ஒப்பந்தம் கோரப்பட்டு அந்த விலைப்புள்ளியை முடிவு செய்யும் பொழுது ஏற்கனவே வழங்கப்பட்ட விலைப்புள்ளியிலிருந்து 25% கலால் வரி மற்றும் மற்ற வரிகளின் மூலம் உயர்ந்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் திருத்திய விலைப்புள்ளி தயாரிக்கப்பட்டு M/s ELCOT நிறுவனத்தால் அனுப்பப்பட்ட விபரம் பின் வருமாறு:–

**ELCOT Revised Proforma Invoice Amount**

| Sl. No. | Description | Unit Price Rs | Qty in Nos | Total Amount (Rs) |
|---|---|---|---|---|
| 1 | Core Switch Equivalent to CISCO 4500E Chassis Switch | 1810000 | 1 | 1810000 |
| 2 | Distribution Switch Equivalent to CISCO Catalyst 3850 | 268500 | 5 | 1342500 |
| 3 | Access Switch (Non PoE) Equivalent at CISCO 2960 24 TT-L | 56900 | 37 | 2105300 |
| 4 | Access Switch (PoE) Equivalent to CISCO Catalyst 2960 – 24PC-L | 75900 | 4 | 303600 |
| 5a | Wireless Controller with 50 Access Points CISCO 5508 | 501000 | 1 | 501000 |
| 5b | Wireless Access Points CISCO 2700 | 22800 | 22 | 501600 |
| 6a | NMS Software | 116900 | 1 | 116900 |
| 6b | CISCO UCS Server | 267600 | 1 | 267600 |
| 7 | LAN Data Cabling including False Flooring and other work as described in Proforma invoice dated 09.01.2014 (Actual Bill of Materials will be arrived only after the measurement of work done) including False | 5500000 | LS | 5500000 |
| | Sub-Total | | | 12448500 |
| | ELCOT Service charges @ 5% of order value of Rs.12448500 | | | 622425 |
| | Service Tax @ 12.36% against ELCOT Service Charges of Rs. 622425 | | | 76932 |
| | Vat @ 5% extra on item No. 1, 2, 3, 4, 5(a)(b)6(a)(b) | | | 347425 |
| | Service Tax @ 12.36% on Rs. 55,00,000/- | | | 679800 |
| | Advertisement Charges 0.25% on Rs.12448500 | | | 31122 |
| | **Grand Total** | | | 14206204 |
| | **Less: Funds already received** | | | 9999012 |
| | **Balance to be received** | | | **4207192** |

மின் வலையமைப்பு, பிணைய கண்காணிப்பு அமைத்து, மற்றும் மூன்று ஆண்டிற்கான பராமரித்தல் பணி செய்ய திருத்திய விலைப்புள்ளி மொத்த செலவீனமான ரூ. 1,42,06,204/– (வரிகள் உட்பட) (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்திரெண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று நான்கு மட்டும்) ஆகும். இந்த செலவினம் 2014–15 ஆண்டிற்கான இ.டி.பி.செல் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து செலவழிக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையான ரூ.99,99,012/– போக மீதி தொகையினை ரூ.42,07,192/– M/s ELCOT நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

ரிப்பன் மாளிகை மற்றும் துணை கட்டிடத்திற்கு வலையமைப்பு, பிணைய கண்காணிப்பு அமைபதற்கு மன்றத்தின் அனுமதியும் இதனை அமைத்து மற்றும் அவற்றை பராமரித்தல் பணியினை M/s ELCOT நிறுவனம் மூலம் பெறுவதற்கான ஆணை.

1) M/s ELCOT நிறுவனத்திற்கு மின் வலையமைப்பு, பிணைய கண்காணிப்பு அமைத்து, மற்றும் மூன்று ஆண்டிற்கான பராமரித்தல் பணி செய்ய திருத்திய விலைப்புள்ளியின்படி மொத்த செலவீனமான ரூ. 1,42,06,204/– (வரிகள்உட்பட) (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்திரெண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று நான்கு மட்டும்) ஆகும். இதில் முன் பணமாக ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.99,99,012/– போக மீதி தொகையான ரூ.42,07,192/– M/S ELCOT நிறுவனத்திற்கு முன் பணமாக வழங்கவும், அந்த

தொகையினை இறுதி தொகை விவரம் M/S ELCOT நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட பின் நேர் செய்யவும்.

2) இந்த செலவினத்தை 2014–15 நிதி நிலையில் இ.டி.பி. செல்லில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.11/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.16/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.டி.பி.சி.எண்.சி1/2939/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 27–01–2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.23/2015 **பொருள் எண்.23**

**மின்னணு ஒப்பம் – சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services வழங்குவதற்கான ஒப்பம் 19.12.2014 அன்று TECHNICAL BID திறக்கப்பட்டது – 24.12.2014 அன்று FINANCIAL BID திறக்கப்பட்டதற்கும், குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்பதற்கான ஒப்புதலுக்கும் பின்னேற்பு அனுமதி**

| | |
|---|---|
| செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services பணி. |
| தேவைப்படும் இடம் | ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்கள்) |
| **ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி** | |
| 1) மாநகராட்சி வெளியீட்டின் நாள் | 04.12.2014 |
| 2) பத்திரிக்கைகள் | 05.12.2014,New Indian Express, நமது எம்.ஜி.ஆர் |
| மின் ஒப்பப்புள்ளி பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் | 19.12.2014, 3.00 P.M |
| மின்ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| மின்ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (மின் ஒப்பம் திறக்கப்பட்ட நாள்) | 19.12.2014, 3.00 P.M<br>19.12.2014, 3.30 P.M |
| பெறப்பட்ட மின் ஒப்பங்களின் எண்ணிக்கை | 1 |
| செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை | ரூ. 1,52,000 / – |
| **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் விவரங்கள்** | |

தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளி 19.12.2014 அன்று திறக்கப்பட்டது. M/s ACCEL FRONT LINE LTD என்ற ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே ஒப்பந்தபுள்ளியில் பங்குபெற்றது.

M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் தொழில் நுட்ப தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டது. இந்த நிறுவனத்தின் விலைப்புள்ளி 24.12.2014 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் விலைப்புள்ளி துறையின் விலைப்புள்ளியோடு ஒப்பீடு செய்யப்பட்டது. ஒப்பிடப்பட்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணி வ.எண் (A,B,C&D) கூட்டு தொகை | விற்பனை வரி மற்றும் சேவை வரி | துறையின் மதிப்பீட்டுத் தொகை ரூ | துறையின் மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுதல் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1 | M/s ACCEL FRONT LINE LTD | 1,49,95,190.32 | உள்ளிட்டது | 1,51,35,274.02 | (-)0.93% குறைவு |

| | |
|---|---|
| ஏற்கத்தக்க ஒப்பப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் | M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் குறைந்த ஒப்பபுள்ளி அளித்துள்ளது. |
| துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் தனது 24.12.2014 நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்தது. மீண்டும் இரண்டாவது முறை M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் தனது 31.12.2014 நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்துள்ளது. |

| S.No | Description | M/s ACCEL FRONT LINE LTD | |
|---|---|---|---|
| 1 | சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கனிணி மென் பொருள் மற்றும் வன் பொருள் (Facility Management Services) | மொத்த தொகை (கூட்டு தொகை + சேவை வரி + விற்பனை வரி) | விலை குறைப்பு |
| | | 1,49,95,190.32 | 1,47,71,099.53 |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | THIS TENDER QUOTED RATE | துறையின் மதிப்பீட்டுத் தொகை ரூ (C) | துறை மதிப்பீட்டுத் தொகை (C) விட விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s ACCEL FRONT LINE LTD | 1,47,71,099.53 | 1,51,35,274.02 | (-) 2.41% |

| **பரிந்துரைக்கப்படும் நிறுவனம்** | M/s ACCEL FRONT LINE LTD |
|---|---|
| ஒப்பம் செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |
| ஆயத் தீர்வை | உள்ளிட்டது |
| உள்ளூர் வரிகள்/மத்திய விற்பனை வரிகள் | உள்ளிட்டது |
| பணி நிறைவு காலம் | ஒரு வருடம் |
| பிணை வைப்புத் தொகை | – |
| பணம் பட்டுவாடா | 30 நாட்கள் |
| உத்திரவாதம் | 1 வருடம் |
| செலவினம் பற்று வைத்தல் | இப்பணிக்கான செலவினத்தை இடிபி செல்லின் 2014–2015 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும் |
| உடன்படிக்கை | துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும். |

இதற்கு முன்பு 17.09.2014 அன்று கோரப்பட்ட ஒப்பந்தத்தில் இரண்டு ஒப்பந்தாரர்கள் பங்கேற்றாலும் குறைந்த ஒப்பந்ததாரரின் ஒப்பம் (–) 27.60% குறைவு என்பதால் நல்லதோர் நிறைவான தொழில்நுட்ப சேவை செய்ய இயலாது என கருதப்பட்டதால் மன்ற தீர்மானம் பெற்று இப்பணி கைவிடப்பட்டது.

என்றாலும், முந்தைய ஒப்பம் M/s CMS Info system ஓராண்டு ஒப்பந்த காலம் 14.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் அந்த நிறுவனத்திற்கே மன்றத்தீர்மானம் எண்.537/2014 நாள்: 01/10/2014 அன்று அனுமதி பெற்று 31.12.2014 வரை தொடர்ந்து பணி ஆற்ற பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது.

தற்பொழுது கோரப்பட்டுள்ள மின்னணு ஒப்பத்தில் பங்கேற்றுள்ள M/s ACCEL FRONT LINE LTD நிறுவனம் குறிப்பிட்டுள்ள தொகை துறையின் பணித்தொகையைவிட (–) 2.41% குறைவு.

மேலும், ஒற்றை ஒப்பம் என்றாலும் சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services அவசர அவசியம் கருதி இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது. எனவே M/s ACCEL FRONT LINE LTD நிறுவனத்தின் இந்த ஒப்பப்புள்ளி ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது.

மேற்கண்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, மன்றத்தின் பின்னேற்புக்கு உட்பட்டு கீழ்க்கண்ட இனங்களுக்கு முதன்மை செயலர்/ஆணையாளர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

1. சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகம் அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கான பணி **ரூ.1,47,71,099.53/–** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எழுபத்தோறாயிரத்து தொன்னூற்று ஒன்பது பைசா ஐம்பத்து மூன்று மட்டும்) (வரிகள் உள்ளிட்டது). இந்த தொகை துறை பணித்தொகையைவிட (–) 2.41% என்பதால் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள M/s ACCEL FRONT LINE LTD நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும்.
2. M/s ACCEL FRONT LINE LTD நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கனிணி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கான பணி **ரூ.1,47,71,099.53/–** (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தேழு இலட்சத்து எழுபத்தோறாயிரத்து தொன்னூற்று ஒன்பது பைசா ஐம்பத்து மூன்று மட்டும்) (வரிகள் உள்ளிட்டது) தொகைக்கு ஓராண்டு காலத்திற்கு பணி செய்ய ஆணை வழங்கவும் திருவாளர்கள் M/s ACCEL FRONT LINE LTD அவர்களின் ஒப்பம் பணி ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் ஆறு மாத காலத்திற்கு மட்டும் அனுமதி வழங்கி வேலையின் தரம் கண்காணிக்கப்படும். வேலைதரம் சென்னை மாநகராட்சிக்கு திருப்தி அளிக்கும் பட்சத்தில் மேலும் ஆறு மாத காலத்திற்கு பணி ஆணை நீட்டிப்பு வழங்கப்படும். அவசியம் ஏற்பட்டால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு உரிய அனுமதி பெற்று வேலையின் தரம் மற்றும் செயல்திறன் கண்காணிக்கப்பட்டு பணி நீடிப்பு வழங்க பரிந்துரை செய்யப்படும். மேலும், ஒப்பந்ததாரரின் செயல்திறன் திருப்திகரமாக இல்லை என கருதினால் இந்த ஒப்பந்தம் எந்த சூழ்நிலையிலும் ரத்து செய்யப்படும்.
3. இந்த பணி செய்வதற்கான செலவினத்தை இ.டி.பி செல் 2014–2015 நிதி ஆண்டின் கீழ் மேற்கொள்ளவும்.

எனவே மேற்காணும் செயற்குறிப்புகளுக்கு ஒப்பங்கள் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1)&(2)ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.12/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 17/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/0341/2015</u>**

**<u>முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 14.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.24/2015 **பொருள் எண்.24**

**<u>பேருந்து தட சாலைகள் துறை – பேருந்து தட சாலைகளை வலுப்படுத்தி புதுப்பிக்கும் பணிக்கு – மதிப்பீடுகள் மற்றும் சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கு கால அவசரத்தினால் சாலைகளின் நிலைமைகளை கருத்தில் கொண்டு ஒப்பங்கள் கோரியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகரில் இயற்கை சீற்றத்தினாலும் சேவைத் துறையினரின் சாலை வெட்டுகளினாலும், பேருந்து தட சாலைகள் பழுதடைந்துள்ளன. பொது மக்களின் நலன் மற்றும் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு தார் சாலைகளை உடனடியாக சீர் செய்ய வேண்டிய கட்டாயமாகிறது.

எனவே, இப்பணிகளை 2014–15ம் ஆண்டின் விலை விவரப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், கேம்பர் கரக்ஷன் (Camber Correction), இரவு நேரத்தில் சாலைகளில் பிரதிபலிக்கும் மிளிர்வான்கள் (Road Studs), வெள்ளை வர்ணத்தில் சாலைகளை பிரிக்கும் கோடுகள் அமைத்தல் (Hot applied thermoplastic Compound), நீரோடும் பாதைகள், (Water table) போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் மற்றும் தாருடன் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகித்து வலுப்படுத்தி புதுப்பிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**<u>மூலதன நிதியின் கீழ் கூடுதல் சாலைகள் அமைக்கும் பணி 2014–2015</u>**

| வ. எண். | மண்டலம் | வார்டு | சாலையின் பெயர் | நீளம் (மீ) | பரப்பளவு (ச.மீ) | பணியின் மதிப்பு ரூ.இலட்சத்தில் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 61 | வானல்ஸ் சாலை | 305 | 4000 | 73.6 | 86.10 |
| 2 | 5 | 60 | ராஜாஜி சாலை (ரிசர்வ் வங்கி சுரங்கபாதையிலிருந்து வார் மெமோரியல் வரை) | 1500 | 31500 | 524.91 | 614.10 |
| 3 | 5 | 60 | காமராஜ் சாலை (சிவானந்தா சாலை சந்திப்பு – வார் மெமோரியல் வரை) | 600 | 12000 | 210.69 | 246.51 |
| 4 | 5 | 63 | லிங்க் ரோடு (பின்னி சாலை சந்திப்பு – பூதபெருமாள் கோயில் தெரு வரை) | 660 | 7260 | 170.41 | 199.38 |
| 5 | 5 | 63 | பூதபெருமாள் கோயில் தெரு (டேம்ஸ் சாலை – லிங்க் சாலை வரை) | 320 | 3600 | 89.47 | 104.68 |
| 6 | 6 | 78 | தானா தெரு | 650 | 7800 | 94.7 | 110.80 |
| 7 | 9 | 111 | ஸ்மித் சாலை | 260 | 2600 | 54.92 | 64.26 |
| 8 | 10 | 131, 137 | அண்ணா பிரதான சாலை | 1250 | 25000 | 400.61 | 468.70 |
| 9 | 10 | 135, 133 | பாலகிருஷ்ணன் தெரு மற்றும் எக்ஸ்டன்ஷன் அண்டு ஸ்டேசன் சாலை மற்றும் லேக் வில் ரோடு | 1440 | 10300 | 127.19 | 148.80 |
| 10 | 13 | 176 | பெசன்ட் நகர் 7வது அவின்யூ | 970 | 15520 | 248.02 | 290.18 |
| 11 | 13 | 175 | கஸ்தூரிபாய் நகர் 3வது குறுக்கு தெரு | 800 | 8800 | 124.79 | 146.01 |
| 12 | 13 | 172 | பொன்னியம்மன் கோயில் தெரு | 900 | 8100 | 136.12 | 159.26 |
| 13 | 13 | 175 | காந்தி நகர் 4வது பிரதான சாலை மற்றும் கேனல் வங்கி சாலை | 1900 | 20900 | 345.36 | 404.07 |
| 14 | 13 | 176 | பெசன்ட் நகர் 3வது பிரதான சாலை | 400 | 4000 | 56.57 | 66.19 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 13 | 176 | பெசன்ட் நகர் 6வது அவின்யூ | 850 | 15300 | 209.34 | 244.93 |
| 16 | 14 | 188 | செந்தில் நகர் பிரதான சாலை | 1200 | 8400 | 151.03 | 176.7 |
| 17 | 14 | 188 | பாரதி சாலை மற்றும் ராமமூர்த்தி நகர் பிரதான சாலை | 1700 | 12000 | 215.84 | 252.53 |

மேற்கண்ட பணிகளை செயல்படுத்திட தயாரிக்கப்பட்ட 17 திட்டமதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கும் மற்றும் இச்சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதாலும், இந்தப்பணிகளை ஒப்பங்கள் கோரி நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் மிகவும் குறைவாக உள்ளதாலும் உடனடியாக ஒப்பங்கள் கோர வேண்டிய நிலை உள்ளது.

எனவே மேற்கண்ட பணிகளை செயல்படுத்த தயாரிக்கப்பட்டுள்ள 17 மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், நிர்வாக அனுமதியும், சிப்பங்களாக ஒப்பங்கள் கோரியதற்கும் மற்றும் இப்பணிகளை Mega City / MIDF நிதியின் மூலம் Project Sanctioning Committee –யின் ஒப்புதலை பெற்று பணிகளை செயல்படுத்திட நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.15/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 19/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**வ.இ.ஆ.அ.பே.சா.து.ந.க.எண். எ22/306/2014**

**முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் 21.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.25/2015 **பொருள் எண்.25**

**சென்னை மாநகராட்சி – வட்டார அலுவலகம் (தெ) – மண்டலம்–13ல், வார்டு–174, 175, 177, 179, 180 மற்றும் 182 பேருந்து சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணி – ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோர அனுமதி**

சென்னை மாநகராட்சி, வட்டார அலுவலகம் (தெற்கு) பேருந்து சாலைத் துறையிலிருந்து மண்டலம்–13ல் பேருந்து சாலைகளிலுள்ள புதிய நடைபாதைகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பம் பெறப்பட்டது. விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் கோப்பு எண். | சாலையின் பெயர் | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் 2013–14 விலைப்படி | மன்றத் தீர்மான எண். மற்றும் நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | திருவாளர். குளோரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பே.சா.து.ந.க.எண். பி5/5236/2013 | இந்திராநகர் 1வது நிழற்சாலை வார்டு–175 | 1,35,77,494.66 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 219/2014 நாள். 25.02.2014 |
| 2 | திருவாளர். எஸ்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் பே.சா.து.ந.க.எண். பி5/5215/2013 | சிஎஸ்ஐஆர் சாலை வார்டு–180 | 2,34,81,800.00 | அலுவலக விலையை விட (+) 7.70% கூடுதல் | 219/2014 நாள். 25.02.2014 |
| 3 | திருவாளர். எஸ்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் பே.சா.து.ந.க.எண். பி5/5215/2013 | ஐந்து பர்லாங் சாலை வார்டு–174 | 1,50,64,755.84 | அலுவலக விலையை விட (+) 6.80% கூடுதல் | 219/2014 நாள். 25.02.2014 |
| 4 | திரு.ஆர்.ராமாராவ் பே.சா.து.ந.க.எண். பி5/5232/2013 | ரேஸ் கோர்ஸ் சாலை வார்டு –174 | 1,44,82,660.97 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 466/2014 நாள். 28.08.2014 |
| 5 | திரு.ஆர்.ராமாராவ் பே.சா.து.ந.க.எண். பி5/5220/2013 | TNHB பிரதான சாலை வார்டு–177 | 1,80,84,135.42 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 467/2014 நாள். 28.08.2014 |
| 6 | திரு.ஆர்.ராமாராவ் பே.சா.து.ந.க.எண். பி5/5216/2013 | தெற்கு அவென்யூ சாலை வார்டு–182 | 1,52,14,842.83 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 468/2014 நாள். 28.08.2014 |
| 7 | திரு.ஆர்.ராமாராவ் பே.சா.து.ந.க.எண். பி5/5217/2013 | காந்தி சாலை வார்டு–179 | 1,84,23,739.00 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 469/2014 நாள். 28.08.2014 |
| 8 | திருவாளர். குளோரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் பி5/5230/2013 | கஸ்தூரிபாய் நகர் 3வது குறுக்கு தெரு, வார்டு–175 | 1,15,96,513.27 | அலுவலக விலையை விட (+) 13% கூடுதல் | 470/2014 நாள். 28.08.2014 |

மேற்கண்ட பணிகளுக்கு மன்றக்கூட்டத்தில் கோப்புகள் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்ற அனுமதி 25.02.2014 மற்றும் 28.08.2014 அன்று பெறப்பட்டது.

26.02.2014 மற்றும் 08.09.2014 அன்று பணி ஆணைகள் வழங்கப்பட்டது. இதனிடையே ஒப்பந்ததாரர்கள் உடன்படிக்கைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் சுற்றறிக்கையின்படி பத்தி 5ல் உள்ளபடி புதிய நடைபாதைகளுக்கான வடிவமைப்புகள் மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால், ஏற்கனவே வடிவமைப்பிலுள்ள புதிய நடைபாதைகளை அமைப்பதற்கு மேற்கொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகளை ரத்து செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பத்தை ரத்து செய்து மறு ஒப்பம் கோரவும், மேற்படி ஒப்பங்கள் வழங்க அளிக்கப்பட்ட மன்றத் தீர்மானங்களை ரத்து செய்யவும், ஒப்பந்ததாரர்கள் அளித்த பிணை வைப்புத் தொகைகளை திருப்பி அளிக்கவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.13/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.18/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.9.சு.து.ந.க.எண்.எச்1/0475/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.26/2015 **பொருள் எண்.26**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர். கே. ஜமுனா ராணி மருத்துவ அலுவலர் சுகாதாரத்துறை, மண்டலம்–9 வகுப்பு 2ன் கீழ் வரும் தனியர் 31.01.2015 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல இருக்கின்றார்.

டாக்டர். கே. ஜமுனா ராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் 26.02.2009 முதல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். தனியர் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 26.02.2009 முதல் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 26.02.2011ல் தகுதி காண்பருவம் முடித்தவராகவும் அறிவித்து 17.10.2014 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர்.கே. ஜமுனா ராணி, மருத்துவ அலுவலர் சுகாதாரத்துறை மண்டலம்–9 அவர்கள் வயது முதிர்வு ஓய்வு பெற வேண்டிய நாள் 31.01.2015, தனியர் மீது துறை ரீதியாக எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. மேலும் தனியருக்கு சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

06.01.2015 நாளிட்ட குறிப்பின்படி டாக்டர்.கே. ஜமுனா ராணி மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை , மண்டலம்–9 அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்பு அலுவலரின் சான்று பெற்று இணைக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–10 அவர்களின் 05.12.2014 நாளிட்ட குறிப்பில் டாக்டர்.கே. ஜமுனா ராணி அவர்கள் பழைய மண்டலம்–8 (புதிய மண்டலம்–10)ல் மருத்துவ அலுவலராக 26.02.2009 முதல் 31.12.2010 வரை பணியாற்றிய காலத்தில் தற்போதுள்ள தணிக்கை ஆவணங்களின் அடிப்படையில் தணிக்கைத்தடையோ நேர் செய்யப்படாத முன்பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கையோ நிலுவையில் இல்லையென தெரியவருகிறது. இருப்பினும் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மூலம் தணிக்கைத்தடை இருப்பது யாதெனும் பின்னர் தெரியவரின் அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி ஓய்வூதிய அகவிலைப்படியில் இருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனையுடன் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–9 அவர்களின் 06.01.2015 நாளிட்ட குறிப்பின்படி டாக்டர்.கே. ஜமுனா ராணி மருத்துவ அலுவலர் அவர்கள் 01.01.2011 முதல் 31.03.2012 வரை மண்டலம்–9ல் மருத்துவ அலுவலராக மண்டலம்–9ல் பணிபுரிந்த காலங்களில் தனியர் மீது தணிக்கை தடை இல்லை என தெரிவிக்கப்பட்டது. மேலும், 01.04.2012 முதல் தணிக்கை அறிக்கை புத்தகங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையில் ஆய்வில் உள்ளது எனவும், தணிக்கை அறிக்கை புத்தகங்கள் வெளியிட்ட பின் மேற்படி காலத்திற்குண்டான விவரம் அளிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மண்டலம்–9ல் தனியர் மீது எந்தவிதமான முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவைகள் ஏதும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசாணை எண்.845/நிதி(அ)(ஒ) நாள்.19.10.1935 மற்றும் பிரிவு 918(P) தமிழ் நாடு ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதிய பணப்பயன் தொகைகள் தவறானது என்று பின்னர் தெரியவரின் அத்தொகை முழுவதையும் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி விடுகிறேன் என்ற உறுதிமொழி தனியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

வகுப்பு 2ன் கீழ் வரும் அலுவலர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றம் பெற்றுள்ளதால், தனியரை ஓய்வுபெற அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே, சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை மண்டலம்–9ல் பணிபுரியும் டாக்டர்.கே. ஜமுனா ராணி, மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்ட கால முன்பணம் நிலுவைகள் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரின் ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 31.01.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/54309 /2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.27/2015 **பொருள் எண்.27**

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.எஸ்.இளஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்(திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), தலைமையிடம், அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.12.2014பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார்.

திரு.எஸ்.இளஞ்செழியன், அவர்கள் சென்னை மாநகராட்சியில் ஓவர்சீயர் பதவியில் 18.08.1977 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது கண்காணிப்புப் பொறியாளர்(திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), தலைமையிடத்தில் பதவி உயர்வு பெற்று 31.12.2014 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மண்டலம்–08, 10, 14 மற்றும் பேருந்து சாலைகள் துறையை தவிர பிற துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலம்–08, 10, 14 மற்றும் பேருந்து சாலைகள் துறையில் தனியர் மீது தனியரை கூட்டுப்பொறுப்பாக்கும் கீழ்கண்ட தணிக்கை தடைகள் நிலுவையில் இருப்பதாக மண்டல அலுவலர்–14 மற்றும் கணக்கு அலுவலர்(தணிக்கை) அவர்களின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்கள்/துறைகளில் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் தனியர் மீது நிலுவையில் இல்லை என மண்டலங்கள்/துறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண் | தணிக்கை உட்படுத்தப்பட்ட தொகை ரூ | தடைக்கு பொறுப்பான பணியாளர் களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.எஸ். இளஞ்செழியன் செயற் பொறியாளரை பொறுப்பாக்கும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டலம்–08 (தற்போது புதிய மண்டலம்–10) | 2000–01 | 74(2) | 3844 | 2 | 1922 |
| 2 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2001–02 | 26 | 149967 | 3 | 49989 |
| 3 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2001–02 | 37 | 16715 | 3 | 5571 |
| 4 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2002–03 | 27(வ. எண். 3) | 26584 | 2 | 13292 |
| 5 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2002–03 | 43 | 22961 | 2 | 11480 |
| 6 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2002–03 | 69 | 8110 | 2 | 4055 |
| 7 | மண்டலம்–05 (தற்போது புதிய மண்டலம்–08) | 2002–03 | 81 | 2973 | 2 | 1486 |
| 8 | பேருந்து | 2010–11 | 32 | 51854 | 2 | 25927 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சாலைகள் துறை | | | | | |
| 9 | பேருந்து சாலைகள் துறை | 2010–11 | 45 | 961319 | 4 | 240329 |
| 10 | பேருந்து சாலைகள் துறை | 2010–11 | 52 | 118030 | 3 | 39343 |
| 11 | பேருந்து சாலைகள் துறை | 2010–11 | 54 | 67615 | 2 | 33807 |
| 12 | பேருந்து சாலைகள் துறை | 2010–11 | 59 | 14834 | 4 | 3708 |
| 13 | மண்டலம்–14 | 2013–14 | 8 | 19954 | 3 | 6652 |
| 14 | மண்டலம்–14 | 2013–14 | 27 | 163340 | 2 | 81670 |
| 15 | மண்டலம்–14 | 2013–14 | 42 | 674 | 3 | 225 |
| 16 | மண்டலம்–14 | 2013–14 | 48 | 38769 | 3 | 12923 |
| 17 | மண்டலம்–14 | 2013–14 | 58 | 33308 | 3 | 11103 |
| **மொத்தம்** | | | | | | **ரூ.543482** |

திரு.எஸ்.இளஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்(திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் வகுப்பு–1Bன் கீழ்வரும் கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

திரு. எஸ்.இளஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), தலைமையிடம் அவர்கள் **31.12.2014** அன்று வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதித்து அரசாணை.(ப).எண்.**556**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.**3**) துறை, நாள்**31.12.2014**ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்தொடர்ச்சியாக திரு.எஸ்.இளஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்(திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), தலைமையிடம் அவர்கள் மீது கூட்டுப்பொறுப்பில் உள்ள தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.**543482**/– யையும் மற்றும் தனியர் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி **31.12.2014** நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் மூலமாக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு தனியரை **31.12.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, திரு.எஸ்.இளஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்(திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் மற்றும் இயந்திரம்), தலைமையிடம் அவர்களை அரசாணையின்படி **31.12.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல அனுமதித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.வ.அ.ந.க.எண்.அ1/8663/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.28/2015 பொருள் எண்.28

**தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.என்.எஸ்.லட்சுமிபதி, உதவி செயற்பொறியாளர், வடக்கு வட்டார அலுவலகம் என்பவர் தான் 33 வருடங்களாக பணி செய்து வருவதாகவும், தற்பொழுது தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னால் தொடர்ந்து பணிபுரிய இயலவில்லை எனவும், தன்னை சென்னை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் பணியிலிருந்து தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு நியமனக் குழுவிற்கு 23.10.2014 அன்று மனு சமர்ப்பித்தார். அன்னாரது மனு நியமனக்குழு எண்.57/2014ன்படி பதியப்பட்டு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு வடக்கு வட்டார அலுவலகத்தில் பெறப்பட்டது.

திரு.என்.எஸ்.லட்சுமிபதி அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி வரைவாளராக 19.10.1981 அன்று பணியில் சேர்ந்து பின்னர் 17.02.2012 முதல் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு வடக்கு வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்ளிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தனிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவி | துறை/மண்டலம் | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1 | உதவி வரைவாளர் | மழைநீர்வடிகால் துறை | 19.10.1981 | 10.05.1990 |
| 2 | வரைவாளர் | கட்டடத்துறை | 11.05.1990 | 11.02.1996 |
| 3 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–13 (பழைய மண்டலம்–10) | 12.02.1996 | 03.04.1998 |
| 4 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–6 (பழைய மண்டலம்–3) | 04.04.1998 | 01.06.2000 |
| 5 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–5 (பழைய மண்டலம்–2) | 02.06.2000 | 16.02.2012 |
| 6 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–2 (மணலி) | 17.02.2012 | 01.11.2013 |
| 7 | உதவி செயற்பொறியாளர் | பேருந்து சாலைத்துறை (மாற்றுப்பணி மண்டலம்–2) | 02.11.2013 03.11.2013 விடுப்பு பதவி உயர்வு 04.11.2013 பணியில் சேர்ந்தது 05.11.2013 | 09.04.2014 |
| 8 | உதவி செயற்பொறியாளர் | வடக்கு வட்டார அலுவலகம் | 09.04.2014 | 23.01.2015 பிற்பகல் வரை |

திரு.என்.எஸ்.லட்சுமிபதி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் எனவும், கண்காணிப்புத் துறை மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகமிடத்தில் இருந்து ஒழுங்கு நடவடிக்கை விசாரணை குறித்த அறிக்கை இந்நாள் நிலுவை ஏதும் இல்லை என அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத்தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் வகித்து வரும் உதவி செயற்பொறியாளர் பதவி வகுப்பு–IIன் கீழ்வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றம் பெற்றுள்ளது.

**14.01.2015** நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு.என்.எஸ்.லட்சுமிபதி, உதவி செயற்பொறியாளர், வடக்கு வட்டார அலுவலகம் அவர்கள் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை **23.01.2015** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து தனியரை விடுவிக்கப்பட்டது.

எனவே, திரு.என்.எஸ்.லட்சுமிபதி, உதவி செயற்பொறியாளர், வடக்கு வட்டார அலுவலகம் அவர்களை **23.01.2015** அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1 /2316/ 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 மற்றும் 29.01.2015 நாளிட்ட குறிப்புகள்**

தீர்மான எண்.29/2015 **பொருள் எண்.29**

**கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு 01.02.2015ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | கண்காணிப்புப் பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 01.02.2015 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8700 | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | **அ) செயற் பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,**<br>**ஆ) செயற் பொறியாளர் பதவியில் 6 ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.**<br>**இ) அயற்பணியில் நியமனம்** | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 09 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 09 |
| | | 2. அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 09 |
| | | 3. தற்பொது கண்காணிப்புப் பொறியாளராக பணிபுரிபவர்கள் | – | 06 |
| | | 4. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 00 |
| | | 5. மைய நாளில் ஏற்பட்ட காலிப்பணியிடம் | – | 03 |
| | | 6. 01.02.2015 முதல் 31.01.2016 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 03 |
| | | 7. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 01 |
| | | 8. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | 00 |
| | | **மொத்த காலிப்பணியிடம்** | **–** | **07** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | | –ஆம்– | |

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| **வ. எண்** | **பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம்** | **செயற் பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்** | **இரண்டு ஆண்டு பணி முடிக்கும் காலம்** | **ஓய்வு பெறும் நாள்** | **மைய நாளில் செயற் பொறியாளர் பதவியில் தற்போது வரை பணி புரிந்துள்ள காலம்** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| 01 | ப்பி.டி.ராமன் நகரமைப்பு அமலாக்கப்பிரிவு வட்டார துணை ஆணையர் (வடக்கு) | 09.04.2012 | 09.04.2014 | 31.12.2015 | 2 வருடம் 8 மாதங்கள் | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அலுவலகம். | | | | | கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 02 | எஸ்.காளிமுத்து, மண்டலம்–08. | 11.01.2013 | 11.01.2015 | 30.04.2021 | 2 வருடம் 1 மாதம் | – |
| 03 | ஆர்.ரங்கநாதன், மண்டலம்–10. | 11.01.2013 | 11.01.2015 | 28.02.2017 | 2 வருடம் 1 மாதம் | – |
| 04 | கே.சின்னசாமி மண்டலம்–11. | 11.01.2013 | 11.01.2015 | 31.05.2019 | 2 வருடம் 1 மாதம் | – |
| 05 | எல்.நந்தகுமார், தலைமையிடம். | 11.01.2013 | 11.01.2015 | 31.05.2021 | 2 வருடம் 1 மாதம் | – |
| 06 | எம்.முருகன், மண்டலம்–09. | 11.01.2013 | 11.01.2015 | 31.03.2019 | 2 வருடம் 1 மாதம் | – |
| 07 | ப்பி.துரைசாமி மண்டலம்–05. | 11.01.2013 | 11.01.2015 | 31.08.2020 | 2 வருடம் 1 மாதம் | – |
| 08 | எஸ்.சக்திமணிகண்டன், மண்டலம்–03 | 11.01.2013 | 11.01.2015 | 31.08.2020 | 2 வருடம் 1 மாதம் | – |

மேற்கண்ட மண்டல செயற்பொறியாளர்களில் வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ளவர்கள் செயற்பொறியாளர் பதவியில் 2 ஆண்டுகாலம் பணிமுடித்துள்ளனர்.

கடந்த 2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து அரசாணை (ப) எண்.273 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை, நாள்:28.07.2014ல் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு ஊட்டப்பதவியான செயற்பொறியாளர் பதவியில் 6 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை 2 ஆண்டுகளாக தளர்வு செய்து, 2014–2015ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவி மிகவும் பொறுப்புமிக்க பதவி என்பதாலும், நிர்வாக நலன் கருதி கண்காணிப்புப் பொறியளார் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை இவ்வாண்டும் தளர்வு செய்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெறுவது குறித்து பரிசீலிக்கலாம்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான செயற் பொறியாளர் பதவியில் உள்ளவர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படின், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| **வ. எண்** | **பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம்** | **செயற்பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்** | **தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா** | **தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்)** |
|---|---|---|---|---|
| 01 | ப்பி.டி.ராமன் நகரமைப்பு அமலாக்கப்பிரிவு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம். | 09.04.2012 | இல்லை | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10(b)வில் இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் **தனியரின் பெயரை பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |

| | | | | |
|---|---|---|---|---|
| 02 | எஸ்.காளிமுத்து, மண்டலம்–08. | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர்நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 03 | ஆர்.ரங்கநாதன், மண்டலம்–10. | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 04 | கே.சின்னசாமி மண்டலம்–11. | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 05 | எல்.நந்தகுமார், தலைமையிடம். | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 06 | எம்.முருகன், மண்டலம்–09. | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 07 | ப்பி.துரைசாமி மண்டலம்–05. | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |
| 08 | எஸ்.சக்தி மணிகண்டன், மண்டலம்–03 | 11.01.2013 | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் ஆறு ஆண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி **இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம்.** |

எனவே,

1. கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் 6 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 01.02.2015ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கீழ்கண்ட செயற்பொறியாளர்களை கொண்ட கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,

| **வ. எண்** | **பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம்** | **செயற்பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்** |
|---|---|---|
| 01 | எஸ்.காளிமுத்து, மண்டலம்–08. | 11.01.2013 |
| 02 | ஆர்.ரங்கநாதன், மண்டலம்–10. | 11.01.2013 |
| 03 | கே.சின்னசாமி மண்டலம்–11. | 11.01.2013 |
| 04 | எல்.நந்தகுமார், தலைமையிடம். | 11.01.2013 |
| 05 | எம்.முருகன், மண்டலம்–09. | 11.01.2013 |
| 06 | ப்பி.துரைசாமி மண்டலம்–05. | 11.01.2013 |
| 07 | எஸ்.சக்தி மணிகண்டன், மண்டலம்–03 | 11.01.2013 |

2. மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள/அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.37400–67000+தர ஊதியம் ரூ.8700 என்ற ஊதிய விகிதத்தில் கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்,

மேற்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.”

“இப்பொருளினை பொருத்தமட்டில் முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.01.2015 நாளிட்ட குறிப்பின்படி 2015–16ஆம் ஆண்டிற்கான கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலில் 7 நபர்களை கொண்ட திருத்திய தெரிவு பட்டியலினை அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/3573/2014.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.30/2015 **பொருள் எண்.30**

**சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 2 துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை கீழ்நிலை பணியில் உரிய பணிக்காலம் பெறாத இரண்டு நபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தளர்வு செய்து அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் அரசாணை எண்.79, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.09.03.2001ல் ஒரு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை தொடர அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 28.08.1998–ன்படி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகள் மற்றும் காலமுறை ஊதியம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | துணை திட்ட ஒருங்கிணைப்பாளர், வகுப்பு – 1.பி | | |
| 2 | மைய நாள் | 01.02.2015 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37,400–67,000+தர ஊதியம் ரூ.8,700/– | | |
| 4. | ஊட்ட பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | 1)மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம்<br>2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடமிருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல்.<br>3)மாவட்ட குடும்ப நலத்துறையில், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக (ஊட்டப்பதவி) 2 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்க வேண்டும்.<br>4)தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலருக்கு இணையான பதவியில் பொறுப்பில் இரண்டு ஆண்டுகள் குறையாது பணிபுரிந்து இருத்தல் வேண்டும்.<br>5) மருத்துவத் தொகுப்பு மற்றும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் | | |
| 5. | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 01 |
| | | 2. அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 01 |
| | | 3. தற்போது துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக பணிபுரிபவர் | – | 01 |
| | | 4. மைய நாளில் ஏற்பட்ட காலிப்பணியிடம் | – | 01 |
| | | 5. 01.02.2015 முதல் 31.01.2016 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 00 |
| | | 6. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | 00 |
| **மொத்த காலிப்பணியிடம் – 01** | | | | |
| 6. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | கடந்த ஆண்டு காலிப் பணியிடம் இல்லாததால் தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை. | | |

சென்னை மாநகராட்சியில் துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

தற்போது துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்கள் பதவியில் முதுநிலைப்படி கீழ்கண்ட மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| வ.எண். | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பெயர் | பணிபுரியும் இடம் |
|---|---|---|
| 1 | டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத் | மாவட்ட குடும்ப நலத்துறை |
| 2 | டாக்டர். திருமதி. ஆர். மனோஹரி | மாவட்ட குடும்ப நலத்துறை |

2015–2016–ம் ஆண்டிற்கான துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்க மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் மூப்பு நிலையில் தகுதிவாய்ந்த மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களின் பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எண். | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பெயர்/பதவி/ பணிபுரியும் இடம் | வளர்நிலை பதவியில் பணியில் சேர்ந்த நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா | மந்தன அறிக்கை விவரம் | தெரிவுப்பட்டியலில் தவிர்ப்பதற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.திருமதி. ஷீலா கோபிநாத், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை. | 04.06.2014 | ஆம் | பெறப்பட்டு உள்ளது | ஊட்டப் பதவியில் 2 வருடங்கள் பணியாற்றவில்லை எனினும், நிர்வாக நலன் கருதி, மாவட்ட குடும்ப நலத்துறை மருத்துவ அலுவலர் பதவியில் 2 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதிகயை தளர்வு செய்து, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பரிசீலிக்கலாம். |
| 2. | டாக்டர். திருமதி. ஆர். மனோஹரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை | 05.09.2014 | இல்லை | பெறப்பட்டு உள்ளது | ஊட்டப் பதவியில் 2 வருடங்கள் பணியாற்றவில்லை, எனினும், நிர்வாக நலன் கருதி, மாவட்ட குடும்ப நலத்துறை மருத்துவ அலுவலர் பதவியில் 2 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதிகயை தளர்வு செய்து, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பரிசீலிக்கலாம். |

வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி, மேற்படி அலுவலர்கள் அனைத்து தகுதிகள் பெற்றுள்ள போதிலும், ஊட்ட பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணி நிறைவு செய்யவில்லை எனினும், பின்வரும் காரணங்களுக்காக மூத்த மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களான டாக்டர்.திருமதி. ஷீலா கோபிநாத் மற்றும் டாக்டர்.திருமதி.ஆர். மனோஹரி ஆகியோர்களது பெயரினை பரிசீலிக்க வேண்டியுள்ளது. இவர்கள் முறையே , மண்டல அலுவலர் பதவியில் 3 வருடம் 5 மாத காலம் மற்றும் 2 வருடம் 10 மாத காலம் பணிநிறைவு செய்துள்ளதாலும், மருத்துவ அலுவலர் பதவியில் 14 வருடங்கள் 6 மாத காலம் பணி நிறைவு செய்து, அனுபவமிக்க அலுவலர்களாக உள்ளதாலும் இவர்களது பெயரினைக் கொண்டு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு பின்வரும் காரணங்களுக்காக நிரப்ப வேண்டியுள்ளது.

1) சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் மூலம் சென்னை மாநகரில் வாழும் 70 இலட்சம் மக்களில் 50 விழுக்காடு தாய்சேய் நல மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.
2) 15 இருபத்து நான்கு மணி நேர அவசர கால சிகிச்சை பிரிவுகளும் அறுவை அரங்குகளும் சேர்த்து 133 நகர நலவாழ்வு மையங்களுடன், மேற்கூறப்பட்ட சென்னை நகர் மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது. மாநகராட்சி அவசர சிகிச்சை பிரிவின் மூலம் ஒரு வருடத்திற்கு சுமார் 15,000 பிரசவங்கள் நடைபெறுகிறது.

3) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் 2013–14 ஆம் ஆண்டில்31,810 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலா ரூ.12,000/– வீதம் ரூ.38,17,20,000/– நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
4) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின்கீழ் 17.5.2011 முதல் சுமார் 6,591 பயனாளிகளுக்கு திருமண உதவி ரூ.25,000/– வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 6176 பட்டப்படிப்பு படித்தவர்கள்) சிறப்பு பயனாளிகளுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.
5) மத்திய அரசு திட்டமான ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலா ரூ.600/– வீதம் சுமார் 14,060 பயனாளிகளுக்கு உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
6) ஆண்டுதோறும் சுமார் 15,000 தாய்மார்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை நடைபெறுகிறது.
7) பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட சுமார் 5 இலட்சம் குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு தவணைகளில் போலியோ சொட்டுமருந்து அளிக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
8) 2004–ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சி மகப்பேறு மருத்துவ மனைகளில் பல சிக்கலான பிரசவகளும் (சிசேரியன்) நடைபெறுகிறது.
9) சென்னை மாநகராட்சியின் தாய்சேய் நலத்திட்டத்தின் கீழ் நமது மாநகராட்சி மகப்பேறு மையங்களில் கீழ்கண்ட வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள நிகழ்வுகள், தனியார் மருத்துவ மனைகளின் கீழ் நடைபெறும் பிரசவங்கள், குடும்ப நல முறைகள், சிசு மரணம், தாய் மரணம் ஆகியவற்றை மேற்பாாவையிட்டு ஆய்வு செய்யும் பணி, குடும்ப நல இயக்குனரகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் முக்கியமான பொறுப்பு இப்பதவிக்கு உரியதாகும்.
10) மேலும், சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்டதைத் தொடர்ந்து 8 புதிய மண்டலங்கள் உருவாகியுள்ளன. அங்கு வசிக்கும் கூடுதலான 25 லட்சம் மக்களுக்கு 24 மணி நேர மருத்துவமனை மற்றும் நகர நலவாழ்வு மையங்கள் மூலமாக தாய்சேய் மற்றும் குடும்ப நல சேவைகள் வழங்கும் பணி சிறப்பாக செயல்படுத்த வேண்டியுள்ளது.

| வ. எண். | நிகழ்வுகள் | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிரசவங்கள் | 16503 | 18027 | 17502 | 16457 | 14643 |
| 2 | குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை | 13920 | 14184 | 13492 | 11993 | 10610 |
| 3 | காப்பர்–டி | 23772 | 23820 | 23809 | 26742 | 25918 |
| 4 | ஒரு வயது குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி | 76379 | 73615 | 43565 | 84728 | 81201 |
| 5 | கருச்சிதைவு | 3007 | 2753 | 2079 | 1952 | 1731 |

டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத் மற்றும் டாக்டர்.திருமதி.ஆர்.மனோஹரி ஆகியோரது பெயர்களை நிர்வாக நலன் கருதி மாவட்ட குடும்ப நலத்துறை மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு வருடம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியினை தளர்வு செய்து துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகரில் பெருகிவரும் மக்கள் தொகையில், பொருளாதார நலிவுற்ற மக்களுக்கு, குறிப்பாக தாய்சேய் நல பணியினை விரிவுபடுத்தி அன்றாட மருத்துவ சேவைகளை நிறைவேற்றிட துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை உடனடியாக நிரப்ப வேண்டியுள்ளது.

டாக்டர். திருமதி. ஷீலா கோபிநாத் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் மற்றும் டாக்டர். திருமதி. ஆர். மனோஹரி மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், ஆகியோர்கள் மீது துறைசம்மந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. இவர்களின் பணி திருப்திகரமாக உள்ளது என மந்தன அறிக்கை கடந்த 5 ஆண்டுகளுக்கு பெறப்பட்டுள்ளது.

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி ஊட்டப் பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும். ஆனால் தனியர்களான டாக்டர். திருமதி, ஷீலா கோபிநாத், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் மற்றும் டாக்டர். திருமதி. ஆர். மனோஹரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் ஆகியோர் முறையே 6 மாதம் மற்றும் 4 மாதம் மட்டுமே கீழ்க்கண்டவாறு பணியாற்றி வருகிறார்கள்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பணியில் பதவி உயர்வு வழங்கிய நாள் | ஊட்டப் பதவியில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | டாக்டர். ஷீலா கோபிநாத் | 04.06.2014 | 6 மாதங்கள் |
| 2. | டாக்டர். ஆர். மனோஹரி | 05.09.2014 | 4 மாதங்கள் |

எனவே, உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களின் 08.01.2015 நாளிட்ட குறிப்பின்படி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி ஊட்டப்பதவியில் இரண்டு ஆண்டு காலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து தெரிவுப்பட்டியல் தயாரிப்பதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்புவதற்கும், நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/18898 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.31/2015 **பொருள் எண்.31**

**குற்றச்சாட்டு கைவிடப்பட்டதால் திரு.என்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பெயரை 2013–2014ம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் தெரிவு பட்டியலில் சேர்த்து கருத்தியலாக பதவி உயர்வு வழங்கி திருத்திய தெரிவு பட்டியல் வெளியிட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

திரு. என்.திருமுருகன், உதவி செயற் பொறியாளர், மண்டலம்–11 அவர்கள் கோட்டம்–67, மண்டலம்–5ல் பணிபுரியும்போது, அக்கோட்ட அலுவலகத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் துய்த்துள்ள விடுப்பு விவரங்களை, சம்பந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தவறியதற்காக, தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு, மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1970, துணை விதி எண்.10(b)ன் கீழ் 03.01.2012 அன்று குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் பொழுது, திரு. என்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது துணை விதி 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருந்ததால், 22.05.2013 நாளிட்ட மன்றத் தீர்மானத்தின்படி, தனியரின் பெயர் செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது.

மேலும், தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு, 8.12.2014 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, தனியரின் பெயரை 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்த்து, கருத்தியலாக செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். எனவே, 22.05.2013 நாளிட்ட மன்ற தீர்மான எண்.352/2013ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 2013–2014ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு என்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) தெரிவுப்பட்டியலில் வரிசை எண். **6B**ல் இடம்பெற்றுள்ள திரு.எஸ். ரவிச்சந்திரன், அவர்கள் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ரூ. 15600– 39100+ 6600 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளராக கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

எனவே, தனியரின் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் மீது மேல்நடவடிக்கை கைவிடப்பட்டதால், அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (S) துறை நாள் 18.10.1993ல் தெரிவித்துள்ளவாறு (Notional Promotion) கருத்தியலான பதவி உயர்வு வழங்கி திரு.என்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.எஸ்.ரவிச்சந்திரன், அவர்கள் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) பதவி உயர்வு வழங்கப்படின் 2013–14ஆம் ஆண்டுக்கான செயற் பொறியாளர் தெரிவுப்பட்டியலில் வரிசை எண். **6A(1)** என தனியருடைய மூப்பு நிலை கீழ்கண்டவாறு அமைகிறது.

| வ. எண் | திருத்தியமைக்கப்படும் மூப்புநிலை | செயற்பொறியாளர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | 6 | திரு.ஆர்.செந்தில்நாதன் |
| 2 | 6A | திரு.எ.நாச்சான் |
| 3 | **6A(1)** | **திரு.என்.திருமுருகன்** |
| 3 | 6B | திரு.எஸ்.ரவிச்சந்திரன் |
| 4 | 6C | திரு.ஆர்.சுரேஷ்குமார் |
| 5 | 7 | திரு.கே.உமாபதி |

சென்னை மாநகராட்சியில் தற்போது செயற்பொறியாளர் பதவியில் காலிப்பணியிடம் இல்லாததால், **2013–2014**ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், வரிசை எண்.**11**ல் இடம்பெற்றுள்ள திரு.கே.சுந்தரராஜன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்க பிரிவு/வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) பணிமாற்று அடிப்படையில் மண்டலம்–**8**ல் பணிபுரியும் அவர்களை மீண்டும் உதவி செயற்பொறியாளராக பதவி இறக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

எனவே,

1. **2013–14**ஆம் ஆண்டுக்கான செயற் பொறியாளர் தெரிவுப்பட்டியலில் திரு.என்.திருமுருகன், உதவி செயற்பொறியாளர் அவர்களை வரிசை எண். **6A(1)**ல் மூப்பு நிலை நிர்ணயித்து, உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.எஸ்.ரவிச்சந்திரன், அவர்கள் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாள் முதல் முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருதிதியலான பதவி உயர்வு வழங்கியமைக்கும்,

2. **2013–2014**ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.**11**ல் இடம்பெற்றுள்ள திரு.கே.சுந்தரராஜன், செயற்பொறியாளர், நகரமைப்பு அமலாக்க பிரிவு / வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு) பணிமாற்று அடிப்படையில் மண்டலம்–**8** ல் பணிபுரியும் அவர்களை மீண்டும் உதவி செயற்பொறியாளராக பதவி இறக்கம் செய்து பணியமர்வு ஆணை வழங்கியமைக்கும்,

மேற்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>தி.க.மே.து.பொ.ப.சா.ந.எண்.அ3/75/2013</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையாளர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.32/2015 **பொருள் எண்.32**

**<u>சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் – ரூ.1.50 கோடி ஒதுக்கீடு – சென்னை மாநகராட்சி துப்புரவு பணிகளுக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 750 எண்ணிக்கையில் வாங்க ஒப்பங்கள் கோரப்பட்டு பெறப்பட்டன – ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது – பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி–சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் – சென்னை மாநகரின் விரிவாக்கப்பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் உள் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.386.61 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கும் மற்றும் விரிவாக்கப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வாகனங்கள், உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூ.13.70 கோடியிலான திட்ட மதிப்பீட்டிற்கும், அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டு, இந்த அரசாணையை நடைமுறைப்படுத்த மன்ற தீர்மான எ.483/2013 நாள் 11.7.2013 ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. இதன்படி, துப்புரவு பணிகளுக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 750 எண்ணிக்கையில் ரூ.1.50 கோடி மதிப்பில் கொள்முதல் செய்ய ஒப்பங்கள் கோரப்பட்டு 25.10.2013 அன்று பெறப்பட்டன. இவ்வொப்பந்தத்தில் நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். விவரங்கள் கீழ்வருமாறு :

1) திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிட்.,
2) திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ்
3) திருவாளர் டி.பி.எஸ். இன்பராஸ்டரக்சர்ஸ் லிட்.,
4) திருவாளர் சுதா எண்ஜினியரிங் வொர்க்ஸ்.

திருவாளர் சுதா எண்ஜினியரிங் வொர்க்ஸ் நிறுவனம், முதலைமைச்சர் தனிப்பிரிவிற்கு அளித்த 18.10.2013 நாளிட்ட மனுவில், அவர்களுடைய நிறுவனம் சிறு தொழில் நிறுவனம் என்றும் சென்னை மாநகராட்சியில் 750 எண்ணிக்கையில் காம்பாக்டர் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளது என்றும் எங்கள் நிறுவனத்திற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என கோரிக்கை அளித்துள்ளார்கள். இது குறித்து இந் நிறுவனத்திற்கும் முதலைமைச்சர் தனிப்பிரிவிற்கும் பதில் அளிக்கப்பட்டது. இதனால் விலைப்புள்ளிகள் திறப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிட்., மற்றும் திருவாளர் டி.பி.எஸ். இன்பராஸ்டரக்சர்ஸ் லிட்., மட்டுமே விலைப்புள்ளிகளை திறப்பதற்கு தகுதியுடையவராக இருந்தார்கள். மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களான திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ் மற்றும் திருவாளர் சுதா எண்ஜினியரிங் வொர்க்ஸ் நிறுவனங்கள் தகுதியற்றவராவார்கள்.

தகுதியுடைய ஒப்பந்ததாரர்களான திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிட்., மற்றும் திருவாளர் டி.பி.எஸ். இன்பராஸ்டரக்சர்ஸ் லிட்., நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் 20.12.2013 அன்று திறக்கப்பட்டன. இதில் திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிட்., நிறுவனம் குப்பை தொட்டி ஒன்றின் விலை ரூ.14,950/– என குறைந்த விலைப்புள்ளி அளித்தது. மேலும் இந் நிறுவனம் விலை குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்னர் குப்பை தொட்டி ஒன்றின் விலை ரூ.14,925/– என அளித்தது.

ஜனவரி 2014ல் திடக்கழிவு மேலாண்மை துறையின் அமைப்பு Decentralized செய்யப்பட்டு, நிர்வாக அமைப்பு திருத்தி அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் பணிப்பொருட்களை அந்தந்த வட்டார அலுவலகங்களிலேயே கொள்முதல் செய்ய வேண்டும் என முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. இந்த ஒப்புதலின்படி, பணிப்பொருட்களை அந்தந்த வட்டார அலுவலகங்களில் கொள்முதல் செய்யவேண்டும் என அறிவுறுத்தப்பட்டு 25.2.2014 தேதியிட்ட குறிப்பு அனுப்பப்பட்டது. இந் நிலையில் பாராளுமன்ற தேர்தல்–2014 தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் பணிகள் நடைபெற்று வந்ததால் இக் கோப்பின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிட்., அளித்த விலைப்புள்ளியின் செல்லத்தக்க காலம் முடிவடைந்து விட்டது.

**11.6.2014** அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் நடந்த சீராய்வு கூட்டத்தில், துணை ஆணையர் அவர்கள் இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் தற்போது சரியான முறையில் கையாளப்படுவதில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு இனி வருங்காலங்களில் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்து துப்புரவு பணிகளுக்கு பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

மன்ற தீர்மான எண். **354/2014** நாள் **25.6.2014**ன்படி, இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் தற்போது சரியான முறையில் கையாளப்படுவதில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், பணிகளின் போது வடிவமைப்பால் சிரமம் ஏற்படுவதாகவும், பழுதுபார்க்கும் பணிகளுக்கென தேவையற்ற அதிக செலவினம் ஏற்படும் என்பதாகவும் இனி வருங்காலங்களில் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலக தரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்டு கொள்முதல் செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி எச்.டி.பி.இ. பிளாஸ்டிக் காம்பாக்டர் குப்பை தொட்டிகளை தேவைக்கேற்ப அந்தந்த வட்டார அலுவலகங்களினால் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய காரணங்களினால் **750** எண்ணிக்கையில் காம்பாக்டர் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் துணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் ஒப்பந்த குழுமத்தினால் ரத்து செய்யப்பட்டது. இருப்பினும் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி கீழ்கண்டவற்றின் மீது வேண்டப்படுகிறது.

1. துப்புரவு பணிகளுக்கு தேவையான **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் **750** எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய **25.10.2013** அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அளிக்க வேண்டியும் மற்றும் இது குறித்து அரசுக்கு பதில் அளிக்கவும்,

நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**16/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண்.**22/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**வ.து.ந.க.எண்.தொ.பி./1420/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.33/2015 பொருள் எண்.33

**சென்னை மாநகராட்சி – வருவாய்த்துறை – நிறுமம் வரி — விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிறுமம் வரி வசூலிக்க அரசின் ஆணை கோரியது – அரசின் அறிவுரைகள் சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 110ன்படி முந்தைய சென்னை மாநகராட்சி எல்லை பகுதியான பழைய மண்டலம் 1 முதல் 10 வரை (தண்டையார்பேட்டை முதல் அடையாறு வரை) நிறும பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் நிறுமங்களுக்கு / கிளை நிறுமங்களுக்கு நிறுமத்தின் முதலீட்டு மதிப்புக்கேற்ப மேற்படி சட்ட விதி அட்டவணை–4, பகுதி–2 பின்வருமாறு வரையறுக்கப்பட்டு நிறுமம் வரி வசூலிக்கப்பட்டு வந்தது.

**ASSESSMENT OF COMPANIES**
**(See Section 110)**

7. Companies shall be assessed by the commissioner on the following scale :-

| | Paid-up capital (Lakhs of rupees) | Half-yearly Tax Rs. |
|---|---|---|
| A. | Less than one | 30 |
| B. | One and more than one, but less than two | 50 |
| C. | Two and more than two, but less than three | 100 |
| D. | Three and more than three, but less than five | 150 |
| E. | Five and more than five, but less than ten | 200 |
| F. | Ten and more than ten, but less than twenty | 500 |
| G. | Twenty and more than twenty | 1,000 |

Provided that any company, the head or a principal office of which is not in the city and which shows that its gross income received in or from the city in the year immediately preceding the year of taxation:-

| | |
|---|---|
| (a) has not exceeded Rs.5,000 | Shall pay only 25 rupees per half-year; |
| (b) has exceeded Rs.5,000 but has not exceeded Rs.10,000 | Shall pay only 50 rupees per half-year; |
| | Shall pay only 100 rupees per half-year; |
| (c) has exceeded Rs.10,000 but has not exceeded Rs.20,000 | |
| (d) has exceeded Rs.20,000 | Shall pay per half-year 100 rupees together with a sum calculated at the rate of 25 rupees per half-year for every 5,000 rupees or part thereof of gross income in excess of Rs.20,000 subject to a maximum half-yearly tax of 1,000 rupees. |

Provided further that when a company, the head or a principal office of which is not in the city becomes liable to tax for the first time, it shall pay in the first year at tax of 25 rupees, but if the gross income of the company during such year is subsequently found to have exceeded 5,000 rupees, it shall pay the tax calculated in accordance with the above mentioned scale less the initial payment of 25 rupees.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 45ல், 42 பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளைக்கொண்டு சென்னை மாநகராட்சி எல்லைப்பரப்பு 200 வார்டுகளைக்கொண்டு மண்டலம் 1 முதல் 15 வரை என்று 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

இம்மண்டலங்களில் விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளான மண்டலம் – 1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய இடங்களில் இயங்கி வரும் நிறுமங்களுக்கு / கிளை நிறுமங்களுக்கு நிறுமத்தின் முதலீட்டு மதிப்புக்கேற்ப சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 110, அட்டவணை–4, பகுதி–2ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு நிறுமம் வரி 2/2011–12 முதல் வசூலிக்க மன்றத்தீர்மான எண்.94/2012, நாள் 18.04.2012 தேதியிட்டு

தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து அரசாணை வெளியிடவும், அதன் விவரங்களை அரசிதழில் வெளியிடவும் 08.05.2012 தேதியிட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.12487/மாநு1/2012, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 10.06.2013 தேதயிட்ட கடிதத்தில் நிறும வரியினை முன்தேதியிட்டு வசூலிக்க இயலாது என்றும், எதிர்வரும் தேதியைக்கொண்ட வரிவிதிக்க முடியும் என்றும் தெரிவித்து, அரசிதழில் வெளியிடுவதற்கான வரைவு அறிவிக்கையினை அனுப்பிவைக்குமாறு அரசு கேட்டுக்கொண்டது.

அரசின் அறிவுரைக்கிணங்க, மன்றத் தீர்மான எண்.496/2013, நாள் 26.07.2013ல் விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிறும வரியினை விதிக்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு–98ஏ–ன்படி தமிழ் நாடு அரசிதழ் மற்றும் உள்ளூர் செய்தித்தாள் வெளியிடவும், ஆட்சேபனை இருப்பின் அதனை தெரிவிக்க 1 மாத கால அவகாசம் அளித்து அறிவிப்பு வெளியிட மன்றம் தீர்மானம் நிறைவேற்றியதை தொடர்ந்து 02.10.2013 தேதியிட்டு அரசிதழ் பகுதி 3, பிரிவு 2ல் அறிவிக்கை வெளியிடப்பட்டது. உரிய கால அவகாசத்திற்குள் ஆட்சேபனை வரப்பெறாததை தொடர்ந்து விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளில் நிறும வரியினை விதிக்க, அரசாணை கோரி மன்றத் தீர்மான எண்.805/2013, நாள் 27.12.2013ல் தீர்மானம் நிறைவேற்றி, அரசுக்கு திருத்திய செயற்குறிப்பு 08.01.2014 தேதியிட்டு அனுப்பப்பட்டது.

அரசு கடித எண்.12487/மாநு1/2012, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.10.2014ல் “ தமிழ்நாடு நகராட்சிக்குரிய திருத்தப்பட்ட சட்டம் 2012 (திருத்தப்பட்ட சட்டம் எண்.7/2012) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 414–ஏ–ல் 25.10.2011 முதல் சென்னை மாநகராட்சி எல்லையுடன் அறிவிக்கப்பட்டு இணைக்கப்பட்ட 42 பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919ல் வரையறுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் கருதப்படக் கூடியதாகும் என்பதால், விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளான மண்டலம் – 1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய இடங்களில் இயங்கி வரும் நிறுமங்களுக்கு / கிளை நிறுமங்களுக்கு நிறுமம் வரி வசூலிக்க தனியே அரசாணை தேவையில்லை என கருதி, அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பினை மறுபரிசீலனை செய்து உரிய நடவடிக்கை தொடருமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி அரசு தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 110ன்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதிகளான மண்டலம் – 1, 2, 3, 7, 11, 12, 14 மற்றும் 15 ஆகிய இடங்களில் நிறும பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் நிறுமங்களுக்கு / கிளை நிறுமங்களுக்கு நிறுமத்தின் முதலீட்டு மதிப்புக்கேற்ப சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919 துணை விதி 110, அட்டவணை–4, பகுதி–2ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு நிறுமம் வரி 25.10.2011 முதல் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 20/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சி.தி.ந.க.எண்.பி2/061/2015</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.34/2015 **பொருள் எண்.34**

**<u>சென்னை மாநகராட்சி– சிறப்பு திட்டங்கள்– தரமணி இரயில் நிலையம் முதல் வேளச்சேரி இரயில் நிலையம் வரை 18 மீட்டர் அகலமுடைய சாலை அமைத்தல் – இரயில்வே துறையின் மூலமாக சாலையினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோருவது சம்பந்தமாக மன்றத்தின் அனுமதி</u>**

சென்னை வேளச்சேரி இரயில் நிலையத்தில் இருந்து, தரமணி இரயில் நிலையம் வரை 18மீ அகலமுள்ள புதிய சாலை அமைக்கும் பணிக்கான திட்டத்தை தெற்கு இரயில்வே துறையினரால் 2009 ம் ஆண்டு தொடங்கப்பட்டது. பெருங்குடி பரணி தெரு முதல் வேளச்சேரி இரயில் நிலையம் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் சிறிய பாலம் அமைக்கும் பணி ரயில்வே துறையினரால் துவங்கப்பட்டு அப்பணிகள் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டது. 17.11.2011 அன்று நடைபெற்ற உயர்மட்டக் ஒருங்கிணைப்புக்குழு ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின்படி இரயில்வே துறையால் துவங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட பணிகள் மற்றும் புதிதாக மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு இரயில்வே துறையின் மூலமாக கோரப்பட்டது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையால் வேளச்சேரி இரயில் நிலையத்தின் அருகாமையில் உள்ள பாலத்தில் (Six vent)லிருந்து பெருங்குடி இரயில் நிலையம் வரை இணைப்பு சாலையில் வடக்கு பக்கம் 3 மீ x 1.5 மீ அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் 1450 மீ நீளத்திற்கு 6.52 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இரயில்வே துறையின் மூலம் பணிகளை மேற்கொள்ள தயாரித்த வடிவமைப்பு, வரைபடங்கள், மதிப்பீடுகள், முடிக்கப்பட்ட பணிகளின் விவரம் ஆகியவைகளை இரயில்வே துறையை சென்னை மாநகராட்சிக்கு அளிக்குமாறு 21.03.2013 (ம) 09.05.2013 அன்று நடைபெற்ற உயர்மட்டக் ஒருங்கிணைப்புக் குழு ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மாண்புமிகு மேயர் அவர்களால் 25.05.2013 அன்று பொது மேலாளர் / தென்னக இரயில்வே அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இரயில்வே நிர்வாகத்திடமிருந்து வடிவமைப்பு, வரைபடங்கள், மதிப்பீடுகள் 06.06.2013 அன்று பெறப்பட்டு, சென்னை மாநகராட்சி பேருந்து சாலை துறையினரால் தார் சாலை அமைக்கும் பணிக்காக மதிப்பீடுகள் ரூ.11.52 கோடி மதிப்பீட்டில் 2013–14 ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு 10.12.2013 அன்று மாமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. மாண்புமிகு மேயர் அவர்கள் கான்கிரீட் சாலையாக அமைக்க மதிப்பீடு தயாரிக்க அறிவுறுத்தியதின்பேரில், கான்கிரீட் சாலைப் பணிகள் தொடங்குவதற்கு முன்பாக இந்தப் பகுதியில் அமைந்திருக்கும் பொதுமக்கள் குடியிருப்புக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பிற்காக குழாய்களை அமைக்கும் பணி போர்கால அடிப்படையில் மேற்கொள்ள முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் மேலாண்மை இயக்குநர் (சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் துறை) அவர்களுக்கு 14.03.2014 அன்று கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

கான்கிரீட் சாலை அமைப்பதற்கு முன்பு இந்த சாலையை சென்னை மாநகராட்சியிடம் இரயில்வே துறை ஒப்படைத்தால் குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்புகளுக்கான சாலை வெட்டும் பணிகள் மேற்கொள்ள இயலும், சாலை அமைக்கப்பட்ட பிறகு சாலை வெட்டும் பணிகள் மேற்கொள்ள இயலாது என்பதால் கான்கிரீட் சாலை அமைப்பதற்கு முன் சாலையை தெற்கு இரயில்வே துறையானது சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்குமாறு 24.07.2013 அன்று நடைபெற்ற சென்னை பெருநகர வளர்ச்சி உயர்மட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தெற்கு ரயில்வே துறையிலிருந்து பதில் ஏதும் வராத நிலையில் முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் பொது மேலாளர் (தெற்கு இரயில்வே, MRTS Phase II) அவர்களுக்கு 29.09.2014 அன்று நினைவூட்டு கடிதம் சென்னை மாநகராட்சி மூலமாக அனுப்பப்பட்டது.

எனவே, தென்னக இரயில்வே துறையினருக்கு சொந்தமான தரமணி இரயில் நிலையம் முதல் வேளச்சேரி இரயில் நிலையம் வரை **2.92**கி.மீ நீளம் கொண்ட சாலையினை அத்துறையிடமிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோருவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**17/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண்.**23/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0165/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.35/2015 **பொருள் எண்.35**

**ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 35ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள் விஜய் கவுதம் இன்ஜீனியரிங் ஓர்க்ஸ் அவர்களுக்கு பணியினைஅளிக்க மன்றத்தின் அனுமதி**

மண்டலம் 4, வார்டு 35ல் கொடுங்கையூர் கால்வாய் தெற்கு பக்கம் (பகுதி – 1) காமராஜ் சாலை முதல் முத்தமிழ் நகர் 191வது தெரு வரை (செ. 0மீ முதல் 800மீ வரை) ஆர்.சி.சி. தரை தாங்கு சுவர் மற்றும் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்காக முதன் முறையாக 27.06.2014 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டதில் ஒற்றை ஒப்பமாக திருவாளர்கள். விஜய் கவுதம் இன்ஜீனியரிங் ஓர்க்ஸ் அவர்கள் தொழில் நுட்ப ஆவணம் சமர்ப்பித்ததில் 50 சதவீதம் பணி முடித்ததற்கு சான்றிதழ், 15 சதவீதம் நிதி தன்மை, ஒப்ப தகுதி சான்றிதழ் (Bid capacity) ஆகியவற்றை இணைக்காத காரணத்தினால் இவ்வொப்பந்ததாரரின் நிதி ஆவணம் தகுதியற்றதாக கருதப்பட்டதின் மூலம் இவ்வொப்பம் கைவிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்பணிக்கு மறு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்ப இறுதி நாளான 25.07.2014 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். விஜய் கவுதம் இன்ஜீனியரிங் ஓர்க்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.7,99,38,990.00பை ஆகும். 2013–2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.7,32,77,450.00யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (+) 9.09% அதிகம் ஆகும். எனவே, 14.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் இக்கால்வாய் பணி மேற்கொள்ளும் இடத்தில் சாலை வசதி இல்லாததாலும், மணல் மற்றும் தளவாடங்கள் விலை உயர்வின் காரணமாகவும் மற்றும் இப்பணிக்காக விலையேற்ற ஈடுசெய்யும் தொகை இல்லாத காரணத்தினாலும் மேலும் ஒப்பந்ததாரர் தான் ஒப்ப விழுக்காட்டை குறைக்க சம்மதம் தெரிவிக்கவில்லை. மேலும் 28.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட இரண்டாவது பேச்சுவார்த்தையில் கட்டுமான தளவாடங்கள் பொருட்களின் விலையேற்றத்தினால் ஒப்பந்ததாரர் விலைகுறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை மற்றும் 04.12.2014 அன்று ஒப்பந்ததாரருடன் மூன்றாவது பேச்சுவார்த்தையில் தனது ஒப்ப விலையிலிருந்து (–) 1.00 சதவீதம் குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.7,91,39,600.00 இது ஒப்ப சதவீதம் (+) 8.00% அதிகம் ஆகும். இதன் அடிப்படையில் 2014–2015ஆம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டுடன் ஒப்பீடுகையில் (–) 7.36% குறைவு ஆகும். 23.01.2015 அன்று நடைபெற்ற உயர்மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், கால்வாயில் ஆர்.சி.சி. திறந்தவெளி தடுப்பு சுவர் அமைக்கும் பணி சிறப்பு பணி என்பதால் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினாலும் இவ் ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள் விஜய் கவுதம் இன்ஜீனியிரிங் ஓர்க்ஸ் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013– 2014ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (+) 8.00% அதிகம் என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். விஜய் கவுதம் இன்ஜீனியரிங் ஓர்க்ஸ் அவர்களுக்கு ரூ.7,91,39,600.00பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் கால்வாயில் ஆர்.சி.சி. திறந்தவெளி தடுப்பு சுவர் அமைக்கும் பணி சிறப்பு பணி என்பதால் பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினால் ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.18/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 23/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0164/2014</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.36/2015 **பொருள் எண்.36**

**<u>ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – வார்டு – 35ல் ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பாவனி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியினைஅளிக்க மன்றத்தின் அனுமதி</u>**

மண்டலம் 4, வார்டு 35ல் கொடுங்கையூர் கால்வாய் தெற்கு பக்கம் (பகுதி–2) முத்தமிழ் நகர் 191வது தெரு முதல் ஒய் சந்திப்பு வரை (செ. 800மீ முதல் 1675மீ வரை) ஆர்.சி.சி. தரை தாங்கு சுவர் மற்றும் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்காக முதன் முறையாக 27.06.2014 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டதில் ஒற்றை ஒப்பமாக திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் தொழில் நுட்ப ஆவணம் சமர்ப்பித்ததில் பொதுப்பணித் துறையின் ஒப்பந்ததாரர் பதிவு சான்று சமர்ப்பிக்காத காரணத்தினால் இவ்வொப்பந்ததாரரின் நிதி ஆவணம் தகுதியற்றதாக கருதப்பட்டதின் மூலம் இவ்வொப்பம் கைவிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்பணிக்கு மறு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்ப இறுதி நாளான 25.07.2014 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ.9,22,40,775.00பை ஆகும். 2013–2014ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.7,87,69,868.75யுடன் ஒப்பிடுகையில் இவ்வொப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (+)17.10% அதிகம் ஆகும். எனவே, 14.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் தனது ஒப்பத் தொகையில் 1 சதவீதம் குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன் மூலம், மேலும் 28.08.2014 அன்று ஒப்பந்ததாரருடன் நடத்தப்பட்ட இரண்டாவது பேச்சுவார்த்தையில் கட்டுமான தளவாடங்கள் பொருட்களின் விலையேற்றத்தினாலும், முன்பே 1 சதவீதம் குறைவிற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாலும் மேலும் ஒப்பந்ததாரர் விலைகுறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. மேலும், 04.12.2014 அன்று நடத்தப்பட்ட மூன்றாம் முறை பேச்சுவார்த்தையில் தனது குறைக்கப்பட்ட ஒப்ப விலையிலிருந்து மேலும் ரூ.22,28,168.16பை குறைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.8,90,90,199.09பை ஆகும். இதன்படி ஒப்ப சதவீதம் (+)13.10% அதிகம் ஆகும். இதன் அடிப்படையில் 2014–2015ஆம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டுடன் ஒப்பீடுகையில் (–) 2.84% குறைவு ஆகும். 23.01.2015 அன்று நடைபெற்ற உயர்மட்ட ஒப்ப கூர்ந்தாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், கால்வாயில் ஆர்.சி.சி. திறந்தவெளி தடுப்பு சுவர் அமைக்கும் பணி சிறப்பு பணி என்பதாலும், இக்கால்வாய் குறுகிய பகுதி என்பதால் போதிய இட வசதி இல்லாத காரணத்தினாலும், பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினாலும் இவ் ஒப்பத்தினை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு **2013 – 2014**ம் ஆண்டின் விலை விகிதத்தின் படி (+)**13.10%** அதிகம் என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ரூ.**8,90,90,199.09**பை மதிப்பிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் கால்வாயில் ஆர்.சி.சி. திறந்தவெளி தடுப்பு சுவர் அமைக்கும் பணி சிறப்பு பணி என்பதாலும், இக்கால்வாய் குறுகிய பகுதி என்பதால் போதிய இட வசதி இல்லாத காரணத்தினாலும், பொது மக்களின் நலனிற்காக அவசர அவசியம் கருதி விரைவாக இப்பணி முடிக்கவேண்டியிருப்பதினால் ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**19/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண். **25/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2191/2009</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.37/2015 **பொருள் எண்.37**

**<u>மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி</u>**

அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.**19,55,17,540.24**பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.எஸ்.பி.எல்.இன்ப்ராஸ்ட்ரக்ட்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **02.11.2010** அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் **20** மாதங்கள் ஆகும். அதாவது **01.07.2012**க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் சில எதிர்பாராத காரணங்களுக்காக இரண்டு முறை **31.03.2014** வரை ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

மேலும் மன்ற தீர்மான எண்.**289/2014**, நாள்.**30.05.2014**ன்படி இந்த கால நீட்டிப்பிற்கு விலை விகிதாச்சார உயர்வு (Escalation) வழங்கப்படாமல் **30.09.2014** வரை இறுதியாக ஒப்ப கால நீட்டிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தின்படி, அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் கிண்டி இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் கால்வாய், எம்.ஜி.ஆர்.கால்வாய் மற்றும் ஜாபர்கான்பேட்டை கால்வாயில் ஆக்கிரமிப்புகளை தவிர்த்து பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ள இடங்களில் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு முழுவதுமாக முடிக்க விலை விகிதாச்சார உயர்வுடன் **31.03.2015** வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியில் திருவாளர்கள். எஸ்.பி.எல். இன்ப்ராஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் செல்லம்மாள் கல்லூரி கால்வாய் பணியை முடித்துள்ளார்கள். கிண்டி இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் கால்வாயில் **1900** மீட்டர் நீளமுள்ள பணியில் சிறிய அளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு இதுவரை **1760** மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள **140** மீட்டர் நீளத்தில் **41** எண்ணிக்கையில ான ஆக்கிரமிப்புகள் கணக்கிடப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளது. தற்போது ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும் நிலையில் உள்ளது. மேலும் ஜாபர்கான் பேட்டை கால்வாயில் **82** எண்ணிக்கையிலான ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் கூடுதலாக உள்ள **112** எண்ணிக்கையிலான ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது, விரைவில் இவர்களுக்கும் ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டு முழுவதுமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும். இக்காரணங்களால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் பகுதியில் பணியை காலதாமதம் ஏற்படாமல் உடனே மேற்கொள்ள இந்த ஒப்பந்ததாரரால் மட்டுமே முடியும் என்ற நிலை உள்ளதால் இந்த ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான **2009 – 2010**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும், தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாட பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், மேலும் இப்பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு வழங்கினாலும், **2014 – 2015** விலை விவரத்தினை விட குறைவாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினால், இப்பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு (Escalation) வழங்குவதின் மூலம் புதிய ஒப்பம் கோரி பணி துவங்கும் செலவினத்தை விட மிகவும் குறைவாகவே இருக்கும். மேலும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றி வீடு ஒதுக்கீடு செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தின் காரணமாகவும், இப்பணியினை இவ் ஒப்பந்ததாரின் மூலம் முழுவதுமாக முடிக்க விலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation) **31.03.2015** கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு **30.09.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து விலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation) **01.10.2014** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதி பரிந்துரைக்கப்பட்டது.

துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் குறிப்பில் மீதமுள்ள பணிகளின் தோராய மதிப்பு மற்றும் விலை விகிதாச்சார உயர்வு ஏற்றத்தின் ஒப்புமையின் அறிக்கையினை அளிக்க அறிவுறுத்தினார்கள்.

இதன்படி, கிண்டி இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட் கால்வாய், ஜாபர்கான்பேட்டை கால்வாய் மற்றும் எம்.ஜி.ஆர்.கால்வாய் பணிகளை **31.03.2015**க்குள் முடிக்க ஏற்படும் தோராய மதிப்பீடு மற்றும் இப்பணி மேற்கொள்ள விலை விகிதாச்சாரம் வழங்குவதால் ஏற்படும் விலை உயர்வின் ஏற்றத்தின் ஒப்புமை படிவம் **1**ன் மூலம் கணக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **(1)** | இதன்படி மேற்கண்ட மீதமுள்ள பணி முடிக்க **01.10.2015** முதல் **31.03.2015** ஏற்படும் தோராய செலவீனம் | – | ரூ.**6,40,54,585.00**பை |
| **(2)** | **01.10.2015** முதல் **31.03.2015** வரை மேற்கொள்ளபடும் பணிக்கு வழங்கப்படும் விலை விகிதாச்சாரம் உயர்வு | – | ரூ.**1,50,52,827.48**பை |
| **(3)** | மேலும் இப்பணி **2014 – 2015** விலை விகிதாச்சாரப்படி மேற்கொண்டால் ஏற்படும் செலவீனம் | – | ரூ.**11,19,50,307.39**பை |

எனவே, இப்பணியினை தற்போது உள்ள ஒப்பந்ததாரர் மூலம் விலை விகிதாச்சாரம் வழங்கி இப்பணியினை மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லை என சமர்ப்பிக்கப்படுகிறது.

இப்பணிகள் முழுவதும் மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிப்பதின் மூலம் இப்பகுதியில் கொசு மற்றும் மாசு அகற்றப்பட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்படும் என குறிப்பிடத்தக்கது.

இதனால் இப்பணிக்கு **30.09.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.10.2014** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், அடையாறு நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு **30.09.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.10.2014** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
2. மேலே சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) **01.04.2014** முதல் தொடர்ந்து வழங்குவதற்கும்,
3. மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.10.2014** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட **(1)** முதல் **(3)** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**20/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண்.**26/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2185/2009</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.38/2015 **பொருள் எண்.38**

**<u>மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி</u>**

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.13,52,91,117.52பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ராஸ்ட்ரக்ட்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 20 மாதங்கள் ஆகும். அதாவது 01.07.2012க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் சில எதிர்பாராத காரணங்களுக்காக இரண்டு முறை 01.12.2013 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேலும் மன்ற தீர்மானத்தின்படி ஒப்பந்தாரருக்கு 31.12.2014 வரை ஒப்ப கால நீட்டிப்புடன் விலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தின்படி, ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் டி.வி.எஸ்.கால்வாய் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாய் பகுதிகளில் பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ளதால் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணி துரிதமாக 31.12.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும், சிறப்பு நிலையாக கருதி பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டதற்கும் விலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) இப்பணிகளை முழுவதுமாக முடிக்க 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணியிடத்தில் ஏகாங்கிபுரம் கால்வாயில் பணியிடம் வழங்கப்பட்டு பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. டி.வி.எஸ்.கால்வாயில் பணி மேற்கொள்ள மொத்த இடமும் ஏதுவாக உள்ளதால் ஒப்பந்தாரர் பணியினை துரிதமாக மேற்கொண்டு வருகின்றார். மேலும், ஏகாங்கிபுரம் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஒக்கியம் துரைபாக்கத்தில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், ஏகாங்கிபுரம் கால்வாய் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி மறு குடி அமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றின், ஒரு பகுதி அகற்றப்பட்ட நிலையில் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால் ஆக்கிரமிப்புகள் முழுவதும் எடுக்கப்பட இயலவில்லை. மேலும், இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் முடியும் நிலையில் உள்ளதால் நடப்பில் உள்ள ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படுவதன் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பகுதியில் உடன் பணி மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

மேலும், இப்பணிக்கான பணி ஆணை 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் மேற்கொள்ளும் பணிக்களுக்கான பணப்பட்டுவாடா ஒப்ப விதிகளின்படி விலை விகிதச்சார உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாட பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு தற்போது ஏற்படும் செலவினத்தை காட்டிலும் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினால், இவ் ஒப்பந்ததாரரின் மூலம் இப்பணிகளை முடிக்க விலை விகிதச்சார உயர்வுடன் 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, ஏகாங்கிபுரம் கால்வாயில் பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ள இடத்தில் பணியை முடிக்கவும், நீதிமன்ற நிலுவையில் உள்ள வழக்கு முடிவுற்றவுடன் ஏகாங்கிபுரம் கால்வாயில் பணி மேற்கொண்டு முடிக்கவும், டி.வி.எஸ் கால்வாயில் முழுவதுமாக பணியினை முடிக்கவும் விலை விகிதச்சார உயர்வுடன் இப்பணிக்காக 01.01.2015 முதல் 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதி பரிந்துரைக்கப்பட்டது.

துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் குறிப்பில், இப்பணியை 31.12.2014 அன்று கள ஆய்வு மேற்கொள்ள வேண்டி அறிவுறுத்தியிருந்தார்கள். துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் 10.01.2015 அன்று ஏகாங்கிபுரம் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய் ஆகிய பணிகளை கள ஆய்வு மேற்கொண்டு இப்பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்கள்.

இவ் ஒப்பத்தில் இரண்டு கால்வாய்களில் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

டி.வி.எஸ்.கால்வாய் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாய் பணிகளை **31.03.2015**க்குள் முடிக்க ஏற்படும் தோராய மதிப்பீடு மற்றும் இப்பணி மேற்கொள்ள விலை விகிதாச்சாரம் வழங்குவதால் ஏற்படும் விலை உயர்வின் ஏற்றத்தின் ஒப்புமை படிவம்–**1**ன் மூலம் கணக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **(1)** | இதன்படி மேற்கண்ட மீதமுள்ள பணி முடிக்க **01.01.2015** முதல் **31.03.2015** ஏற்படும் தோராய செலவீனம் | – ரூ.**4,64,93,554.47**பை |
| **(2)** | **01.01.2015** முதல் **31.03.2015** வரை மேற்கொள்ளபடும் பணிக்கு வழங்கப்படும் விலை விகிதாச்சாரம் உயர்வு | – ரூ.**1,30,18,195.25**பை (+) **28.00%** அதிகம் |
| **(3)** | மேலும் இப்பணி **2014 – 2015** விலை விகிதாச்சாரப்படி மேற்கொண்டால் ஏற்படும் செலவீனம் | – ரூ.**8,26,18,268.29**பை (+) **77.70%** அதிகம் |

எனவே, இப்பணியினை தற்போது உள்ள ஒப்பந்ததாரர் மூலம் விலை விகிதாச்சாரம் வழங்கி இப்பணியினை மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லை.

இப்பணிகள் முழுவதும் மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணிகள் முழுவதுமாக முடிப்பதின் மூலம் இப்பகுதியில் கொசு மற்றும் மாசு அகற்றப்பட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்படும் என குறிப்பிடப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு **31.12.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.01.2015** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு **31.12.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.01.2015** முதல் **31.03.2015** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
2. ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) வழங்குவதற்கும்,
3. மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.01.2015** தேதியில் நிர்ணயம் செய்யவும்,

மேற்கண்ட **(1)** முதல் **(3)** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**21/2015**ன்படி நிலைக்குழு(பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண். **27/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2182/2009</u>**

**<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.39/2015 **பொருள் எண்.39**

**<u>மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி</u>**

கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.56,92,23,059.64பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 28.06.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 27.08.2012க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும், சில எதிர்பாராத காரணங்களுக்காக இரு முறை ஆறு மாத காலம் முறையாக ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. அதாவது 27.08.2013க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் 2012ஆம் ஆண்டின் பருவ மழை காரணமாகவும் இப்பகுதி தாழ்வான பகுதி என்பதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவு நீர் தேங்குவதாலும் ஏழு மாத கால நீட்டிப்பாக 31.03.2014 வரை பெறப்பட்டது.

மன்ற தீர்மானத்தின்படி மேலும் சில இடர்பாடுகளின் காரணமாக ஒப்பந்தாரருக்கு 31.12.2014 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தின்படி, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் வியாசர்பாடி கால்வாய் பகுதியில் இருபுறங்களிலும் குடியிருப்பு பகுதிகள் ஆக்கிரமிப்புகள் இருப்பதினால் வழி தடம் ஏதும் இல்லாததாலும் இப்பணி துரிதமாக 31.12.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும், சிறப்பு நிலையாக கருதி 01.01.2015 முதல் பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டதற்கு வேலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) இப்பணிகளை முழுவதுமாக முடித்து 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியில் திருவாளர்கள். ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் பணி மேற்கொள்ளும் இடத்தில் வியாசர்பாடி கால்வாய் பகுதியில் இருபுறங்களிலும் குடியிருப்பு பகுதிகள் இருப்பதினாலும், வழி தடம் ஏதும் இல்லாததாலும், இப்பணி நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் பெய்த மழையினால் பணி மேற்கொள்வதில் இடர்பாடு ஏற்பட்டதாலும் இப்பணி துரிதமாக 31.12.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும் வியாசர்பாடி கால்வாயில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கொடுங்கையூர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஒக்கியம் துரைபாக்கத்தில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கொடுங்கையூர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி மறு குடி அமர்த்தப்பட்டவுடன் காலதாமதமின்றி உடன் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் இவ்வொப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படுவதன் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பகுதியில் உடனே பணி மேற்கொள்ள ஏதுவாக அமையும் என கருதப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான பணி ஆணை 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் மேற்கொள்ளும் பணிகளுக்கான பணப்பட்டுவாடா ஒப்ப விதிகளின்படி விலை விகிதச்சார உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாட பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு தற்போது எற்படும் செலவினத்தை காட்டிலும் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினால், இவ்வொப்பந்ததாரரின் மூலம் இப்பணிகளை முடிக்க வேலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிக்க விலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) 01.01.2015 முதல் 31.03.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதி பரிந்துரைக்கப்பட்டது.

துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் குறிப்பில்,

1. மீதுமுள்ள பணிகளின் தோராய மதிப்பு மற்றும் விலை விகிதாச்சார உயர்வு ஏற்றத்தின் ஒப்புமையின் அறிக்கையையும்,
2. 31.12.2014 அன்று கள ஆய்வு மேற்கொள்ள வேண்டியும் அறிவுறுத்தினார்கள்.

துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் 10.01.2015 அன்று ஏகாங்கிபுரம் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய் ஆகிய பணிகளை கள ஆய்வு மேற்கொண்டு இப்பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

இவ் ஒப்பந்தத்தில் ஜவஹர் கால்வாயில் பணி முடிக்கப்பட்டது மீதமுள்ள மூன்று கால்வாய்களில் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் மற்றும் வியாசர்பாடி கால்வாய் பணிகளை 31.03.2015க்குள் முடிக்க ஏற்படும் தோராய மதிப்பீடு மற்றும் இப்பணி மேற்கொள்ள விலை விகிதாச்சாரம் வழங்குவதால் ஏற்படும் விலை உயர்வின் ஏற்றத்தின் ஒப்புமை படிவம்– 1ன் மூலம் கணக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **(1)** | **இதன்படி மேற்கண்ட மீதமுள்ள பணி முடிக்க 01.01.2015 முதல் 31.03.2015 ஏற்படும் தோராய செலவீனம்** | **–** | **ரூ.3,31,84,734.16பை** |
| **(2)** | **01.01.2015 முதல் 31.03.2015 வரை மேற்கொள்ளபடும் பணிக்கு வழங்கப்படும் விலை விகிதாச்சாரம் உயர்வு** | **–** | **ரூ.68,40,703.74பை (+) 17.96% அதிகம்** |
| **(3)** | **மேலும் இப்பணி 2014 – 2015 விலை விகிதாச்சாரப்படி மேற்கொண்டால் ஏற்படும் செலவீனம்** | **–** | **ரூ.5,17,68,993.23பை (+) 56.00% அதிகம்** |

எனவே, இப்பணியினை தற்போது உள்ள ஒப்பந்ததாரர் மூலம் விலை விகிதாச்சாரம் வழங்கி இப்பணியினை மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லை.

இப்பணிகள் முழுவதும் மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இப்பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிப்பதின் மூலம் இப்பகுதியில் கொசு மற்றும் மாசு அகற்றப்பட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்படும் என குறிப்பிடப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு 31.12.2014 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.01.2015 முதல் 31.03.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. திருவாளர்கள்.ஸ்ரீ சரவணா இன்ஜினியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு 31.12.2014 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.01.2015 முதல் 31.03.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,
2. மேலே சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) வழங்குவதற்கும்,
3. மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.01.2015 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.22/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 28/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.10.ந.க.எண்.அ2/12272/01 /2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின்28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.40/2015 **பொருள் எண்.40**

**ஒப்பம் – 2013–2014 – மண்டலம்.10 – பகுதி–30, வார்டு– 142 மேற்கு ஜோன்ஸ் சாலையில் புதிய நகர்புற சுகாதார முதன்மை நிலைய தரைத்தளம், முதல் தளம், படிக்கட்டு அறை, கைப்பிடி மற்றும் லிப்ட் இயந்திர அறை, அடிதளமட்டத்திற்கு கட்டிடம் கட்டுமான பணி மற்றும் குழாய்கள் மற்றும் வடிகால் கட்டுமான பணிக்கு ஒப்பம் பெறப்பட்டது – திருவாளர்கள். பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி**

01. பணியின் பெயர் – கட்டுமான பணி

| வ. எண் | வார்டு எண் | பணி/சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு ச.மீ. | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 142 | மேற்கு ஜோன்ஸ் சாலை | கட்டுமான பணி | | | 1,57,49,000.00 |
| | | **மொத்தம்** | | | | **1,57,49,000.00** |

02. 10வது வார்டு குழுவின் ஒப்புதல் நாள் – 10வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண். 1703/14 நாள்– 05/06/2014.

03. திட்ட குறியீட்டு எண் – –

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு – 2013–2014 ம் ஆண்டு விலை

(அ) பணியின் செலவினம் – ரூ. 1,35,42,439.65/-

(ஆ) மேற்பார்வை செலவு – ரூ. 13,54,243.97/-

(இ) சில்லரை மேற்பார்வை செலவு – ரூ. 3,38,560.99/-

(ஈ) மற்ற எதிர்பாரா செலவு – ரூ. 1,35,424.40/-

உ) மின்சாரம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் – ரூ. 3,37,703.67/-

ஊ) தொழிலாளர் நல நிதி – ரூ. 40,627.32/-

மொத்தம் – ரூ. 1,57,49,000.00/-

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது /நாள் – செ.மா. ஒப்பந்தப்புள்ளி, மலர்–20 இதழ்– நாள்–

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள்

07. மின்னனு மூலமாக ஒப்பம் பெறப்பட்ட நாள் – 17.10.2014

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும்

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? –

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன – ஐந்து

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்கள்/திரு | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2013 –14 ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| **1** | **திரு.பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** | **13542439.65** | **13393472.81/–** | **(–)1.10 % குறைவு** |
| 2 | புங்காவனம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 13542439.65 | 13474727.45/– | (–)0.50 % குறைவு |
| 3 | திரு. டி.ரங்கநாதன் | 13542439.65 | 13894543.08/– | (+) 2.60 % அதிகம் |
| 4 | ஸ்ரீ பாலாஜி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 13542439.65 | 13948712.84/– | (+) 3.00 % அதிகம் |
| 5 | கே.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 13542439.65 | 15479008.52/– | (+)14.30 % அதிகம் |

| | | |
|---|---|---|
| 12. | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள்– | – – |
| 13. | ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | – **ரூ.13393472.81/–** **(–)1.10 % குறைவு** |
| 14. | குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை, பதிவு நாள் | – வகுப்பு 1 |
| 15. | கூடுதல் பிணை வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர் | – |
| 16. | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? | – உள்ளது |
| | வரவு செலவு திட்ட தலைப்பு | – மூலதன நிதி |
| 17. | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | – 90 நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக மின்னனு ஒப்பம் கோரப்பட்ட நாளான **17.10.2014** அன்று ஐந்து ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி கோரிய திருவாளர்கள். பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத் தொகை **ரூ.13393472.81/–** ஆகும். இது **2013–14ம்** ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையான **ரூ.13542439.65/-** யை விட (–)**1.10**% குறைவு ஆகும். அதே சமயம் ஒப்பந்ததாரரின் ஒப்பம் ஒப்ப முன் தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ளமையாலும், அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு திருவாளர்கள். பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் **31.05.2014** அன்று வெளியான வெளி சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் இவரது ஒப்ப விழுக்காடு **(–)16.61**% குறைவு ஆகும்.

மன்றத் தீர்மானத்தின்படி, (தீர்மான எண்.512/2007, நாள்–25.09.2007)

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும் (Source- Builders Association of India – South Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும் சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு, **31.05.2014** நாளிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு கீழ்கண்ட ஒப்பந்ததாரருக்கு இறுதியாக ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது .

மேலும், இந்த ஒப்பந்த தொகை **2013–2014** ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் (–1.10%) குறைவு ஆகும்.

மேலும், இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களுக்கு **2013–14**ம் அலுவலக விலைக்கு **(–)1.10%** குறைவிற்கு ரூ.**13393472.81/–** மதிப்பிற்கு இப்பணி வழங்கலாம்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள்.பியர்ல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு**2013–14**ம் ஆண்டு அலுவலக விலைக்கு **(–)1.10%** குறைவு ரூ.**13393472.81/–** மற்றும் **2013–2014** அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் வெளிசந்தை விலையுடன் **(–16.61%)** குறைவான மதிப்பிற்கு வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1) (2)**–ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.01.2015** அன்று தீர்மான எண்.**23/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **23.01.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **29.01.2015** அன்று தீர்மான எண்.**29/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.12.ந.க.எண்.இ1/6824/2014**

**முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.01.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.41/2015** **பொருள் எண்.41**

**சென்னை மாநகராட்சி – மண்டலம் –12 (ஆலந்தூர்) – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம் (Chennai Megacity Development Mission) சென்னை மாநகர விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – (Grid-III) சிப்பம்–1ல் ஒப்பந்ததாரர். திருவாளர்கள். SPL Infra Structures Pvt.Ltd அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது – பணி மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது– சேமிப்பு தொகையில் மறுவகைப்பாடு ஒப்புதல் – அதே ஒப்பந்ததாரருக்கு பணியினை செய்வதற்கு – அனுமதி.**

சென்னை மாநகராட்சி மற்றும் விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க இச்சிறப்பு திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதைகள், மற்றும் தெருவிளக்குகள் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்துவதற்காக அரசாணையின் படி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–12 (ஆலந்தூரில்) 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, இப்பணியினை சிப்பம்–1ல், மதிப்பீடு தொகை ரூ. 19,12,59,835.60/– ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இப்பணிக்கு இரு ஒப்பங்கள் பெறப்பட்டது. இதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. SPL Infra Structures Pvt.Ltd. அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (+)24.46% கூடுதலாக கொடுத்துள்ளதை தொடர்ந்து மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்யப்பட்டு மதிப்பீட்டை விட கூடுதலாக (+) 12.30% ஒப்பத்தொகை ரூ. 21,47,84,795.38/– க்கு மன்ற தீர்மான எண்.28/2014 ன்படி ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்தருணத்தில் சில இடங்களில் சாலையின் அகலம் குறைவாக இருந்ததால், தார்ச்சாலை பணி மற்றும் நடைபாதை பணி, மழைநீர் வடிகால்வாய் பணி மேற்கொள்ள இயலவில்லை. ஒப்ப அளவுக்கு அளவீடு செய்ததில் கீழ்கண்ட பணிகள் சேமிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விவரம் | சேமிப்பு தொகை |
|---|---|---|
| 1 | சாலைப் பணி | 4,65,33,666.10 |
| 2 | மழைநீர் வடிகால்வாய் பணி | 2,60,58,087.90 |
| 3 | நடைபாதை பணி | 35,26,949.50 |
| | மொத்தம் | **7,61,18,703.57** |

இந்நிலையில் பொதுமக்கள் வேண்டுகோளின்படி, அவசர அவசியம் கருதியும் போக்குவரத்தின் நலன் கருதியும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் –III சிப்பம்-I சேமிப்பு தொகையிலிருந்து வார்டு 165 மற்றும் 167ல் புதிதாக சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் நடைபாதைகள் அமைக்க எடுக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே சிப்பம்–1ல் எடுக்கப்பட்ட சாலைகள் அருகாமையில் உள்ளது. அப்பணிக்கு அதே சி.பி.ஆர். (CBR) எண் உள்ளதால், முந்தைய வடிவமைப்பு இப்பணிகளுக்கும் பொருந்தும். எனவே, அதே ஒப்பந்ததாரர் மூலம் மேற்கண்ட சேமிப்பு தொகையில் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பணிகளை செய்யலாமென கருதப்படுகிறது. இந்நிலையில் ஒப்பந்தாரர் திருவாளர்கள் SPL Infra Structures Pvt.Ltd அவர்களின் சிப்பம்–1ல் அளித்துள்ள ஒப்ப சதவீதத்தின் படி பணிகளை மேற்கொள்ள இசைவு கடிதம் அளித்துள்ளார்.

மேற்படி ஒப்பங்கள் இப்பணி இனங்களின் மொத்த அளவுகளுக்காக தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளதால் முழுமையாக இப்பணியினை மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

அ) <u>சாலைப்பணிகள்</u>

| வ. எண் | கோட்டம் | சாலையின் பெயர் | பரப்பளவு ச.மீ | மதிப்பீட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 165 | நிலமங்கை வாஞ்சிநாதன் தெரு | 285 | 2,67,25,554.80 |
| 2 | 165 | கேசரி நகர் 6வது தெரு விரிவு | 330 | |
| 3 | 165 | புவனேஸ்வரி நகர் 5வது தெரு | 193 | |
| 4 | 165 | புவனேஸ்வரி நகர் 6வது தெரு (கேஸ் குடவுன் தெரு) | 1050 | |
| 5 | 165 | அவ்வையார் தெரு | 675 | |
| 6 | 165 | புவனேஸ்வரி நகர் 1வது தெரு | 825 | |
| 7 | 165 | முத்தையா ரெட்டி நகர் 3வது தெரு | 540 | |
| 8 | 165 | பாரதிதாசன் நகர் பிரதான சாலை | 540 | |
| 9 | 165 | பாரதிதாசன் நகர் 1வது தெரு | 90 | |
| 10 | 167 | கண்ணன் காலனி 2வது பிரதான சாலை | 105 | |
| 11 | 167 | சவுத் பி.வி.நகர் 5வது தெரு | 140 | |
| 12 | 167 | ஜெயந்தி நகர் 2வது தெரு | 292 | |
| 13 | 167 | நங்கநல்லூர் 20வது தெரு | 356 | |
| 14 | 167 | 100 அடி சாலை | 1820 | |
| 15 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 1வது தெரு | 1575 | |
| 16 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 2வது தெரு | 980 | |
| 17 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 3வது தெரு | 550 | |
| 18 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 4வது தெரு | 585 | |
| 19 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 5வது தெரு | 550 | |
| 20 | 167 | டி.என்.ஜி.ஓ காலனி 6வது தெரு | 390 | |
| 21 | 167 | ஏ.ஜீ.எஸ் காலனி 1வது தெரு | 1375 | |
| 22 | 167 | ஏ.ஜீ.எஸ் காலனி 2வது தெரு | 715 | |
| 23 | 167 | ஏ.ஜீ.எஸ் காலனி 3வது தெரு | 600 | |
| 24 | 167 | ஏ.ஜீ.எஸ் காலனி 4வது தெரு | 605 | |
| 25 | 167 | ஏ.ஜீ.எஸ் காலனி 5வது தெரு | 715 | |
| | | மொத்தம் | 16420 | 2,67,25,554.80 |

ஆ) <u>மழைநீர் வடிகால்வாய் பணி :</u>

| வ. எண் | கோட்டம் | சாலையின் பெயர் | நீளம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 165 | இன்கம்டேக்ஸ் காலனி பிரதான சாலை | 650 | 3,18,89,000.00 |
| 2 | 165 | சுரேந்திரா நகர் 6வது தெரு , 3வது குறுக்கு தெரு | 20 | |
| 3 | 165 | கேசரி நகர் 1வது தெரு | 240 | |
| 4 | 165 | குன்றகுடி நகர் பிரதான சாலை | 250 | |
| 5 | 165 | சவுத் செக்டர் 1வது தெரு | 140 | |
| 6 | 165 | சவுத் செக்டர் 3வது தெரு | 180 | |
| 7 | 165 | சவுத் செக்டர் 4வது தெரு | 360 | |
| 8 | 165 | நியூ காலனி 1வது தெரு | 1000 | |
| 9 | 165 | நிலமங்கை வாஞ்சிநாதன் தெரு | 220 | |
| 10 | 165 | இளங்கோ தெரு | 50 | |
| 11 | 165 | நிலமங்கை அகஸ்தியர் தெரு | 100 | |
| 12 | 165 | திருவள்ளுவர் சாய் ராம் தெரு | 130 | |
| 13 | 165 | இராஜாஜி தெரு | 120 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 165 | இராஜாஜி தெரு | 45 | |
| 15 | 165 | மாணிக்கவாசகர் தெரு | 80 | |
| 16 | 165 | கேசரி நகர் 5வது தெரு | 85 | |
| 17 | 165 | கேசரி நகர் 6வது தெரு விரிவு | 70 | |
| 18 | 165 | கேசரி நகர் 4வது தெரு | 80 | |
| 19 | 165 | வைகை தெரு(கேசரி நகர் 4வது தெரு அருகில்) | 65 | |
| 20 | 165 | கேசரி நகர் 3வது தெரு | 120 | |
| 21 | 165 | பாரத் வைகை தெரு | 180 | |
| 22 | 165 | கேசரி நகர் 1வது பிரதான சாலை | 300 | |
| 23 | 165 | பாலாஜி நகர் 1வது தெரு | 90 | |
| 24 | 165 | இராஜா ராம் தெரு | 70 | |
| 25 | 165 | லட்சுமி நகர் 1வது தெரு | 240 | |
| 26 | 165 | லட்சுமி நகர் 2வது தெரு | 60 | |
| 27 | 165 | லட்சுமி நகர் 3வது தெரு | 200 | |
| 28 | 165 | அவ்வையார் தெரு | 150 | |
| 29 | 167 | லட்சுமி நகர் 3வது குறுக்கு தெரு | 240 | 1,36,57,000.00 |
| 30 | 167 | கண்ணண் நகர் 4வது தெரு | 230 | |
| 31 | 167 | கண்ணண் நகர் 1வது பிரதான சாலை | 66 | |
| 32 | 167 | கண்ணண் நகர் 4வது பிரதான சாலை | 172 | |
| 33 | 167 | கண்ணண் நகர் 5வது தெரு | 160 | |
| 34 | 167 | எஸ்.ஐ.பி காலனி 3வது தெரு | 58 | |
| 35 | 167 | ஜெயந்தி நகர் 2வது தெரு | 90 | |
| 36 | 167 | கண்ணண் நகர் 3வது பிரதான சாலை | 420 | |
| 37 | 167 | இந்து காலனி 4வது தெரு | 250 | |
| 38 | 167 | ஐய்யபன் நகர் பிரதான சாலை | 180 | |
| 39 | 167 | இந்து காலனி 23வது தெரு | 160 | |
| 40 | 167 | வோல்டாஸ் காலனி பிரதான சாலை | 270 | |
| 41 | 167 | கிழக்கு பிரதான சாலை | 350 | |
| 42 | 167 | வோல்டாஸ் காலனி 5வது தெரு | 240 | |
| 43 | 167 | எஸ்.பி. காலனி 2வது பிரதான சாலை | 80 | |
| 44 | 167 | இந்து காலனி 2வது பிரதான சாலை | 220 | |
| | | **மொத்தம்** | **8480** | **4,55,46,000.00** |

**இ) நடைபாதை அமைக்கும் பணி**

| வ. எண் | கோட்டம் | சாலையின் பெயர் | நீளம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 165 | இன்கம்டேக்ஸ் காலனி பிரதான சாலை | 650 | **2539125.00** |
| 2 | 165 | சுரேந்திரா நகர் 6வது தெரு , 3வது குறுக்கு தெரு | 20 | |
| 3 | 165 | கேசரி நகர் 1வது தெரு | 240 | |
| 4 | 165 | குன்றகுடி நகர் பிரதான சாலை | 250 | |
| 5 | 165 | சவுத் செக்டர் 1வது தெரு | 140 | |
| 6 | 165 | சவுத் செக்டர் 3வது தெரு | 180 | |
| 7 | 165 | சவுத் செக்டர் 4வது தெரு | 360 | |
| 8 | 165 | நியூ காலனி 1வது தெரு | 1000 | |
| 9 | 165 | நிலமங்கை வாஞ்சிநாதன் தெரு | 220 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 165 | இளங்கோ தெரு | 50 | |
| 11 | 165 | நிலமங்கை அகஸ்தியர் தெரு | 100 | |
| 12 | 165 | திருவள்ளுவர் சாய் ராம் தெரு | 130 | |
| 13 | 165 | இராஜாஜி தெரு | 165 | |
| 14 | 165 | மாணிக்கவாசகர் தெரு | 80 | |
| 15 | 165 | கேசரி நகர் 5வது தெரு | 85 | |
| 16 | 165 | கேசரி நகர் 6வது தெரு விரிவு | 70 | |
| 17 | 165 | கேசரி நகர் 4வது தெரு | 80 | |
| 18 | 165 | வைகை தெரு (கேசரி நகர் 4வது தெரு அருகில்) | 70 | |
| 19 | 165 | கேசரி நகர் 3வது தெரு | 120 | |
| 20 | 165 | பாரத் வைகை தெரு | 180 | |
| 21 | 165 | கேசரி நகர் 1வது பிரதான சாலை | 300 | |
| 22 | 165 | பாலாஜி நகர் 1வது தெரு | 90 | |
| 23 | 165 | இராஜா ராம் தெரு | 70 | |
| 24 | **167** | லட்சுமி நகர் 3வது குறுக்கு தெரு | **240** | |
| 25 | **167** | கண்ணண் நகர் 4வது தெரு | **230** | |
| 26 | **167** | கண்ணண் நகர் 1வது பிரதான சாலை | **66** | |
| 27 | **167** | கண்ணண் நகர் 4வது பிரதான சாலை | **172** | |
| 28 | **167** | கண்ணண் நகர் 5வது தெரு | **160** | |
| 29 | **167** | எஸ்.ஐ.பி காலனி 3வது தெரு | **58** | |
| 30 | **167** | ஜெயந்தி நகர் 2வது தெரு | **90** | |
| 31 | **167** | கண்ணண் நகர் 3வது பிரதான சாலை | **420** | |
| 32 | **167** | இந்து காலனி 4வது தெரு | **250** | |
| 33 | **167** | ஐய்யபன் நகர் பிரதான சாலை | **180** | |
| 34 | **167** | இந்து காலனி 23வது தெரு | **160** | |
| 35 | **167** | வோல்டாஸ் காலனி 5வது தெரு | **270** | |
| 36 | **167** | டி.என்.ஜி.ஓ காலனி 1வது தெரு | **200** | **9,02,800.00** |
| 37 | **167** | சர்வமங்களா நகர் | **250** | |
| 38 | **167** | இந்து காலனி 7வது தெரு | **100** | |
| 39 | **167** | இந்து காலனி 8வது தெரு | **230** | |
| 40 | **167** | இந்து காலனி 9வது தெரு | **60** | |
| 41 | **167** | இந்து காலனி 15வது தெரு | **180** | |
| 42 | **167** | இந்து காலனி 25வது தெரு | **90** | |
| 43 | **167** | இந்து காலனி 24வது தெரு | **50** | |
| 44 | **167** | இந்து காலனி 26வது தெரு | **120** | |
| 45 | **167** | ஐய்யபன் நகர் | **100** | |
| 46 | **167** | லட்சுமி நகர் 1வது பிரதான சாலை | **400** | |
| 47 | **167** | லட்சுமி நகர் 7வது தெரு | **90** | |
| 48 | **167** | ஏ.ஜீ.எஸ் காலனி 2வது தெரு | **120** | |
| | | **மொத்தம்** | **8936** | **34,41,925.00** |

<u>உத்தேசிக்கப்பட்ட மொத்த செலவு</u>

சாலை அமைக்கும் பணி : 2,67,25,554.80

மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி : 4,55,46,000.00

நடைபாதை அமைக்கும் பணி : 34,41,925.00

மொத்தம் **<u>7,57,13,479.80</u>**

மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், ஏற்கனவே, சிப்பம்–1ன் பணியை செய்து வந்த ஒப்பந்தாரரான திருவாளர்கள் SPL Infra Structures Pvt.Ltd அவர்களுக்கு சிப்பம்–1ல் செய்யப்பட்டுள்ள பணிகளில் சேமிப்பு தொகை உள்ளதால், அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள் SPL Infra Structures Pvt.Ltd அவர்களை கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், அதே ஒப்பந்த சதவீதத்தின்படி 25 சதவீதத்திற்கு மிகாமலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கையின்படி பணி மேற்கொள்ளவும், இப்பணியினை Project Sanction Committee ஒப்புதல் பெற்று செய்திட நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.24/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண். 30/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/3870/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.42/2015 **பொருள் எண்.42**

**ஒப்பம் – சென்னை மாநகராட்சி – இயந்திரப் பொறியியல் துறை – சென்னை விரிவாக்கப்பட்ட பகுதிகளில் குப்பை அகற்றும் பணிக்காக புதியதாக 50 எண்ணிக்கையில் இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் 7 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது – வாகனங்களை குறித்த காலத்திற்குள் வழங்காத நிலையில் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது – திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் விளக்கம் அளித்து வாகனங்களை வழங்க கால நீடிப்பு வழங்குமாறு கோரியதன் அடிப்படையில் 30.11.2014 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டது – மாதிரி வாகனம் ஒன்று பெறப்பட்டது. ஆய்வறிக்கை பெறப்பட்டது – குறைபாடு கண்டறியப்பட்டது – குறைபாடு குறித்து காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது – விளக்கம் பெறப்பட்டது – வாகனங்கள் வழங்க கால நீடிப்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால் விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்கள் குப்பை அகற்றும் பணிக்காக 50 எண்ணிக்கையில் இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் 7 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய அரசாணையில் அறிவிக்கப்பட்டதன் ( அரசாணை எண். 105, ( ந.நி (ம) கு.வ) துறை நாள் 11.7.2013) அடிப்படையில், மன்றத் தீர்மானத்தின் மூலம் (மன்றத் தீர்மான எண். 483/2013, நாள் 26.7.2013) நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டது. குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 15.11.2013 நாளிட்ட பணியாணை வழங்கப்பட்டது. பணியாணையினை 21.11.2013 அன்று இந்நிறுவனத்தார் பெற்றுள்ளனர்.

ஒப்ப விதிகளின்படி, மொத்த எண்ணிக்கையிலான 50 வாகனங்களும் பணியாணை பெற்றுக்கொண்ட 90 நாட்களுக்குள் (19.02.2014) வழங்கப்பட வேண்டும். திருவாளர்கள்.காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் மற்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவன சேசிஸ் மாடல் என LPT 1109/36 CAB PTOP BSIV-ன் சேசிஸ் நிறுவனத்தார் பாதுகாப்பு தொடர்பாக சேசிசில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளதாகவும், அவ்வாறு செய்த பின்னர் அதன் ஓட்டம் குறித்து பாதுகாப்பு சான்றிதழ் சம்பந்தப்பட்ட பிரிவினரிடமிருந்து பெற்ற பின்னரே சேசிஸ்களை வழங்க இயலும் என தெரிவித்திருந்த காரணத்தினால் கால கெடுவினை 31.03.2014, 30.06.2014, 30.08.2014 மற்றும் 30.11.2014 வரை முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று காலநீடிப்பு செய்து தரப்பட்டது.

திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் முதல் Protype வாகனத்தை 23.08.2014 வழங்கினர். மேலும் திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் 23.08.2014 அன்று வழங்கிய மாதிரி வாகனத்தின் செயல் திறன் மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ள 6 நபர்கள் கொண்ட அலுவலர் குழு அமைக்கவும் மற்றும் மூன்றாம் நபர் ஆய்வு (Third Party Inspectrion) மேற்கொள்ளவும் ஆணை பெறப்பட்டு அதன் அடிப்படையில் அலுவலர் குழு மாதிரி வாகனத்தை 22.09.2014 அன்று ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் இவ்வாகனத்தின் செயல்திறன் மற்றும் அவ்வாகனத்தின் உபயோகப்படுத்தப்பட்ட பொருட்களை சோதனை மேற்கொள்வதற்கு மற்றும் கள ஆய்வு மேற்கொள்ளுவதற்கும், திருவாளர்கள். காம் அவிடா அவர்களை மாதிரி வாகனத்தை நிரந்தர பதிவு செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அவ்வாறு வாகனத்தை நிரந்தரப்பதிவு மேற்கொண்டபோது, திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் காம்பாக்டர்களை நிர்மாணிக்கும்போது தயாரிப்பாளர்கள் வழங்கிய சேசிஸ் எண்களை அகற்றியதால் வாகனத்தை நிரந்தரப் பதிவு செய்வது மிகவும் தாமதம் ஏற்பட்டது. சேசிஸ் தயாரிப்பாளர்கள் காம்பாக்டர்களை நிர்மாணிக்க வேண்டியதன் பொருட்டு சேசிஸில் உள்ள எண்கள் இருக்கும் பகுதி தவறாக அகற்றப்பட்டதாக தெரிவித்தப்பின்னரே மற்றும் சேசிஸ் தயாரிப்பாளர்கள் தகவல் தெரிவிக்கப்பட்டு

அனுமதி பெற்ற பின்னரே, வட்டார போக்குவரத்து அலுவலகத்தால் வாகனம் **21.11.2014** அன்று நிரந்தர பதிவு செய்யப்பட்டது.

அதன்பிறகு, **27.11.2014** மற்றும் **04.12.2014** அன்றும் ஒப்ப நிபந்தனைகளின்படி வாகனத்தின் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் (Hardness) பரிசோதனை செய்வதற்கு NABL–ஆல் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பரிசோதனை கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டது. பரிசோதனையில் காம்பேக்டரின் Tail Gate Assembly மற்றும் Ejector ஆகிய பகுதிகளில் ஒப்ப நிபந்தனைகளின்படி உபயோகப்படுத்தப்பட்ட பொருட்களின் (Hardness) இல்லை என கண்டறியப்பட்டது. மற்றும் வாகனத்தில் பொருத்தப்பட்ட டயர்கள் ஒப்ப விதிகளின்படி MRF / APPOLO / CEAT Make இல்லையென கண்டறியப்பட்டது. . இதன் அடிப்படையில் **6** நபர் கொண்ட குழு அதன் அறிக்கையில் **08.12.2014** அன்று சமர்ப்பித்தார்கள். மற்றும் இவ்வாகனத்தை களப் பணியில் ஈடுபடுத்தி ஆய்வு மேற்கொள்ள மண்டலம்–12ல் துப்புரவு பணிக்காக **07.12.2014** மற்றும் **19.12.2014** அன்று களப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதன் செயல்திறன் சிறு குறைபாடுகளை தவிர்த்து திருப்திகரமாக இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திருவாளர்கள் காம் அவிடா நிறுவனத்திற்கு வாகனத்தில் கண்டறியப்பட்டுள்ள பெருங்குறைபாடுகளை தெரிவித்து இந்நிறுவனத்தின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது குறித்து விளக்கம் தருமாறு தெரிவித்துக் கடிதம் அனுப்பப்பட்டது.

இது சம்பந்தமாக மேற்கண்ட நிறுவனம் அளித்துள்ள விளக்கத்தில் ஒப்ப நிபந்தனைகளின்படி காம்பேக்டர்களின் Tail Gate Assembly–ல் பொருத்தப்பட்ட பொருட்கள் Nippon Steel and Sumitomo Metal Corporation அவர்களிடமிருந்து பெறப்பட்டதாகவும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி குறைபாட்டினை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மற்றும் மாதிரி வாகனத்தில் ஒப்ப நிபந்தனைகளின்படி Tail Gate Assembly –யை புதியதாக பொறுத்துவதற்கும் மற்றும் மீதமுள்ள **49** காம்பேக்டர் வாகனங்களுக்கும் ஒப்ப நிபந்தனைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் வாகன நிரந்தர பதிவின்போது ஏற்பட்ட மிகையான காலதாமதத்திற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், சேசிஸ் தயாரிப்பாளர்கள் அனுமதிபடியே சேசிஸ் நம்பர் காம்பேக்டர் பொருத்துவதற்காக அகற்றப்பட்டு மறுபடியும் பொறுத்தப்பட்டது எனவும் இதை RTO–க்கு தெரிவித்து முதல் வாகனம் பதிவு செய்யப்பட்டதாகவும், மீதமுள்ள **49** வாகனங்களுக்கு இவ்வண்ணம் ஏற்படாததற்கு தேவையான நடவடிக்கை சேசிஸ் தயாரிப்பாளர்களான டாடா நிறுவனத்திடம் தெரிவித்துள்ளதாகவும், தற்போது வாகனத்தின் தேவையான பல பொருட்கள் இருப்பு வைத்திருப்பதாகவும், இதனால் நிதி முடக்கம் ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டு, மிகவும் பாதித்து உள்ளதாகவும், இவ் அனைத்துமே BS-IV வாகனத்தின் பாதுகாப்பு கருதியே செய்யப்பட்டதாகவும் மற்றும், இக்கால தாமதம் எதிர்பாராதது மற்றும் தங்கள் கட்டுப்பாட்டில் இல்லையெனவும், மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில் ஏற்று கால நீடிப்பு வழங்கவும் மற்றும் **49** வாகனத்தை வழங்க மாற்றி அமைக்கப்பட்ட கால அட்டவணை அளிக்குமாறும் கேட்டுள்ளனர்.

மேலும் திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் தங்களது **07.01.2015** நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி **13.12.2014** நாளிட்ட கடிதத்தில் டயர்கள் குறித்து தெரிவிக்கப்பட்டதற்கு சேசிஸ் தயாரிப்பாளர்களிடமிருந்து விளக்கம் பெற்றதாகவும் இதுகுறித்து டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தார் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருவாளர்கள். டாடா மோட்டார்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் நாளொன்றுக்கு சுமார் **200**க்கு மேற்பட்ட சேசிஸ்களை தயாரிப்பதாகவும் அவர்களால் குறிப்பிட்ட வாகனங்களுக்கு குறிப்பிட்ட டயர் விற்பனையாளர்களை பொருத்த இயலாது எனவும், டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தார் JIT முறையை பின்பற்றுவதால் குறிப்பிட்ட மாடல் டயர்களுக்கென உற்பத்தியை நிறுத்த இயலாது எனவும், டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தாரால் பொறுத்தப்படும் டயர்கள் டாடா மோட்டார்ஸ் தரக்கட்டுப்பாட்டு பிரிவினர்களால் சான்று பெற்ற பின்னரே பொறுத்தப்படுவதாகவும் அவை சிறந்த தரம் உறுதித்தன்மை உடையது எனவும், எனவே ஒப்பத்தில் தெரிவித்துள்ளதை (MRF / APOLLO/ Ceat Make Tyre only) என்பதை மாற்றி அல்லது இணையான டயர்கள் என்பதை இணைத்து அனுமதி வழங்குமாறும் தெரிவித்துள்ளனர்.

திருவாளர்கள். டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தார் டயர்கள் குறித்து அளித்துள்ள விளக்கம் ஏற்படையுதாக உள்ளதால் டயர்கள் குறித்து அளிக்கப்பட்டுள்ள ஒப்ப நிபந்தனைகளை தளர்வு செய்யலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள். காம் அவிடா என்விரோ நிறுவனத்தார் வாகனம் குறித்து அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை என கருதப்படுகிறது. ஒப்ப நிபந்தனைகளை முறையாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் தான் காம்பேக்டர் வாகனம் தயாரிப்பதில் குறைபாடு மற்றும் நிரந்தரப்பதிவு மேற்கொள்ளும்போது மிகையான காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் சேசிஸ் தயாரிப்பாளர்கள் தான் காலதாமதத்திற்கு பொறுப்பு என கூறுவது ஒப்ப விதிகளின்படி ஏற்படையதாக இல்லை. இக்கால தாமதத்திற்கு ஒப்ப விதிகளின்படி திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரே பொறுப்பாகும்.

தற்போது சென்னை மாநகராட்சியில் **2008** முதல் இதுநாள் வரை கொள்முதல் செய்யப்பட்ட **161** காம்பேக்டர் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. தொடர்ச்சியாக வாகனங்கள் துப்புரவு பணிக்கு ஈடுபடுத்துவதாலும், வாகனத்தின் உயர் தொழில் நுட்பம் காரணமாக பழுதுநீக்க கால அளவு மிகையாக உள்ளதாகவும் தற்போது இவ்வகை வாகனங்கள் சுமார் **6** ஆண்டுகள் பயன்படுத்திய நிலையிலும், இதன் காரணமாக வாகனதகுதி சான்றிதழ் புதுப்பித்தல் பணியில் அதிகமாக தேக்கம் ஏற்பட்ட நிலையிலும், இவ்வகை வாகனங்கள் வாடகைக்கு இந்தியாவில் எந்த ஒரு நிறுவனமும் தர முன் வராததாலும் இவ்வகை வாகனங்கள் தற்போது சென்னை மாநகராட்சிக்கு உடனடியாக தேவை என்பது மிகவும் அவசியமானது.

திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை என்றாலும் மறு ஒப்பம் கோரும் பட்சத்தில் ஒரு வாகனத்திற்கு தோராயமாக ரூ. **3.00** இலட்சம் வீதம் **50** வாகனத்திற்கு ரூ.**1,50,00,000/–** கூடுதல் செலவாகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, தற்போது சென்னை மாநகராட்சிக்கு இவ்வகை வாகனங்கள் உடனடி தேவை என்பதால் இதன் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், மறு ஒப்பம் கோரும் பட்சத்தில் ஏற்படும் நிதி இழப்பீடு மற்றும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்ட காரணங்களை கொண்டும், துப்புரவு பணி பாதிக்காத வண்ணம் மேற்கண்ட நிறுவனத்திற்கு **(31.03.2015** வரை) கால நீடிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேலும், திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை களைந்து அதாவது Tailgate பகுதியை முற்றிலுமாக மாற்றம் செய்து வழங்கும்பட்சத்தில் இந்நிறுவனம் வழங்கியுள்ள மாதிரி வாகனம் TN 04 AP 2876 –யை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் தனது **20.01.2015** நாளிட்ட கடிதத்தில் தற்போது **9** எண்ணிக்கை சேசிஸ் டாடா நிறுவனத்தாரிடம், சென்னை மாநகராட்சி ஆணையர் பதவி பெயரில் அளித்த விலைப்பட்டி தீர்வு செய்து தருமாறும், மீதமுள்ள சேசிஸ்கள் பிப்ரவரி**–2015**ல் **20** எண்ணிக்கையும் மற்றும் மார்ச் **–2015** முதல் வாரத்திற்குள்**20** எண்ணிக்கையும் சேர்த்து மொத்தம் **49** சேசிஸ்களையும் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில்,

1. திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் வழங்கியுள்ள மாதிரி வாகனத்தை ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் (i.e.) Tailgate பகுதியை முற்றிலுமாக மாற்றியும், வழங்கும் பட்சத்தில் ஏற்கவும்,
2. திருவாளர்கள். டாடா மோட்டாஸ் நிறுவனத்தார் டயர்கள் குறித்து அளித்துள்ள விளக்கங்களை ஏற்று ஒப்பத்தில் தெரிவித்துள்ளதை (MRF / APOLLO/ Ceat Make Tyre only ) என்பதை மாற்றி அல்லது இணையான டயர்கள் இணைத்து வழங்க அனுமதியும்,

3. திருவாளர்கள். காம் அவிடா என்விரோ என்ஜினியர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் அளித்துள்ள விளக்கம் திருப்திகரமாக இல்லை என்றாலும் தற்போது சென்னை மாநகராட்சிக்கு இவ்வகை வாகனங்கள் உடனடி தேவையை அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், மறு ஒப்பம் கோரப்பட்டு ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் மேற்குறிப்பிட்ட காரணங்களை கொண்டும், துப்புரவு பணி பாதிக்காத வண்ணம் மேற்கண்ட நிறுவனத்திற்கு (31.03.2015 வரை) கால நீடிப்பு வழங்கவும்,
4. கால நீடிப்பு வழங்கிய பின்னரும் குறித்த காலத்திற்குள் இந்நிறுவனம் வாகனங்களை வழங்கும் தவறும் பட்சத்தில் முன்னறிவிப்பு ஏதுமின்றி இவ்வொப்பத்தை ரத்து செய்யவும்,
5. இந்நிறுவனத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.25/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.31/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.அ1/1011/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.43/2015 **பொருள் எண்.43**

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளியில் மார்ச்/ஏப்ரல் 2014–ம் ஆண்டு 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு ஆண்டு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு கற்றல் திறன் சிறக்கும் வகையில் மாநகராட்சி அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப்பரிசை உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதி**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் கற்றல் திறன் சிறக்கும் வகையில் தொடர்ந்து கல்வியில் கவனம் செலுத்தும் நோக்கத்தோடும், உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காகவும், இதர கல்வி செலவினங்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்ற நோக்கத்துடன் ஆண்டு தோறும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, 2013–ஆம் ஆண்டில் 10–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களில் சென்னை மாநகராட்சி அளவில் முதல் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.3,000/–ம், இரண்டாம் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.2,500/–ம், மூன்றாம் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.2,000/–ம் ரொக்கப் பரிசாக வழங்கிய தொகையினை மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 2014–ம் ஆண்டில் இத்தொகையினை 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களில் சென்னை மாநகராட்சி அளவில் முதல் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.10,000/–ம், இரண்டாம் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.9,000/–ம், மூன்றாம் இடம் பெற்ற மாணவ/மாணவியருக்கு தலா ரூ.8,000/–ம் ரொக்கப் பரிசு தொகையினை உயர்த்தி வழங்குவதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(கல்வி) வின் கூட்டம் 13.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.04/2015ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.21/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2521/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.44/2015 **பொருள் எண்.44**

**மழைநீர் வடிகால் துறை–தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் அடையார் மற்றும் கூவம் நீர்பிடிப்புப் பகுதிகளில் மழைநீர் வடிகால் திட்டங்களை செயல்படுத்துதல்– ஆக்ரமிப்பாளர்களை மறு குடியமர்வு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள இறுதி வரைவு செயல் திட்டத்திற்கு அனுமதி**

உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள அடையார் மற்றும் கூவம் நீர்பிடிப்புப் பகுதிகளில் மழைநீர் வடிகால் திட்டங்களை தமிழ் நாடு நீடித்த நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்த சென்னை மாநகராட்சியினால் அந்த நதிக்கரையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை மறுகுடியமர்வு செய்ய இறுதி வரைவு மறுகுடியமர்வு செயல் திட்டம்(Resettlement Action Plan) ஒன்றினை சென்னை மாநகராட்சி தயாரித்து உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பியது.

அதன்மீது உலக வங்கி சில மாற்றங்களை பரிந்துரைத்தது. அந்த மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு உரிய முறையில் வரைவு மறுகுடியமர்வு செயல்திட்டம் திருத்தப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டதில் உலக வங்கி சில கருத்துரைகளுடன் இறுதி மறுகுடியமர்வு செயல் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு அறிக்கைகளுக்கு தங்களது இசைவினை தெரிவித்துள்ளது.

இந்த மறு குடியமர்வு செயல்திட்டத்தின் குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

- இந்த திட்டத்தினால் ஏற்படும் அனைத்து பாதிப்புகளுக்கும் மீட்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- திட்டப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் அவர்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக்கொள்ளவும் மற்றும் வீடு மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவைகளை பெறவும், உதவி மற்றும் ஆதரவினை அளிக்க வேண்டும்.
- புனர்வாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கு உரிமைபடைத்த அனைத்து குடும்பங்களுக்கும் அவர்களுக்கு ஏற்பட்ட சொத்துகள் மற்றும் வாழ்வாதாரம்/உறைவிடம் இவைகளில் ஏற்படும் இழப்புகளுக்கு இழப்பீடு பெறும் உரிமைகளை நிலைநாட்ட உதவி செய்ய வேண்டும். மேலும் மறுகுடியமர்வு செய்யப்பட்ட பிறகு நீடித்த நிலையான வாழ்க்கையினை நடத்த உதவி செய்ய வேண்டும்.
- திட்டத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து சொத்துரிமை மற்றும் சொத்துரிமையற்ற அனைவரும், தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்புற மேம்பாடு திட்டம் (TNSUDP) மற்றும் சுற்றுசூழல் மற்றும் சமூக மேலாண்மை விதித்தொகுப்பு (ESMF) ஆகியவைகளின்படி இழப்பீடுகளை பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- திட்டப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படுபவர்கள் திட்டப்பகுதிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பே புனர்வாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உதவிகளை பெறுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும் இந்த மறுகுடியமர்வு உதவிகள் மற்றும் ஆதரவுகள் வழங்கும் மறுகுடியமர்வு செயல் திட்டத்தின் செயலாக்கம், கட்டுமானப்பணிகள் துவங்கப்படுவதற்கு முன்பே முடிக்கப்படுவதற்கு ஒருங்கிணைந்த ஆதரவு அளிக்க வேண்டும்.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, திட்ட செயலாக்கத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களின் விவரங்கள், கலந்தறிதல் கூட்டத்திற்கு முன்னால் மற்றும் கலந்தறிதல் கூட்டத்திற்கு பிறகு, வரைவு இறுதி மறுகுடியமர்வு செயல் திட்டத்தின்படி கீழ்வருமாறு:

| பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய திட்டப்பகுதிகள் | இறுதியாக்கத்திற்கு முன்னர் | இறுதியாக்கத்திற்கு பிறகு |
|---|---|---|
| நந்தம்பாக்கம் | **38** | **44** |
| அம்பத்தூர் சிட்கோ | **30** | **19**(அனைத்து ஆக்ரமிப்பாளர்களும்) |
| நொளம்பூர் | **83** | **28** |
| பாடிக்குப்பம் கால்வாய் | **316** | **239***(வணிகப்பகுதிகளில் அதிகரித்துள்ளது) |
| திட்டத்தினால் பாதிப்படையும் மொத்த குடும்பங்கள் | **467** | **330** |
| * **50** வணிகப்பகுதிகளில் உள்ளவர்களின் எதிர்ப்பு காரணமாக அவர்களை கணக்கெடுப்பு செய்யமுடியவில்லை. எனினும் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் அடுத்தடுத்த கணக்கெடுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். | | |

அனைத்து ஆக்ரமிப்பாளர்களும்/திட்டத்தினால் பாதிக்கப்படும் குடும்பங்களும்(PAFs) தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியத்தினால் திருமழிசையின் அருகில் உள்ள குடப்பாக்கத்திலும் மற்றும் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் உள்ள எழில்நகரிலும் குடியமர்வு செய்யப்படவுள்ளனர்.

இந்த மறுகுடியமர்வு திட்டம் மேற்பார்வை பொறியாளர்(மழைநீர் வடிகால் துறை), அவர்களால் செயலாக்கப்படும்.

துணை ஆணையர்(பணிகள்), செயலாக்கும் அதிகாரியாக இருப்பார். தலைமை பொறியாளர், மண்டல அலுவலர்கள்/உதவி ஆணையர்கள், மேற்பார்வை பொறியாளர்(மழை நீர் வடிகால் துறை), சமூக மேம்பாடு வல்லுநர் மற்றும் திட்ட மேலாண்மை கலந்தறிவாளர் ஆகியவர்கள் துணை ஆணையர்(பணிகள்) அவர்களுக்கு உதவி செய்வார்.

இந்த மறுகுடியமர்வு திட்டத்தை செயலாக்க ரூ.**24.05** கோடி செலவாகும். இதனை சென்னை மாநகராட்சி மேற்கொள்ளும். இந்த செலவினம் இந்த திட்டத்தை செயலாக்குவதற்கான மொத்த செலவினத்தில் சேரும். மேலும் இது நிர்வாக செலவினத்தில் குறிப்பிடப்படும். எனினும், மறுகுடியமர்வு செய்யப்படவுள்ள குடியிருப்புகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத்தில் கட்டப்படுவதால் பயனாளிகள் குடியிருப்புகளின் செலவினத்தில் **10** சதவிகிதம் மட்டும் குடிசை மாற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டும். இந்த செலவினத்தை சென்னை மாநகராட்சி ஏற்க வேண்டும்.

இது குறித்து இங்கு சமர்ப்பிக்கப்படுவதாவது, சென்னை மாநகராட்சி சுற்றுச்சூழல் மதிப்பீடு அறிக்கை ஒன்றினையும் இந்த ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளை அடையார் மற்றும் கூவம் நீர்பிடிப்பு பகுதிகளில் செயலாக்க, தயாரித்துள்ளது. இது தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம்(Taminadu Urban Infrastructure Financial Services Limited) மூலம் உலக வங்கிக்கு அனுப்பப்படவுள்ளது. இதன்படி கட்டுமானகாலத்திலும் மற்றும் இயக்க காலத்திலும் இந்த திட்டத்தை செயலாக்கும் போது செயல்படுத்த ஒரு சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்( Environment Management Plan) ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை செயலாக்க ரூ.**80.50** இலட்சம் செலவாகும்.

இந்த ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டங்களை அடையார் மற்றும் கூவம் நீர்பிடிப்புப்பகுதிகளில் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பகுதிகளில், உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்பற நீடித்த நிலையான திட்டத்தின் கீழ் செயலாக்க, நீர்வழிக்கால்வாய்களில் ஆக்ரமித்துள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மறுகுடியமர்வு செயல் திட்டத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.01.2015 அன்று தீர்மான எண்.26/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 23.01.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 29.01.2015 அன்று தீர்மான எண்.32/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண். D.A.3 /379/ 2015**

**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.45/2015 **பொருள் எண்.45**

**தானப்பத்திரம்**

வார்டுக் குழுத் தீர்மானத்தின்படி மண்டலம்–4, வார்டு–34, பெரம்பூர் வட்டம், சேலவாயல் கிராமம், புல எண். 25/2, 30/1, 31/2, 31/3, 32/4, 30/2 பரப்பளவு 30623.50 ச.மீட்டரில் 90348 ச.மீட்டர் நிலம் தானப் பத்திரம் மூலமாக வழங்குவதற்கும் மேற்படி சாலைகளாக குறியீட்டு காட்டப்பட்டுள்ள இடத்தை தானப் பத்திரம் மூலம் பதிவு செய்து நில உரிமையாளரால் சென்னை மாநகராட்சி வசம் வழங்கப்பட வேண்டும். மேலும் சாலைகளாக குறிப்பிட்ட இடத்தினை மேம்படுத்த ரூ.22.00 இலட்சம் (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சம் மட்டும்) சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்கும் தீர்மானம் அளித்துள்ளது.

மண்டலம்–4 வார்டு–34, பெரம்பூர் வட்டம், சேலவாயல் கிராமம், புல எண். 25/2, 30/1, 31/2, 31/3, 32/4, 30/2 பரப்பளவு 30623.50 ச.மீட்டரில் 90348 ச.மீட்டர் நிலம் தானப்பத்திரம் மூலமாக வழங்குவது தொடர்பாக புலம் 27.1.2015 பார்வையிடப்பட்டு அளவீடு செய்யப்பட்டது.

பெரம்பூர் வட்டம் சேலவாயல் கிராமம் சுகந்தம்மாள் நகர் சர்வே எண். 25/2, 30/1, 31/2, 31/3, 32/4, 30/2 30623.50 ச.மீட்டர் பரப்பளவில் வீட்டு மனை பிரிவு கட்டிட அனுமதி வேண்டி திருவாளர்கள். கணேசன் மற்றும் ஜெயந்தி ஆகியோர் சென்னை மாநகராட்சிக்கு விண்ணப்பம் எண். SD/WDCNo4/00612/2014/ நாள். 14.11.2014–ன்படி செய்துள்ளனர். மனுதாரர்கள் மேற்படி வீட்டு மனை பிரிவு அனுமதி பெற சர்வே எண். 25/2, 30/1, 31/2, 31/3, 32/4, 30/2 பரப்பளவு 30623.50 ச.மீட்டரில் 903.48 ச.மீட்டர் நிலம் தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சிப்பெயரில் பதிவு செய்ய சம்மதித்துள்ளனர்.

பத்திர எண். 3902 மற்றும் 3903/1994–ன் படி பெரம்பூர் வட்டம் சேலவாயல் கிராமம் சுகந்தம்மாள் நகர் சர்வே எண். 25/2, 30/1, 31/2, 31/3, 32/4, 30/2 –ல் 30623.50 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட மனையை சுத்த விக்கிரயபத்திர மூலம் திருவாளர்கள். கணேசன் மற்றும் ராம்குமார் கிரயம் பெற்றுள்ளனர். திரு.ராம்குமார் என்பவர் காலமானதால் அவரது மனைவி திருமதி.ஜெயந்தி என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரி மனு செய்துள்ளார். மேற்படி மனைக்கான நகரநில அளவை பதிவேட்டின் நகல் கோட்டை தண்டையார்பேட்டை வட்டாட்சியரிடமிருந்து பெற்று பெரம்பூர் வட்டாட்சியரால் மேல் ஒப்பம் செய்யப்பட்டுள்ளது. இதன் நகல்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் திரு.கணேசன் மற்றும் திருமதி.ஜெயந்தி என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதிப் பெற இம்மனையில் அமையப்பெற்ற சாலைகளை பராமரிப்பிற்கு சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க சம்மதித்துள்ளனர். மேற்படி புலம் அளவீடு செய்ததில் வீட்டு மனை பகுதியில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் அகலம் 7.2 மீட்டர் என வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலத்தில் 7.4 மீ காணப்படுகிறது. தானப்பத்திரம் மூலம் வழங்கப்படும் சாலைக்கான மொத்த பரப்பளவு 903.48 ச.மீ என வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தினை அளவீடு செய்ததில் மொத்த பரப்பளவு 905.24 ச.மீ ஆக பரப்பளவு உள்ள திறந்தவெளி நிலத்தை தானமாக பெறுவதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் 29.01.2015 அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இAA1/357/2015**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.46/2015 **பொருள் எண்.46**

**சென்னை மாநகராட்சி – நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–15 வார்டு–194 ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி செக்ரட்டரியேட் காலனி திறந்தவெளி நிலத்தில் மேல்நிலை மற்றும் கீழ்நிலை குடிநீர் தொட்டிகள் அமைக்க சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு நிலம் அளிக்க அனுமதி**

தெற்கு வட்டார இணை ஆணையரின் **09.01.2015** நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் மண்டலம்**–15** அவர்கள் செக்ரட்டரியேட் காலனி துரைப்பாக்கம் கிராமம் புல எண்.**404**/ 2பி மற்றும் **404** /2சி –ல் அமைந்துள்ள 97x 88 = **8551** ச.மீ. பரப்பளவு திறந்தவெளி நிலத்தில் **4656** ச.மீ. பரப்பளவு உள்ள நிலத்தை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திற்கு இலவசமாக வழங்கலாம் என்பதற்கு பதிலாக விதிமுறைகளின்படி வழங்கலாமா என தெரிவித்து மண்டல அலுவலரின் **08.01.2015** நாளிட்ட கடிதத்தை இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

**15**வது மண்டல அலுவலரின் குறிப்பில் சென்னை பெரு நகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியம் மேலாண்மை இயக்குநர் அவர்கள், முதன்மை செயலர்/ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பியுள்ள நேர்முக கடிதம் D.O.LR.NO.CMWSSB/ CE111/CMCDM/ Okkiyam Thoraippakkam/Spl/2014 நாள்.**13.12.2014** ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டத்தின்கீழ் குடிநீர் திட்டம் செயல்படுத்த பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தில், இத்திட்டத்தின்கீழ் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் அமைக்கும் பணி கோட்டம்**–193**, ஒக்கியம் துரைப்பாக்கம் சக்தி நகரில் ஆரம்பித்த நிலையில், பணிகள் செயல்படுத்தும் நிலம் சம்பந்தமாக. நீதி மன்ற வழக்கு தொடரப்பட்டதாகவும் அதன் காரணமாக இத்திட்டப்பணி செயல்படுத்த, ஒக்கியம் துரைப்பாக்கம், ஜெயின் கல்லூரி அருகில், துரைப்பாக்கம் கிராமம் புல எண். **430**(பகுதி), **405**/BB (பகுதி) கோட்டம்**–193**, மண்டலம்**–15**ல் **100**மீX40மீ பரப்பளவு நிலம் மற்றும் **280**மீ x10மீ பாதை ஆகியவை தேவைப்படுவதாகவும், இது சம்பந்தமாக சென்னை மாநகராட்சி, மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.**965**, நாள். **11.12.2013**ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களிடம் முன் நுழைவு அனுமதி கோரப்பட்டதில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலம் வேறு பயன்பாட்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கடிதத்தில், செக்ரட்டரியேட் காலனி அலுவலர் சங்கத்தலைவர் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இம்மனை பிரிவில் பூங்கா அமைப்பதற்கான நிலம் இனாம் சாசனம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலம் சென்னை மாநகராட்சிக்கு கட்டுப்பாட்டிலுள்ளதாகவும், இந்நிலத்தில் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதிக்கான குடிநீர் விநியோகத்திட்டம் செயல்படுத்த மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட **48**மீ x **97**மீ = **4656** ச.மீ நிலம் தேவைப்படுவதாலும், பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள முன் நுழைவு அனுமதியும் இக்கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

செக்ரட்டரியேட் காலனி மனை பிரிவில் **680** மனைகளும், பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இரண்டு திறந்தவெளி நிலங்களும் பரப்பளவு **855**ச.மீX**17208**ச.மீ), பொதுப்பயன்பாட்டிற்கான **10** இடங்களும் (பரப்பளவு = **17208** ச.மீ) உள்ள இம்மனைப்பிரிவில், பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இரண்டு திறந்தவெளி நிலங்களில் **97** x **88** = **8551** ச.மீ பரப்பளவுள்ள ஒரு திறந்தவெளி நிலத்தில் ஏற்கனவே பூங்கா அமைக்கப்பட்டு, பக்கத்தில் உள்ள **97** x **88** = **8551** ச.மீ பரப்பளவு திறந்தவெளி நிலம் தற்பொழுது காலியாக உள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப் பேராணை எண். **3643/2002, 24.07.2008** அன்று பிறப்பித்த தீர்ப்பாணையில்

பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் தீர்ப்பாணையின் சாராம்சம் பின்வருமாறு .

The open space in a space in a residential area or in a township is treated as lung space of the area. When open space is preserved and earmark in the plan for development of a planned town the authourities cannot ignore the public interest and allot the same for construction of godowns, thereby causing environmental hazards to the residents of the colony. When an area is earmarked for a particular purpose in the approved layout the said area cannot be converted or used for a different purpose. Open space is an essential feature of modern planning and development, as if greatly contributes to the improvement, of social ecology. The interests of the residenti of the area, who have purchased the plots as per the approved layout, have to be safeguarded and for the benefits of ecology, certain area should be earmarked for garden and park so as to provide fresh air to the residents of that locality as ecological factors indisputably are very relevant consideration in construing a town planning statue.

மேலும், இந்நிலம் பக்கிம்காம்கால்வாயின் ஓரத்தில் அமைந்துள்ளதால் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–11 எல்லைக்குள் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலத்தை தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து. அவர்களால் ஆய்வு கொள்ளப்பட்டதில் மண்டலம்–15, கோட்டம்–194 சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம் புல எண் 404/2பி மற்றும் 404/2சி செக்ரட்டரியேட் காலனி என்ற பெயரில் மனைகள் பிரிக்கப்பட்டு 680 வீடுகள் கட்டடப்பட்டுள்ளதாகவும், மேலும் 97x88=8551ச.மீ. பரப்பில் ஒரு பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாகவும், 97 x 88= 8551 ச.மீ. பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சியின் திறந்த வெளி நிலம் காலியாக உள்ளது எனவும், இந்த நிலம் மேலும் ஒரு பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. செக்ரட்டரியேட் காலனி குடியிருப்புகளுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை எனவும், பட்டா வழங்குவது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் விசாரணையில் தெரிய வருவதாகவும் மேல் நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள நிலமானது தற்போது செக்ரட்டரியேட் காலனி பேருந்துகள் நிறுத்துமிடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை மாநகராட்சியின் திறந்தவெளி நிலங்களில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடாது என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 3643/2002, 24.7.2008–ல் பிறப்பித்த தீர்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திறந்தவெளி நிலத்தில் குடிநீர் வாரியத்தின் மூலம் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைப்பது தொடர்பாக அரசு அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஏற்கனவே திருப்பூர் மாநகராட்சி யுனிவர்சல் தியேட்டர் சாலையையும், வெள்ளி விழா பூங்கா சாலையையும் இணைக்கும் வகையில் சுரங்கப் பாதை அமைக்க வெள்ளி விழா பூங்காவில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க அரசாணை (நிலை) எண் 163, நாள்.19.12.2014 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி மண்டலம்–15 கோட்டம்–194 செக்கரட்டரியேட் காலனி துரைப்பாக்கம் கிராமம், புல எண். 404/2பி மற்றும் 404/2சி–ல் அமைந்துள்ள 97x 88=8551 ச.மீ பரப்பளவு திறந்தவெளி நிலத்தில் 4646 ச.மீ. பரப்பளவு நிலம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு வழங்குவதற்கு உரிய அரசாணை வேண்டி அரசை கேட்டுக்கொள்ள வார்டுகுழுவின் பின்னேற்பு பெறப்படவேண்டும் என்ற அடிப்படையில் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1. சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, கோட்டம்–194 செக்கரேட்டரியேட் காலனி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்த திறந்தவெளி நிலத்தில் மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திற்கு வழங்கும் 4656 ச.மீ. நிலத்திற்கு இணையான பரப்பளவு கொண்ட பொதுப்பயன்பாட்டு நிலம் பூங்கா அமைக்க

செக்கரட்டரியேட் காலனி அலுவலகர் சங்கம் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. இந்நிலம் பூங்கா அமைப்பதற்கு என மனைப்பிரிவு வரைபடத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் கட்டுமானப்பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்பாக சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் நிலப்பயன்பாடு மாற்றம் செய்து அரசாணை பெற வேண்டும்.
3. இந்நிலம் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்–11ல் அமைந்துள்ளதால் கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையின்மைச்சான்று சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தால் பெற்றபிறகே பணி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் 29.01.2015 அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/0139/2015**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.47/2015 **பொருள் எண்.47**

**தானப்பத்திரம்**

திரு. S.N.தியாகராஜன் மற்றும் மூன்று நபர்கள் த/பெ. நடராஜன், புதிய கதவு எண்.13, பழைய கதவு எண்.7, மாதவரம் நெடுஞ்சாலை, வார்டு–44, மண்டலம்–4ல் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்ப எண். PPA/WDCNO4/05597/2014, நாள்: 09.08.2014 மூலம் விண்ணப்பத்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள மனை வருவாய்த் துறை பெரம்பூர்–புரசைவாக்கம் வட்டாட்சியர் அவர்களின் எல்லைக்குட்பட்ட T.S. No.855/42, பிளாக் எண்.46, பெரம்பூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலக நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான வளர்ச்சி திட்ட வரைப்படத்தின் வழிகாட்டுதலின்படி சாலை விரிவாக்கம் கண்டறியப்பட்டு விண்ணப்பதாரரால் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்க சொந்தமான (நீளம் 6.86 x அகலம் 2.51 ஆக மொத்தம் 17.21 சதுர மீட்டர்) நிலத்தினை தானப் பத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வரைவு தானப் பத்திரம் கோரப்பட்டு விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் மனுதாரர் தானப்பத்திரம் இல்லாமல் கட்டிட அனுமதி பெறுவதற்கு ஆணை வேண்டி W.P.No.20769/2014 மூலம் உயர்நீதி மன்றத்தை அணுகி தானப்பத்திரம் பதிவு செய்து நிலத்தை ஒப்படைக்காமல், உறுதி மொழி பத்திரம் மட்டுமே அளித்து கட்டிட அனுமதி பெற வழக்கு தொடர்ந்தார். இதே போன்று மேலும் சில மனுதாரர்களும் வழக்கு தொடர்ந்ததால், அதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டி, சென்னை மாநகராட்சியின் சட்ட குழுமத்தின் மூலம் சென்னை மாநகராட்சியால் மேல் முறையீடு செய்ததில் உயர்நீதிமன்றத்தால் 20.11.2014 அன்று செயல் உறுத்து கட்டளை எண். 20769, 23125, 29448, 29449, 24826 & 30037 of 2014 and M.P.Nos. 1 of 2014. நிரந்தர தீர்வுக்கான ஆணை வழங்கப்பட்டது. மேற்படி உயர்நீதிமன்றத்தின் ஆணைப்படி மனுதாரர் இந்த தீர்ப்பின் நகல் பெற்ற ஒரு வாரத்திற்குள் சென்னை மாநகராட்சிக்கு தானப் பத்திர நகல்களை சமர்ப்பிக்குமாறும், அவ்வாறு சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி பிரிவில் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பின் ஒரு வார காலத்திற்குள் தானப் பத்திரம் முன்வரைவை, சென்னை மாநகராட்சி ஒப்புதல் அளிக்க வேண்டும் எனவும், அவ்வாறு ஒப்புதல் அளித்த பின், மனுதாரரால் தானப் பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் பதிவு செய்யப்பட்டவுடன் நான்கு வார கால கெடுவிற்குள் சென்னை மாநகராட்சி மனுதாரருக்கு திட்ட மற்றும் கட்டிட அனமதி வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்சொன்ன உயர்நீதிமன்ற ஆணைப்படி, மனதாரரிடம் கட்டிட அனுமதிக்கான விண்ணப்பம் தானப் பத்திர முன்வரைவு நகலுடன் பெறப்பட்டது. நீதிமன்ற ஆணைப்படி ஒரு வார கால கெடுவிற்கள் தானப் பத்திர ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள ஏற்கனவே 4–வது வார்டுக் குழுவின் பரிந்துரை தீர்மான எண்.557/2014 பெறப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 28.01.2015 நாளிட்ட புலத்தணிக்கை அறிக்கையில் சாலை விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்படும் 6.86 மீட்டர் நீளம் மற்றும் 2.51 மீட்டர் அகலம் கொண்ட நிலம் புலத்தில் காலியாக உள்ளது என்றும் விண்ணப்பதாரர்கள் தானப்பத்திரம் மூலமாக 17.21 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்து கொடுக்க நீதிமன்ற உத்தரவின்படி சம்மதித்து மனு செய்துள்ளதால் மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்படும் 17.21 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்த பின்னர் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,

1. புதிய கதவு எண்.13, பழைய கதவு எண்.7, மண்டலம்–4, வார்டு–44, மாதவரம் நெடுஞ் சாலையில் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக அமைந்துள்ள மனை வருவாய்த் துறை பெரம்பூர்–புரசைவாக்கம் வட்டாட்சியர் அவர்களின் எல்லைக்கடபட்ட T.S.No.855/42, பிளாக் எண்.46, பெரம்பூர் கிராமத்தில் அமைந்துள்ளது. விண்ணப்பதாரரிடம் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்கு சொந்தமான (நீளம் 6.86 x அகலம் 2.51 ஆக மொத்தம் 17.21 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.40,000/– (ரூபாய் நாற்தாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' (Development Rights Certificate) சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் 29.01.2015 அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ.DA-1/0137/2015**
**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**48/2015** **பொருள் எண்.48**

**தானபத்திரம்**

திரு. S.N.தியாகராஜன் மற்றும் மூன்று நபர்கள் த/பெ. நடராஜன், புதிய கதவு எண்.**8**, பழைய கதவு எண்.**5**, மாதவரம் நெடுஞ்சாலை, வார்டு–**44**, மண்டலம்–**4**ல் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்ப எண். PPA/WDCNO4/05598/2014, நாள்: **09.08.2014** மூலம் விண்ணப்பத்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள மனை வருவாய்த் துறை பெரம்பூர்–புரசைவாக்கம் வட்டாட்சியர் அவர்களின் எல்லைக்குட்பட்ட T.S. No.**855/3**, பிளாக் எண்.**46**, பெரம்பூர் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலக நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான வளர்ச்சி திட்ட வரைப்படத்தின் வழிகாட்டுதலின்படி சாலை விரிவாக்கம் கண்டறியப்பட்டு விண்ணப்பதாரரால் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்க சொந்தமான (நீளம் **6.86** x அகலம் **8.69** ஆக மொத்தம் **59.61** சதுர மீட்டர்) நிலத்தினை தானப் பத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வரைவு தானப் பத்திரம் கோரப்பட்டு விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதற்கிடையில் மனுதாரர் தானப்பத்திரம் இல்லாமல் கட்டிட அனுமதி பெறுவதற்கு ஆணை வேண்டி W.P.No.20769/2014 மூலம் உயர்நீதி மன்றத்தை அணுகி தானப்பத்திரம் பதிவு செய்து நிலத்தை ஒப்படைக்காமல், உறுதி மொழி பத்திரம் மட்டுமே அளித்து கட்டிட அனுமதி பெற வழக்கு தொடர்ந்தார். இதே போன்று மேலும் சில மனுதாரர்களும் வழக்கு தொடர்ந்ததால், அதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டி, சென்னை மாநகராட்சியின் சட்ட குழுமத்தின் மூலம் சென்னை மாநகராட்சியால் மேல் முறையீடு செய்ததில் உயர்நீதிமன்றத்தால் **20.11.2014** அன்று செயல் உறுத்து கட்டளை எண். **20769, 23125, 29448, 29449, 24826 & 30037** of **2014** and M.P.Nos, **1** of **2014.** நிரந்தர தீர்வுக்கான ஆணை வழங்கப்பட்டது. மேற்படி உயர்நீதிமன்றத்தின் ஆணைப்படி மனுதாரர் இந்த தீர்ப்பின் நகல் பெற்ற ஒரு வாரத்திற்குள் சென்னை மாநகராட்சிக்கு தானப் பத்திர நகல்களை சமர்ப்பிக்குமாறும், அவ்வாறு சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி பிரிவில் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பின் ஒரு வார காலத்திற்குள் தானப் பத்திரம் முன்வரைவை, சென்னை மாநகராட்சி ஒப்புதல் அளிக்க வேண்டும் எனவும், அவ்வாறு ஒப்புதல் அளித்த பின், மனுதாரரால் தானப் பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் பதிவு செய்யப்பட்டவுடன் நான்கு வார கால கெடுவிற்கள் சென்னை மாநகராட்சி மனுதாரருக்கு திட்ட மற்றும் கட்டிட அனமதி வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்சொன்ன உயர்நீதிமன்ற ஆணைப்படி, மனதாரரிடம் கட்டிட அனுமதிக்கான விண்ணப்பம் தானப் பத்திர முன்வரைவு நகலுடன் பெறப்பட்டது. நீதிமன்ற ஆணைப்படி ஒரு வார கால கெடுவிற்கள் தானப் பத்திர ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள ஏற்கனவே **4**–வது வார்டுக் குழுவின் பரிந்துரை தீர்மான எண்.**556** பெறப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியர்/நிமஉது–வின் களஆய்வறிக்கையில் சாலை விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட **6.86** மீட்டர் நீளம் மற்றும் **8.69** மீட்டர் அகலம் கொண்ட நிலம் புலத்தில் காலியாக உள்ளது என்றும், விண்ணப்பதாரர் தானப்பத்திரம் மூலமாக **59.61** ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்து கொடுக்க நீதிமன்ற உத்தரவின்படி சம்மதித்துள்ளதால் மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்படும் **59.61** ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்த பின்னர் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,

1. புதிய கதவு எண்.8, பழைய கதவு எண்.5, மண்டலம்–4, வார்டு–44, மாதவரம் நெடுஞ் சாலையில் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக அமைந்துள்ள மனை வருவாய்த் துறை பெரம்பூர்–புரசைவாக்கம் வட்டாட்சியர் அவர்களின் எல்லைக்கடபட்டT.S. No.855/3, பிளாக் எண்.46, பெரம்பூர் கிராமத்தில் அமைந்துள்ளது. விண்ணப்பதாரரிடம் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்கு சொந்தமான (நீளம் 6.86 x அகலம் 8.69 ஆக மொத்தம் 59.61 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு “வளர்ச்சி உரிமை சான்றிதழ்” (Development Rights Certificate) சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் 29.01.2015 அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.DA-1/138/2015**

**முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.49/2015 பொருள் எண்.49

**தானபத்திரம்**

திரு. கெ. ராஜசேகர் & ஆர்.ஜானகி த.பெ.வி.குப்புசாமி, புதிய கதவு எண்.104, பழைய கதவு எண்.125, சாமி நாயக்கன் சாலையில், வார்டு–62 மண்டலம்–5ல் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்ப எண். PPA/WDCNO5/05284/2014, நாள்.30.07.2014 மூலம் விண்ணப்பத்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பித்தாரர் விண்ணப்பித்துள்ள மனை வருவாய்த்துறை மயிலாப்பூர் வட்டாச்சியர் அவர்களின் எல்லைக்குட்பட்ட R.S.No.717/2, பிளாக் எண்.13, சிந்தாதரிப்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலக நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விரிவான வளர்ச்சி திட்ட வரைபடத்தின் வழிகாட்டுதலின்படி சாலை விரிவாக்கம் கண்டறியப்பட்டு விண்ணப்பதாரரால் கட்டிட வரைப்படத்தின் வழிகாட்டுதலின்படி சாலை விரிவாக்கம் கண்டறியப்பட்டு விண்ணப்பதாரால் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மனைக்கு செல்லும் பொதுவழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாரருக்கு சொந்தமான (நீளம் 1.55, அகலம் 1.80 ஆக மொத்தம் 2.79 சதுர மீட்டர்) நிலத்தின் தானப்பத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வரைவு தான பத்திரம் கோரப்பட்டு விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. நீண்ட நாட்கள் நிலுவையில் வைக்க இயலாத காரணத்தினாலும், கடிதத்தின் மூலம் மனதாரரிடம் கோரப்பட்ட வரைவு தானப்பத்திரம் மனதாரரால் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினாலும் மேற்படி கட்டிட அனுமதி விண்ணப்பம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில் மனுதாரர் தானப்பத்திரம் இல்லாமல் கட்டிட அனுமதி பெறுவதற்கு ஆணை வேண்டி W.P.No.20769/2014 மூலம் நகரமைப்பு பிரிவு அலுவலருக்கு எந்தவித அறிவிப்பும் தெரிவிக்காமல் உயர்நீதி மன்றத்தை அனுமதி தானப்பத்திரம் பதிவு செய்து நிலத்தை ஒப்படைக்காமல், உறுதி மொழி பத்திரம் மட்டுமே அளித்து கட்டிட அனுமதி பெற வழக்கு தொடர்ந்தார். இதே போன்று மேலும் சில மனதாரர்களும் வழக்கு தொடர்ந்ததால், அதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டி, சென்னை மாநராட்சியின் சட்ட குழுமத்தின் மூலம் சென்னை மாநகராட்சியால் மேல் முறையீடு செய்ததில் உயர்நீதிமன்றத்தால் 20.11.2014 அன்று செயல்உறுத்து கட்டளை எண்.20769, 23125, 29448, 29449, 24826 & 30037 of 2014 and M.P.Nos. 1 of 2014 நிரந்தர தீர்வுக்கான ஆணை வழங்கப்பட்டது. இதற்கிடையில் மேற்கண்ட கட்டிட விண்ணப்பம் PPA/WDCNO5/05284/2014, நாள்.30.07.2014, மேற்படி உயர்நீதி மன்றத்தின் ஆணைப்படி மனுதாரர் இந்த தீர்ப்பின் நகல் பெற்ற ஒரு வாரத்திற்குள் சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திர நகல்களை சமர்ப்பிக்குமாறு, அவ்வாறு சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி பிரிவில் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பின் ஒரு வார காலத்திற்குள் தானப்பத்திரம் முன் வரைவை, சென்னை மாநகராட்சி ஒப்புதல் அளிக்க வேண்டும் எனவும், அவ்வாறு ஒப்புதல் அளித்தபின், மனுதாரரால் தானப்பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் பதிவு செய்யப்பட்டவுடன் நான்கு வாரகால கெடுவிற்குள் சென்னை மாநகராட்சி மனுதாரருக்கு திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்சொன்ன உயர்நீதி மன்ற ஆணைப்படி, மனுதாரரரிடம் புதிதாக கட்டிட அனுமதிக்கான விண்ணப்பம் தானப்பத்திர முன்வரைவு நகலுடன் பெறப்பட்டது. நீதிமன்ற ஆணைப்படி ஒருவாரகால கெடுவிற்குள் தானப்பத்திர ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள ஏற்கனவே 5வது வார்டு குழுவின் பரிந்துரை தீர்மான எண்.302/14 பெறப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியரின் கள ஆய்வு அறிக்கையில் சாலை விரிவாக்கத்திற்காக மனுதாரரிடமிருந்து 1.80 மீட்டர் அகலம் 1.55 மீட்டர் நீளம் கொண்ட நிலத்தினை தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெயருக்கு பதிவு செய்யப்பட வேண்டும். சாலை விரிவாக்கத்திற்கு 1.55 மீட்டர் நீளம் மற்றும் 1.08 மீட்டர் அகலம் கொண்ட நிலம் புலத்தில் காலியாக உள்ளது. மனுதாரர்கள் தானப்பத்திரம் மூலமாக 2.79 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை

மாநகராட்சி பெயரில் பதிவு செய்து கொடுக்க நீதிமன்ற உத்தரவின்படி சம்மதித்து மனு செய்துள்ளார். எனவே மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்படும் **2.79** ச.மீட்டர் பரப்பளவு கொண்ட நிலத்தை சென்னை மாநகராட்சி பெயரில் பதிவு செய்த பின்னர் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என குறிப்பிட்டுள்ளார்.

எனவே,

1. புதிய கதவு எண்.**104**, பழைய கதவு எண்.**125**, மண்டலம்–**5** வார்டு–**62** சாமி நாயக்கன் சாலையில் உள்ள மனையில் கட்டிடம் கட்டுவதற்காக அமைந்துள்ள மனை வருவாய்த்துறை மயிலாப்பூர் வட்டாட்சியர் அவர்களின் எல்லைக்குட்பட்ட R.S.No.717/2, பிளாக் எண்.**13**, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. விண்ணப்பதாரரிடம் கட்டிட அனுமதிக்காக கோரப்பட்ட மணைக்கு செல்லும் பொது வழி மேற்கண்ட சாலை விரிவாக்கத்தின் கீழ் வருவதால் மனுதாருக்கு சொந்தமான (நீளம் **1.55**, அகலம் **1.80** ஆக மொத்தம் **2.79** சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்.
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.**25,000/–** (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்.
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமை சான்றிதழ்’’ (Develoment Rights Certificate) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் **29.01.2015** அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.L.E.A.A-1 /25/ 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.01.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.50/2015 **பொருள் எண்.50**

**மண்டலம் – 14, சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி கிராமம் – புல எண் 225/1, பகுதி – மேய்க்கால் வகைப்பாடு கொண்டுள்ள 3.82.0 எக்டேர் பரப்பளவு கொண்ட மொத்த பரப்பில் 1.09.5 எக்டேர் பரப்பளவு நிலம் – பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிலமாற்றம் செய்ய தடையின்மை சான்று வழங்குவதற்கு அனுமதி**

மண்டலம்–14, சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி கிராமம், புல எண் 225/1, பகுதி மேய்க்கால் வகைப்பாடு கொண்டுள்ள 3.82.0 எக்டேர் பரப்பளவு கொண்ட மொத்த பரப்பில் 1.09.5 எக்டேர் பரப்பளவு நிலத்தை பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளி அமைக்க உயர் கல்வி துறைக்கு நில மாற்றம் செய்ய இசைவு தெரிவித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் காஞ்சிபுர மாவட்ட ஆட்சியரின் கடித ந.கஎண். 4412/2012/எண் 2 நாள் 4.3.2014ன் மூலமாக கூடுதல் தலைமைச் செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நில நிர்வாக கூடுதல் தலைமை செயலரின் கடித ந.க.எண்.பி1/280/2014 நாள் 24.12.2014 கடிதத்தில் மேற்படி நிலத்தை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக. சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் / ஆணையரின் கருத்துரு கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்ட வருவாய் அலுவலர்/நி.ம.உது. அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி புல எண் 225/1 பகுதி, மேய்க்கால் வகைப்பாடுகொண்டுள்ளதாலும், மேலும் இந்நிலமானது அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்து பள்ளியின் உபயோகத்தில் இருந்து வருவதால் இந்நிலத்திற்கு தடையின்மைச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–14, சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி கிராமம், புல எண் 225/1 பகுதி மேய்க்கால் வகைப்பாடு கொண்டுள்ள 3.82.0 எக்டேர் பரப்பளவு கொண்ட மொத்த பரப்பில் 1.09.5 எக்டேர் பரப்பளவு நிலத்தை பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிலமாற்றம் செய்ய சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இம்மாத நிலைக்குழுக்கள் கூட்டம் முடிவடைந்த நிலையில் 29.01.2015 அன்று கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதால், இப்பொருளின் அவசர அவசியம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******